நமோ புத்தாய

மணிவாசக நூல் நிலையம்
ஆரம்பம்: 193

பு. வ. 2482. கி. வ. 1938.

Jinaraja Wansaya.

ஸ்ரீ புத்தர் புராணம்.

இந்நூல்
புத்தமத போதகர்,

திரு. கே. கோவிந்தசாமி பிள்ளை

அவர்களால்

பாளி, சிங்கள பாஷைகளிலிருந்து தமிழில்
மொழி பெயர்த்து

இயாழ்ப்பாணம் வல்வை நகர்
உயர் திரு. மூ. க. மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை
அவர்களால்
பரிசோதிக்கப்பெற்றது.

கண்டி (சிலோன்) பேலின் அன் கம்பனியில் அச்சிடப்பெற்றது.

வாசக நூல்
193

ஸ்ரீ கௌதம புத்தபெருமான்.

வணக்கம்.

நமோ நமோ புத்த திவா கறுய
நமோ நமோ கோத்தம சந்திமாய
நமோ நமோ நந்த குணண்ணவாய
நமோ நமோ ஸாக்கிய நந்தனய.

பாளி, சமஸ்கிரதம், தமிழ், சிங்களம் ஆகிய பாஷைகளில்

— நிபுணர் —

கெ. கோவிந்தசாமி பிள்ளை.

போதகர்.

PUBLISHERS NOTE.

We have the greatest pleasure in placing this Volume in the hands of the Public. In doing so, we beg to express our sense of gratitude to the *Buddhist Preacher Mr. K. Govindasamy Pillai*, for the excellent reading so kindly written out by him for this use and benifit of General Public in a permanent form and indicate an Illustrious Voluminous Gathering for readers and such work makes our debts of gratitude dowly heavy, It is a matter for congratulation that Mr. Govindasamy Pillay's kindness has been secured in this respect.

K. P. SAMY, *Astrologer.*

திருவருள் முன்னிற்க.

பாளி, சிங்களம் என்னும் பாஷைகளில் நன்கு கலைபயின்று தற்போது இவ்விலங்கைத்தீவின் பல பாகங்களிலும் புத்த மதத்தை விளக்கிப் போதித்துவரும் ஸ்ரீமான் கே. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் "ஸ்ரீ புத்தர் புராணம்" என்னும் நாமம்வாய்ந்த இப் புராணத்தை பாளி, சிங்கள பாஷைகளிலிருந்து தமிழில் வெகு அற்புதமாகவும், பாஷை நடை மிகவும் தெள்ளிதாய் மொழி பெயர்த்திருப்பதை யான் வாசித்தளவில் யென்னுள்ளத்தை அதிகங் கவர்ந்துவிட்டது.

தாமின்புறுவர் உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

என்னும் வாக்கிற்கிணங்க பெரும் பேரின்பப் பேறுகளைப் பயக்கக்கூடிய எங்கள் இந்து சமய புராணங்களைப்போல் இப் புராணத்தையும் யாவரும் நன்குவாசித்துணர்ந் தின்புறக்கருதி இவர் அன்னோருதவியைக் கொண்டு பெருந்தொகை செலவிட்டு வெகு பிரயாசையுடன் இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்த முயற்சித்திருக்கிறார். இதனை அருமையான ஓர் தர்மமென்றே சொல்ல வேண்டும்; இந்நூலை எங்கள் தமிழ்ப்பாஷையில் இதுகாறும் நாம் கண்டிலேம், ஆகையால் இதுபரியந்தம் நம் தமிழ்நாட்டில் இந்நூல் வெளியாகவில்லை என்பதே எனது நம்பிக்கை.

இவ்வரிய கிரந்தத்தை யாவரும் வாங்கி வாசித்து இன்புறுவதுடன் தாமறிந்த விஷயங்களை நம் தமிழ் நாட்டவர்கட்கு எளிதில் கிடைக்கத்தக்கதாக எடுத்த பிரயாசத்திற்காக ஸ்ரீமான் கே. கோவிந்தசாமி பிள்ளை அவர்களுக்கு முழு இருதயத்தோடு எனது வாழ்த்துதலை கூறுகிறேன்.

இங்ஙனம்,

புகைரத ஸ்தானம்,
மருதானை, கொழும்பு.

சு. தேவசிகாமணி.

முகவுரை.

ஸ்ரீ புத்தர் புராணம் எனும் இந்நூலை மிகப்பிரயாசை யோடு தமிழில் மொழிபெயர்த்தனம்.

பாரதநாட்டில் பிறந்து லங்காபுரியில் வளர்ந்து இலங்கை வாழ் பௌத்த மதத்தினர்களுக்கு உருத்தாகிய, பாளி, சிங்கள மெனும் பாஷைகளை பூர்வவினைப் புண்ணியானுக்கிரகத்தினால் நன்கு பயின்றும், நாம் அடையவேண்டிய விசேஷ பலன்களை இச் ஜென்மத்தில் அடையாவிட்டால் யாது பயனெனக்கருதி, யாது செய்யலாமென யோசித்து, நமது புண்யபூமியாகிய பாரதநாட்டிலே அவதரித்த மூவுலகுணர்ந்த மூர்த்தியாகிய பூமிசை நடந்த புத்தபிரான் யாரெனப் புலப்படாது. அசட்டையும், புறக்கணிப் பும் செய்யும் அறிவிலாமக்கள்பால் கருணைசெய்வான் வேண்டி அவர்கள் இப்புண்ணியமூர்த்தியின் சரித்திரத்தை கையாடுவதினால் தமது ஜீவியம் இகபர மோட்சசாதன முய்யுவான் வேண்டி இலங்கையில் ஐயாயிர வருடங்களுக்கு முன் பொதிந்துகிடந்த "ஜினராஜவம்ச" மெனும் மகிமையும், பெருமையும், கீர்த்தியும் வாய்ந்த இக் கிரந்தத்தை என்னால் இயன்ற எளிய நடையில் வசன ரூபமாக தமிழில் மொழி பெயர்த்தனம். இதில் தருமவிதிகளை மூன்றுவிதமாக உபதேசித்திருக்கின்றனர். அதாவது இல்லற வாசிகளுக்கு "கிஹிவினையும்" துறவிகளுக்கு "அபி-தர்மமும்" தேவர்களுக்கு "சூத்ரோபதேசமும்" ஆக மூன்றாகும். இவ்விதம் திரிபிடக்க அல்லது திரிபீடகா எனும் உபதேச தர்மரத்னமார்க் கத்தில் சதா அபிநயம் செய்பவர்கள் இவ்வுலகில் புகழும் பாக்ய மும், அவ்வுலகில் அருளும் பெற்றுய்வதில் அணுவளவாவது சந்தேகமில்லை என்பதை யாராலும் மறுக்கமுடியாத உண்மை யிலும் உண்மை என்பது திண்ணம். ஆகையால் பொதுமக்க ளின் பிரயோஜனத்திர்க்காக எழுதிய இதிற் சொற்பிழை, சுவைப் பிழை முதலிய குற்றங்களிருப்பின் அதை விடுத்து, சுவைரசப் பிரயோகம் செய்யும்படி சான்றோர்பால் தாழ்மையுடன் வேண்டு கிறேன்.

இங்ஙனம்,

கெ. கோவிந்தசாமி பிள்ளை.

ஆசிரியர்.

ஸ்ரீ புத்தர் புராணம்.

...மார்க்கசபை
ஆரம்பம். 1934
குரும்பசிட்டி
...லிப்பழை

—— :: ——

நமோ தஸ்ஸ பகவத்தோ அரஹத்தோ
ஸம்மா ஸம்புத்தஸ்ஸ

—o—

நெடிய ஆழிசூழ் இவ்வுலகம் தோன்றி யழிவதெக் காலமோ, அதனை ஓர் கற்பம் என்பர். இக்கற்பம் சதுர்யுகம் கொண்டது, கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலி யுகம் ஆகிய சதுர் யுகங்களிலும் நடந்த எண்ணிறந்த விஷயங் களில் சில முக்கியமானவைகளைக் கவனிக்க வேண்டியதவசிய மாகும்.

விக்கிரமாதித்தன், சாலிவாகனன் முதலிய வல்லரசர் கட்குப் பின்னும், புத்த வருஷம் 2482க்கு முன்னும் ஜம்புத்தீவின் மத்தியபாகத்தில் ஸ்ரீ கௌதம புத்தபெருமான், திரு அவதாரம் செய்தருளினர், நம் புண்ய பரதகண்டத்தின் வடபால், இமய மலை, வெள்ளியங்கிரிச் சார்பில் நீர்வளம் பொருந்திய வட அயோத்தியாபுரியாம், சாக்கிய நகரென்னும் மகததேசமாகிய உத்தரகோசலத்தின் தலைநகராய் விளங்கும் கபிலவஸ்து (அல் லது) கயிலாயம் எனும் நன்னாட்டில் புகழ்பெற்ற "கலிவாகு" சக்ரவர்த்தியின் பரம்பரையில் செங்கோலோச்சி வந்த "சுத்தோ தன" மகாராஜனுக்கும், அவரின் மனைவியாம் "மாயா" தேவிக் கும் தவசிரேஷ்ட புத்திரனாக ஸ்ரீ கௌதம புத்தபெருமான் அவதரித்து ஸ்ரீ ஸித்தார்த்த குமாரன் என விளங்கினர்.

அங்ஙனமே தனது பதினாறு பிராயதிற்குப்பின் கோலி தேசத்தரசனின் திருப்புதல்வியை திருமணமுடித்து தனது

இருபத்தொன்பதாவது ஆண்டுவரை இல்லறதருமத்தைச் செவ்வனே நடத்திவருங்கால் "இராகுலன்" எனும் அருமை மகவு ஒன்று பிறந்தது.

அந்நாளில், குஷ்டரோகி, கிழரூபம், பிணம், சந்நியாசி முதலிய அபசகுனங்களைக் கண்டு, மனம் நடுங்கி உலகபோக மாய்கையை வெறுத்து, துறந்து முனிக்கோலங்கொண்டு ஏழு நாட்களுக்குள் தனக்குவரும் சக்ரவர்த்திப் பீடத்தையும் நாற்பதினாயிரம் பட்டத்தரசிகள் புடைசூழும் தனது மனைவியையும் ஏகபுத்திரனும் இராகுலனையும் இச்சியாது விட்டுவிட்டு, மத்திம ஜாமத்தில் ஒருவருக்கும் தெரியாமல், ஆடையாபரணங்கள் அணிந்து "கந்தகன்" எனும் குதிரைமீதேறி சன்னனும் மந்திரியோடு, அரண்மனையை விட்டகன்று, "அனோமான" கங்கைக்குச் சென்று அதிகாலையில் இருவரும் குதிரையும் அக்கரைக்குக் குதித்து பொன்னிறமான மணற்கரையில் நின்று தன் வலக்கரத்தால் உடைவாளை எடுத்து இடக்கரத்தால் முடியைப் பிடித்து ஓரே வெட்டாக வெட்டி எடுத்து கீழ்கண்டவாறு யோசித்தார்.

அதாவது, இச்சென்மத்தில் நான் புத்த பதவியை அடைவது உண்மையானல் எனது கேசரோமம் ஆகாயத்தில் ஏறிச் செல்லவேண்டும் என உறுதிகொண்டு வீசி எறிந்தார்.

அதுவேளை மேலே வீசிஎறிந்த கேசரோமத்தைக் கண்ட இந்திரன் ஓடிவந்து தனது இருகரங்களால் எடுத்துச்சென்று இந்திரலோகத்தில் வைத்து அன்றுமுதல் இன்றுவரை பூஜிப்பதோடு இந்திராதி தேவர்கள் எல்லோரும் வணங்கியும் வருகின்றனர். பின்பு பிரமன் பரிசளித்த காவியாடையைப் பெற்றுக்கொண்டு தான் அணிந்திருந்த ஆடையை ஆகாயமார்க்கமாக ஏறிச்செல்ல வேண்டுமென நினைத்து மேலே எறிந்தனர்.

மேலேறிச்செல்லும் ஆடையைக்கண்ட பிரமன் அதனை பிரமலோகத்துக்கு எடுத்துச்சென்று அன்றுமுதல் இன்றுவரை பயபக்தியோடு பூசைசெய்து வருகின்றனர்.

பின் ஸ்ரீ ஸித்தார்த்த குமாரனுகிய பெருமான் காவிகாம்பர கமண்டலதாரியாய் அவ்விடம்விட்டு "உறுவலாவனம்" எனும் திருவாலங்காடேகி ஆறு வருடம் அன்னுகாரமின்றி தவமிருந்து ஏழாம் வருடம் வைகாசி மாதம் பௌர்ணமியன்று காசியைச் சார்ந்த "கயா" நகருக்கு எழுந்தருளி ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தவேளையில், கோபியர் குலத்திலுதித்த "சுஜாத்தா" எனும் மாது பயபக்தியுடன் பரிந்தளித்த பாற்சாதமருந்தி சற்று அப்பால் தோன்றிய வெள்ளரசமரத்தடியில் வீற்றிருந்து தன்னுடன் யுத்தம்செய்ய வந்தெதிர்த்த மாரனை வென்று, அறிவு எனும் இரகசியப்பொருளை பிறர் உதவியின்றி தானே தன் சுயபுத்திபால் உணர்ந்தமையால் புத்தோ (அல்லது) புத்தர் என விளங்கினுர்.

அதிமேதையான புத்தபெருமான் புத்தபதவியை அடைவதற்கு ஆதிமுதல் அந்தம்வரை செய்து நிறைவேற்றிய புண்ணியங்களை இவ்வளவென நிதானித்து எழுத இயலாத அளவற்றவைகளாகும்.

பூர்வீக வரலாறு.

பல்லாயிரங்கோடி கர்பங்களுக்கு முன்னரே ஸ்ரீ கௌதம புத்த பெருமான் காந்தாரதேசத்திலே ஓர் எழைக்குடும்பத்தில் பிறந்திருந்தார்.

ஸ்ரீ புத்தர் புராணம்.

புத்தபதவி என்ற நாமமே தெரியாதவராய் ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தும் அவர் அச்ஜென்மத்தில் தனது மாதா பிதாக்களுக்கு ஊழியம் செய்வதையே தருமமாகக் கொண்டு தன்னாலியன்ற தொழில்கள் செய்து அதில்வரும் கூலியினைப்பெற்று தாய் தந்தையர்களை காப்பாற்றி வந்தார். இங்ஙனம் சிறிது காலஞ்சென்றதும் தனது பிதாவானவர் கால கதியடைந்ததைக் கண்டு மனம் வெம்பி ஏங்கினார், ஆயினும் தனது கடமையைச்செய்ய தவறினாரில்லை.

அக்காலை காந்தார தேசத்தில் எங்கும் பஞ்சமும், நோயும் பரவி மக்களை வருத்தத்துவக்கியது. இதுகண்ட தனயன் தனது தாயாரோடு வேறு தேசம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு தன் தேசத்தைவிட்டு வெளிநாடு செல்வான் வேண்டி ஓர் மரக்கலத்தில் ஏறி பிரயாணம் செய்தனர். மரக்கலம் நடுக்கடலில் செல்லுகையில் திடீரென் புயற்காற்றுண்டாகி ஓர் பாறையில் மோதுண்டு உடைந்து தவிடுபொடியாயிற்று.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், என சதா கருதும் புதல்வராகிய அவர் நடுக்கடலில் குதித்து தனது மாதாவை முதுகின்மேற்றாங்கிக்கொண்டு நீந்திச்செல்லலானார். நாற்புறமும் ஒரு கரையும் காணாது நீந்தித் தத்தளிக்கும் நம் புண்ணிய புருஷர் கீழ்க்கண்டவாறு நினைக்கலானார்.

"என்னை பத்துமாதம் சுமந்து பெற்று பெருந்துயரடைந்து அன்போடு வளர்த்த அருமைத் தாயே" நீ கடலில் விழுந்துவிட்டாயே நானென்ன செய்வேன். எனது உயிரை உனக்காக கொடுத்தாவது இக்கடலிலிருந்து கரையேற்றுவேன் என ஊக்கத்தை விடாமல் நீந்திச்செல்லுங்கால் அங்கு நடந்தவைகளாவது:—

பிரமலோகத்தில் வசிக்கும் ஓர் பிரமதேவன் நமது வீர புருடன் படும் பாட்டைக்கண்டு திடீரென அங்கு அந்தரமார்க்க

மாய் பிரசன்னமாகி, ஹே மாதுரு பக்தனே! உன்போன்ற ஓர் ஸத்புத்திரனை இம்மானிட உலகத்து எங்கும் கண்டிலேன். மாதா பிதாக்களைப் பாதுகாத்து அவர்கட்கு ஊழியம் செய்வதுபோல் சிறந்த புண்ணியம் உலகில் வேறுண்டோ? சிலர் பூர்வ புண்ணிய வசத்தால் இவ்வுலகத்தில் பிறந்து, மண், பொன், பெண், ரதகஜ துரகபதாதிகளோடு இன்புற்று தேவர்களைப்போல் சுகமாக வாழ் கிறார்கள். தவிர புத்தபதவியை அடைந்து உலக மக்கட்கு தர்ம மாகிய அமுதத்தை யூட்டி பிறப்பிறப்பற்ற நிர்வாண நிலையாகிய சச்சிதானந்த பரமபதமடையும் வழிதிறந்து காட்டவேண்டுமென் றால் அப்பதவிக்குநீ தகுந்தவனாய் இருப்பதினால் நீ இப்பொழுதே புத்தபதவியை அடைய பிரார்த்தனை செய்ய முயல்வாய், என வாக்களித்து பிரமன் அகன்று சென்றனர்.

அதுவேளை நடுக்கடலில் தத்தளித்து நீந்திவரும் பராக் கிரம புருடர் பின்வருமாறு யோசிக்கலானார்.

பாளி ஸ்லோகம்.

புத்தோ ஹங் போத யிஸ்ஸாமி
முத்தோ ஹங் மோக்ஷயே பரே
திண்ணோ ஹங் தாற யிஸ்ஸாமி
சங்சா ரோகா மஹாப்பயா.

பொருள்

இன்று நான் எனது மாதாவை இக்கடலிலிருந்து கரைசேர்க்கும் புண்ணியத்தினால் எதிர்காலத்தில் புத்தபதவியைப்பெற்று உலக மக்கள் பிறவிக்கடலைத் தாண்டிக் கரையேறி நிர்வாணமென்னும் நித்யானந்த பதமடைய வழிகாட்டுவேன்; என்பதே.

அப்பராக்கிரம புருடன் புத்தபதவியை அடைய வேண்டுமென்று நினைத்தமாத்திரத்தில் ஏழுவிதமான, தைரியங்

கள் உண்டாயின. அத்தைரியத்தினலும், பிரமன் அளித்த வாக்கின் மகிமையாலும் ஆறுநாட்கள் கடலில் நீந்தி ஏழாம்நாள் ஓர் தீவின்கரை சேர்ந்தனர்.

அப்பொழுது பிரக்ஞை அற்றிருந்த மாதா கண்விழித்து மைந்தனை நோக்கி ஓ எனது அருமை மகனே! இப்பெரும் துயரிலிருந்து நீ என்னைக் காப்பாற்றிய நன்றிக்கு என்ன கைமாறு செய்ய வல்லேன், ஆனல் மகனே! நீ எதிர்காலத்தில் மானிடர் எவரும் இலேசாகத் தேடியடைய முடியாத பாக்கியமாகிய புத்த பதவியை யடைவாய் என்று உள்ளன்போடு வரமளித்தாள்.

அதனை பெரிய வரமாகவும், பக்தியாகவும், நினைத்த புதல்வர் அந்த தீவிலேயே சிறிதுநாட்கள் காலத்தை நடத்திவரலானர். தினமும் காட்டிற்குச்சென்று காய் கனிகளை தேடிவந்து தானும் மாதாவும் அருந்தி அப்புண்யத்தினல் ஈற்றில் இருவரும் அங்கேயே மரணமடைந்து பிரமலோகத்தில் அவதரித்தனர்.

(போதிஸத்தர்)

மாதாவின் நல்வரத்தைப்பெற்று பிரமலோகத்தில் அவதரித்த வீரோத்தமருக்கு அச்சென்மமுதல் புத்தபதவியடைந்த ஜென்மம்வரையிலும் போதிஸத்தர் என்ற பெயரமைந்தது.

பிரமலோகத்தின் கணக்கின்படி வயதுமுடிந்ததும் போதிஸத்த பெருமான் பிரமலோகத்தைவிட்டகன்று மனிதலோகத்தில் பிறந்தனர். அவ்விதம் பிரமலோகத்திலும், நாகலோகத்திலும், தேவலோகத்திலும் மாறிமாறிப் பிறந்து சகல புண்யங்களையும் தானதர்மங்களையும் செய்து நிறைவேற்றி புத்தபதவியில் ஐக்கியப்பட்டவராய் இருந்தனர். நமது போதிஸத்த பெருமான் பிறந்த பிறப்புகள் எண்ணவும் எழுதவும் முடியாத அனந்தம் பிறப்புகளாகும். போதிஸத்த பெருமான் செய்துவந்த புண்ணியங்களை மூன்றுவிதமாகப் பிரித்திருக்கின்றனர்.

ஸ்ரீ புத்தர் புராணம்.

சன்மார்க்கசபை
1934

மனோப்பிரணிதான பிரார்த்தனை, என்றொரு காலமும், வாக்பிரணிதான பிரார்த்தனை, என்றொரு காலமும், குளிசி, விவரண, அல்லது இருபத்தி நான்கு புத்தர்களின் வரங்களைப் பெற்றுள்ள ஓர் காலமும் ஆக மூன்றுவித காலங்களாகும்.

கற்பம்.

கற்பமென்றால், உலகம் தோன்றி அழியும் காலமே யாகும் இக்கற்பத்திற்குமுன் எண்ணிறந்த கற்பங்கள் உண்டாகி அழிந்திருக்கின்றன.

சங்கம்.

சங்கம் என்பது இலக்கங்களில் கடைசியான இலக்கம் கொண்டது ஒரு சங்கமாகும். இவ்வித ஏழு சங்கக்கற்பகாலங்கள் கொண்டதுவரையிலும், மனோபிரணிதான பிரார்த்தனை செய்து வந்த காலங்களாகும்.

அக்காலங்களில் ஒரு லெக்ஷத்து இருபத்தி ஐயாயிரம் புத்தர்கள் இவ்வுலகத்தில் புத்தபதவியையடைந்தார்கள். அவ்வொருலெக்ஷத்து இருபத்தி ஐயாயிரம் புத்தர்களின் காலங்களிலெல்லாம் நமது போதிஸத்த பெருமான் ஒவ்வொரு ஜென்மங்களாகப் பிறந்து ஒவ்வொரு புத்தர்களையும் அணுகி அவர்கட்கு அன்னமிட்டு, அடிபணிந்து பிரார்த்தனை செய்துகொண்டதாவது:—

எதிர்காலத்தில் நானும் இப்புத்தர்களைப்போலவே புத்தபதவியை அடையவேண்டும் என பரிசுத்த மனதுடன் பிரார்த்தனை செய்யலானார்.

இரண்டாவதாக ஒன்பது சங்கக் கற்பகாலங்கள் வரையிலும் வசனத்தால் சொல்லிவந்த (வாக் பிரணிதான பிரார்த்தனை

காலங்களில் மூன்று லெக்ஷத்து எண்பத்தி ஏழாயிரம் புத்தர்கள் இவ்வுலகத்தில் அவதரித்தார்கள். அப்புத்தர்கள் காலங்களிலும் நமது போதிஸத்த பெருமான் மூன்று லெக்ஷத்து எண்பத்தி ஏழாயிரம் ஜென்மங்களாகப் பிறந்து அப்புத்தர்கட்கு அன்ன தானம் முதலிய எல்லா தானதர்மங்களும் கொடுத்து அவர் களின் நல்வாக்குகளை பெற்று தானும் அப்புத்தர்களைப் போலவே எதிர்காலத்தில் புத்தபதவி அடைய வேண்டுமென்று வசனத் தால் சொல்லி ப்ரார்த்தனை செய்துவந்தனர்.

போதிஸத்த பெருமான் இவ்விதமாகப் புண்ணியங்களைச் செய்துவருங்கால் பிறந்தபிறப்புகள் எத்தனையென்று நிதானித் துச் சொல்ல ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் முடியாத ஆதியந்த மில்லாதவைகளாகும்.

இரண்டாவது அத்யாயம்.

உறுதி வரங்கள்:—

நம் போதிஸத்த பெருமான் இவ்விதம் பதினாறு சங்க கற்ப லெக்ஷகாலங்களாகவே சகல புண்ணிய தருமங்களையும் செய்து நிறைவேற்றி வரும்பொழுது நமது போதிஸத்தர் "சாரமண்ட" எனும் கற்பத்தில் இமயகிரிச் சார்பிலுள்ள அமரா வதிப் பட்டணத்தில் ஓர் பிராமணகுலத்தில் அவதரித்தனர்.

அதாவது:- அமராவதிப்பட்டணத்தில் ஓர் பிராமணர் இருந்தார் அவர் பெயர் "ஆனந்தன்" அவர்தன் மனைவி பெயர் "வசி" அவ்விருவருக்கும் "சுமேதன்" என்ற பெயருடன் நமது போதிஸத்த பெருமான் அவதரித்தார். அப்பிராமண குமாரன்

தனது மாதா பிதாக்கள் இருவரும் காலஞ்சென்றபிறகு மூதாதையர் தேடிவைத்திருந்த அளவற்ற திரவியங்களைக் கண்டு யோசனை செய்வதாவது:—

எனது மாதா பிதாவால் சேர்த்துவைக்கப்பட்டுள்ள இவ்வளவு சம்பத்துகள் இருந்தும் அவர்கள் இவைகளில் கொஞ்சமேனும் கொண்டுபோகவில்லையே, அவர்களின் முன்னோர்களாவது கொண்டுபோனதாக அறிவதற்கில்லையே, ஆகையால் நானாவது இதன் சாராம்சத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று திடசித்தராய் சகல தேசங்கட்கும் பறைசாற்றுவித்து பொல்லாத வறுமையில் கிடந்துழலும் பிணியாளரை வரவழைத்து அவர்கட்கு வேண்டிய திரவியங்களை எடுத்தேகுமாறு, மனப் பரிசுத்தமுடன் ஆக்ஞாபித்தார்.

அவ்விதம் கொடுத்தும் திரவியங்கள் குறையாமலிருப்பதைக் கண்டு, அரண்மனையின் கதவுகளை எல்லாம் திறந்துவிட்டு ஓ ஜனங்களே! நீங்கள் எல்லோரும் உட்புகுந்து உங்கள் விருப்பம் போல் திரவியங்களை எடுத்தேகுங்கள், என உத்தரவளித்து பின் இவ்வாறு யோசிக்கலானார்:—

இவ்வுலகின்கண்ணே ஆதியந்தமில்லா பிறப்புகட்கு காரணம் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையாகிய மூன்று ஆசையையும்பற்றி நிற்பதேயாகும்,

ஆசையெனும் பாசத்தால் கட்டுண்டு திரும்பத்திரும்ப உலகில் பிறந்தும், இறந்தும் அளவற்ற துக்கமடைவதேயன்றி சுகமொன்றும் தென்படவில்லையே; மரணமும், பிறப்பும் துக்கம் நிறைந்ததே; சகல உயிர்ப்பிராணிகளும் இறந்து இறந்து பிறக்கும் சுபாவமுடையது. ஆகையால், மூப்புப்பிணிச் சாக்காடாகிய துயரங்களை அகற்றி, ஜெனன மரணமில்லா தேஜோமயமாகிய

சச்சிதானந்த பரமசுந்தர நிர்வாண நிலையடைந்தவர்களுக்கு துக்கமே இல்லை. அவ்விதமான பரிசுத்த நிலையை அடைய வேண்டிய காலமும் இதுதான் என உணர்ந்தார். ஏழு நாட்களுக்குள் தன் திரவியங்களை வாரி பரிசளித்து, பின் இமயமலைச் சாரலிலுள்ள நீர்வளநிலமாம், கந்தமாதனவனமேகி, அப்புண்ய மூர்த்தியான சுமேதனர் தவமிருந்தனர்,

அவர் அரண்மனையைவிட்டு காட்டிற்குச் செல்வதற்கிடையில் தேவர்களால் அமைக்கப்பெற்ற பர்னகசாலை ஒன்றைக்கண்டு அவ்விடத்தில் தவமிருந்து ஏழு நாட்களுக்குள் கேசரிமார்க்கமாகப் போகும் தத்துவத்தைப் பெற்றுக்கொண்டார்.

இங்ஙனம் இருக்கும் நாளில் குளிர்காலம் ஆரம்பமானது அப்போது தபசிகட்கு தேள்வையான உப்பு, புளி முதலியன வேண்டிவருவதால் ஓர்நாள் சுமேதரிஷி கேசரிமார்க்கமாக ரம்பக நகரை நோக்கி செல்லலானார். அப்படிச் செல்லுகையில் அந்நகர்வாசிகள் எல்லோரும் சேர்ந்து அங்குள்ள ஓர் பாதையை வெகு அழகாக அலங்கரிப்பதைக்கண்டு கேசரிமார்க்கமாய் வந்த சுமேதரிஷி அங்குள்ள ஜனங்களைப்பார்த்துக் கேட்பதாவது:—

ஓ ஜனங்களே! எதற்காக இப்பாதையை அலங்காரம் செய்கிறீர்கள்? என்று வினவ ஜனங்கள் எல்லோரும் ஓ சுவாமி வீரோத்தமரே தாங்களுக்குத் தெரியாததொன்றுண்டோ ஆனாலும் சொல்லுகிறோம்.

திரிலோக நாயகமாகிய ஸ்ரீ தீப்பங்கிர புத்தபகவான் இன்று தினம் இந்நகர்க்கு எழுந்தருளுகின்றார், அதற்காகவே அடியேம் இப்பாதையை அலங்காரம் செய்கிறோம் என்றனர்.

"புத்தர்" என்ற சொல் காதில் விழுந்தமாத்திரத்தில் ஓ! ஓ! அப்படியானல் அந்த புத்தர்பேரில் எனது ஜீவியத்தை பூஜிக்க வேண்டுமென்று கருதிக்கொண்டு கேட்டதாவது,

எனதாருயிர் சகோதரர்களே எனக்கும் இந்தப்பாதையை அலங்கரிப்பதற்கு கொஞ்சமிடம் தருவீர்களா என்றதற்கு, சுவாமி இதோதெரிகிற பாதையை அலங்கரியுங்கள் என்று ஒரு பாகத்தைக் கொடுத்தார்கள். அதே நிமிடத்திலேயே சுமேதரிஷியாகிய போதிஸத்த பெருமான் யோசிக்கின்ருர்.

நான் தேவலோகம் சென்று பாரிசாதபுஷ்பம் கொண்டு வந்து அலங்கரிக்க வல்லமையுண்டாஞலும் அவ்விதம் செய்வது சரியல்ல, இவர்களைப்போலவே நானும் கஷ்டப்பட்டு இப்பாதையைச் சுத்தம்பண்ண வேண்டுமென்று கருதி ஒரு மண்வெட்டியும் கூடையும் கொண்டுவந்து மண்ணைவெட்டி கூடையிலிட்டு தன் தலைமேல் சுமந்து அப்பாதையை சுத்தம்செய்யத் தலைப்பட்டனர், அங்ஙனம் செய்து அப்பாதை முடிவடைவதற்கிடையில் ஸ்ரீ தீபங்கர புத்தபகவான் நான்கு லெக்ஷம் சங்கமர்களாகிய சீடர்களுடன் தண்மதிமுகத்தினராய் எழுந்தருளினர். ஸ்ரீ தீபங்கர புத்த பெருமானைக்கண்ட சுமேதரிஷியாகிய போதிஸத்தர் அளவற்ற மகிழ்ச்சியடைந்து உள்ளம் பூரித்து இருகரங்களும் சிரமேற் குவித்து அச்சேற்றின்மேல் குப்புற வீழ்ந்து நமஸ்காரம் செய்ததோடு, ஆதியே, பரஞ்சோதியே, அடைக்கலமே பாதம் பணிந்தேன், பரமனே போற்றி ஆண்டருள வேணுமையா, மெய்யனே பொன்னர் மேனியனே சேற்றின்மீது அடிவைக்காமல் அடியேன் முதுகின்மீதும்பாதத்தை வைத்து எழுந்தருளல் வேண்டும், என நமஸ்கரித்த சுமேதரிஷியைக்கண்ட தீபங்கர புத்தர், தனது நான்கு லெக்ஷம் சீடர்களுக்கும் அறிவித்ததாவது,

[library stamp]

பாளி ஸ்லோகம்.

பஸ்ஸத்த இமங் தாபஸங்
ஜெட்டிலங் உக்க தாபனங்
அபரி மெய்ய இத்தோ கப்பே
அயங் புத்தோ பவிஸ்ஸத்தி.

பொருள்

எனதருமையான சிடர்களே! இதோபாருங்கள் உக்கிர வீரத்தன்மையுடைய மகானுபாவசம்பன்ன சுமேதரிஷியாகிய இவ்வீரபுருஷர் எதிர்காலத்தில் என்னைப்போலவே புத்தபதவி யடைவார்.

இன்றுமுதல் நாலு சங்கம் கற்பலக்ஷம் வரையிலும் புண்ணியம் செய்து என்னைப்போலவே இன்னும் இருபத்திநான்கு புத்தர்களைக்கண்டு அவர்களின் வாக்குவரங்களைப் பெற்று இருபத்தி ஐந்தாவதாக இவ்வீரபுருஷர் கௌதம புத்தராய் அவதரிப்பார் என திருவாய்மலர்ந்தருளினர்.

அவ்வார்த்தையைக்கேட்டு மனமகிழ்ந்து நான்கு லெக்ஷம் சிடர்களும் அவரவர்களின் கரங்களிலிருந்த புஷ்பங்களினலேயே சுமேதரிஷியைப் பூஜித்தார்கள், அப்புஷ்பங்களெல்லாம் ஒரு கும்பலாய்ச் சேர்ந்து புஷ்ப ஆசனம்போல் தோன்றிற்று, அதில் சுமேதரிஷி உதயசூரியனைப்போல் அமர்ந்திருந்தனர். அதைக் கண்ட தேவர்களெல்லாம் பூமாரிப்பொழிந்தனர், தேவேந்திரன் முதலானோர், வெண்சங்கூதினர்கள். கருணைக்கடலாகிய தீபங்கர புத்தபெருமான் தமது சிடர்களுடன் அவிடம் விட்டு அகன்றபின் சுமேதரிஷியாகிய போதிஸத்தர் கானகமேகி சிலகாலம் தவமியற்றி ஈற்றில் தேகவியோகமடைந்து பிரமலோகத்தில் அவதரித்தனர்.

சன்மார்க்கசபை
ஆரம்பம். 1934
குரும்பசிட்டி

ஸ்ரீ புத்தர் புராணம்.

இவ்விதம் மாறிமாறிப் பிறந்து சகல புண்ணியங்களையும்பழை செய்து நிறைவேற்றி வருங்காலத்து இரண்டாவதாக "கொண்டஞ்ஞ" புத்தபெருமான் இவ்வுலகத்தில் அவதரித்தார், அப்பெருமான் காலத்தில் நமது போதிஸத்தர் "விஜித்தாவி" எனும் பெயருடன் சக்கரவர்த்தியாய் பிறந்தனர். "கொண்டஞ்ஞ" புத்த பெருமான் அவதாரம் செய்திருப்பதை அறிந்த விஜித்தாவி ராஜன் லக்ஷகணக்கான ஜனங்களோடு அங்கு சென்று புத்தபெருமானைக்கண்டு சாஷ்டாங்கம் செய்து அன்னதானமுதலிய சகல தானங்களையும் செய்து தருமோபதேசங்கள் கேட்டு அடிபணிந்து நின்றார்.

அதைப்பார்த்த "கொண்டஞ்ஞ' புத்தபெருமான் புகன்றதாவது என்தருமைச் சிஷர்களே இந்த "விஜித்தாவி சக்கரவர்த்தி எதிர்காலத்தில் என்னைப்போலவே புத்தபதவி அடைவார், எனத திருவாய்மலர்ந்தருளினர். கொண்டஞ்ஞ புத்தரின் திருவருள் பெற்ற "விஜித்தாவி" சக்கரவர்த்தி சிலகாலமிருந்து, பரலோகமடைந்தார்.

பின் மூன்றாவதாக இவ்வுலகில் "மங்கள" எனும் புத்த பெருமான் அவதரித்தனர். அப்புத்தர்காலத்தில் நமது போதிஸத்தர் "சுறுச்சி" என்ற பெயருடன் ஓர் பிராமணகுலத்தில் பிறந்து மங்கள புத்தபெருமானை அணுகி அன்னதானம் முதலிய முப்பத்திரண்டு தானங்களையும் சரிவரச் செய்து நின்றனர். அதைப்பார்த்த மங்கள புத்தபெருமான் புகன்றதாவது:—

எனதன்புள்ள சிடர்களே, எனது எதிரில் நிற்கும் இந்த மகானுபாவசம்பன்ன சுறுச்சி பிராமண வீரோத்தமர் எதிர்காலத்தில் என்னைப்போலவே புத்தராகுவார், என திருவாய் மலர்ந்தருளினர். மங்களபுத்தரின் உறுதிவரத்தைப் பெற்ற போதிஸத்தர் அவிடம் விட்டகன்று தேவலோகத்திலும், மனிதலோகத்

திலும் மாறிமாறிப் பிறந்து சகல புண்ணியங்களையும் செய்து வருங்காலத்தில் நான்காவதாக சுமண எனும் புத்தபெருமான் இவ்வுலகத்தில் அவதரித்தார். அக்காலத்தில் நமது போதிஸத்தர் அத்துலன் எனும் பெயருடன் நாகராஜனுகப் பிறந்து சுமண புத்தபெருமானை அணுகி செய்யவேண்டிய சகல தருமங்களையும் செய்தளித்து நின்றபோது சுமண புத்தபெருமான் தன் சிடர்களைப் பார்த்து சொல்வதாவது.

அன்பார்ந்த சிடர்களே! இந்நாகராஜன், எதிர்காலத்தில் என்னைப்போலவே புத்தராகுவார் யெனத் திருவாய் மலர்ந்தருளினார்.

ஐந்தாவதாக அவதரித்த "றேவத்த" எனும் புத்தபெருமான் காலத்தில் நமது போதிஸத்தர் பிராமணகுலத்தில் பிறந்து அத்திதேவனென்ற பெயர்பெற்று றேவத்த புத்தபெருமானையணுகி சகல தானங்களையும் செய்து பயபக்தியோடு அடிபணிந்து நின்றனர்.

அதைக்கண்ட றேவத்த புத்தபெருமான் புகன்றதாவது எனதருமைச் சிடர்களே இதோ நிற்கும் அத்திதேவ பிராமணர் எதிர்காலத்தில் என்னைப்போலவே புத்தபதவியை அடைந்து எண்ணிறந்த ஜீவராசிகளை பிறவிக்கடலில் நின்றும் கரையேற்றி நித்தியானந்த பதமடையச் செய்வார் என்று திருவாய் மலர்ந்தருளினர். வரத்தினைப்பெற்ற போதிஸத்தர் அவிடம் விட்டகன்று கொஞ்ச காலத்தில் பரமபதமடைந்தார்.

ஆறுவதாக அவதரித்த "ஸோபித்த" எனும் புத்தபகவான் காலத்தில் நமது போதிஸத்தர், அஜித்தாவி எனும் பிராமண குமாரனுய்ப் பிறந்து ஸோபித்த புத்தபெருமானை அணுகி சகல தானங்களையும் செய்தளித்து தருமமுறைகளையும் கேட்

டானந்தித்து நின்ற அஜித்தாவியைப் பார்த்து புகன்றதாவது அன்பார்ந்த சிடர்களே! அதோநிற்கும் அஜத்தாவி எதிர்காலத்தில் என்னைப்போல் புத்தபதவியை அடைவார் என திருவாய் மலர்ந்தருளினர்.

ஏழாவதாக அவதரித்த "அனோமதஸ்ஸீ" எனும் புத்த பெருமான் காலத்தில் நமது போதிஸத்தர் லெக்ஷக்கணக்கான இராக்ஷதர்களுக்கெல்லாம் அதிபதியாய்ப் பிறந்து இராக்ஷதர்களோடு அனோமதஸ்ஸி புத்தபெருமானையணுகி அவரின் உபதேசங்களைக் கேட்டு பயபக்தியோடு நின்றார் அதைக்கண்ட அனோமதஸ்ஸி புத்தபெருமான் புகன்றதாவது இந்த ராக்ஷஸராஜன் எதிர்காலத்தில் என்னைப்போலவே புத்தபதவியை அடைவார் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

எட்டாவதாக அவதரித்த "பதும" புத்தபெருமான் காலத்தில் நமது போதிஸத்தர் லெக்ஷக்கணக்கான சிங்கங்களுக்கெல்லாம் அதிபதியாகிய மிருகேந்திரனைப் பிறந்து "பதும" புத்தபெருமானிடம் சென்று தருமோபதேசங்களைக் கேட்டு எதிர்காலத்தில் நீர், கௌதம புத்தராய் அவதரிப்பீர் என்ற உறுதிவரத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஒன்பதாவதாக:— நாரதர் எனும் புத்த பெருமான் இவ்வுலகத்தில் அவதரித்தார் அக்காலத்து நமது போதிஸத்தர் "தியானலாபி' எனும் தபசியாய் பெயர்பெற்று கேசரிமார்க்கமாக வந்து நாரத புத்தபெருமானது தரும உபதேசங்களைக்கேட்டு எதிர்காலத்தில் நீர் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற உறுதிவரத்தைப் பெற்றுக்கொண்டார். பத்தாவதுமுறை அவதரித்த "பதுமுத்தர" புத்தபெருமான் காலத்து நமது போதிஸத்தர் "ஜெட்டிலன்" எனும் தபசியாகப் பெயர்பெற்று

பதுமுத்தர புத்தபெருமானையணுகி அவரது தருமோபதேசங்களை கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற உறுதிவரத்தையும் பெற்றுக்கொண்டார்.

பதினொன்றாவதாக அவதரித்த "சுமேத" புத்த பெருமான் காலத்தில் உத்தரன் எனும் பெயருடன் பிறந்து சுமேத புத்தபெருமானையணுகி தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் யென்ற உறுதி வரத்தையும் பெற்றுக்கொண்டார்.

பன்னிரண்டாவதாக அவதரித்த "சுஜாத்தா" எனும் புத்தபெருமான் காலத்து நமது போதிஸத்த பெருமான் தேவலோகத்தில் சக்ரதேவேந்திரனாக அவதரித்து சுஜாத்தா புத்தபெருமானிடம் வந்து தாள்பணிந்து நின்றனர் அவ்விந்திரனைப் பார்த்து தேவேந்திரா நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் யென திருவாய் மலர்ந்தருளினர்,

பதின்மூன்றாவதாக அவதரித்த "பிரியதரிசி" புத்த பெருமான் காலத்து நமது போதிஸத்தர் காக்ஷபமானவக்க எனும் பெயருடன் பிறந்து பிரியதரிசி புத்தபெருமானையணுகி தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்து கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற திருவருளைப் பெற்றுக்கொண்டார்.

பதினான்காவது முறை அவதரித்த "அர்த்ததரிசி" எனும் புத்தபெருமான் காலத்து நமது போதிஸத்தர் சுசிமன் எனும் தபசியாக விளங்கி அர்த்ததரிசி புத்தபிரானையணுகி தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்து கௌதமபுத்தராக விளங்குவீர் என்ற நல்வாக்கைப் பெற்றுக்கொண்டார். பதினைந்தாவதாக அவதரித்த "தர்மதரிசி" புத்தபிரான் காலத்து

நமது போதிஸத்தர் சக்ரதேவேந்திரனாக தேவலோகத்தில் அவதரித்து தர்மதரிசி புத்தபெருமானை யணுகி தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற திருவருளைப் பெற்றுக்கொண்டார்,

பதினாறாவதாக அவதரித்த "ஸித்தார்த்த" எனும் புத்தர் காலத்து நமது போதிஸத்தர் சுமங்கள தபசியாகப் பெயர் பெற்று ஸித்தார்த்த புத்தபெருமானை யணுகி தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற உறுதிவரத்தைப் பெற்றுக்கொண்டார்.

பதினேழாவதாக அவதரித்த "திஸ்ஸ" புத்தபெருமான் காலத்தில் நமது போதிஸத்தர் "சுஜாதா" எனும் ராஜகுமாரனாகப் பிறந்து திஸ்ஸ புத்தபெருமானை யணுகி அவர்தம் தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற நல்லருளைப் பெற்றுக்கொண்டார்.

பதினெட்டாவதாக அவதரித்த "புஸ்ஸ" புத்தபெருமான் காலத்தில் நமது போதிஸத்த பெருமான் "விஜித்தாவி" ராஜனாகப் பிறந்து, புஸ்ஸ புத்தபெருமானை யணுகி அவரின் உபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற வரத்தினைப் பெற்றுக்கொண்டார்.

பத்தொன்பதாவதாக அவதரித்த "விப்பஸ்ஸி" புத்தபெருமான் காலத்தில் நமது போதிஸத்தர் அத்துலன் எனும் நாகராஜனாகப் பிறந்து லெக்ஷக்கணக்கான நாகங்களுடன் விப்பஸ்ஸி புத்தபெருமானை யணுகி நல்லுபதேசங்களைக் கேட்டு, நாகராஜனே நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற நல்வாக்கைப் பெற்றுக்கொண்டார்.

இருபதாவதாக அவதரித்த "ஸிக்கி" புத்தபெருமான் காலத்தில் நமது போதிஸத்தர், அரிந்தம ராஜனாகப் பிறந்து ஸிக்கி புத்தபெருமானை யணுகி, தருமோபதேசங்களைக் கேட்டு நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராகுவீர் என்ற திருவரத்தைப் பெற்றுக்கொண்டார்.

இருபத்தி ஒன்றாவதாக அவதரித்த "வெஸ்ஸபு' எனும் புத்தபெருமான் காலத்து நமது போதிஸத்தர், சுதர்ஸன ராஜ குமாரனாகப் பிறந்து, வெஸ்ஸபு புத்தபெருமானை யணுகி அவரது தருமோபதேசத்தைக் கேட்டு சுதர்ஸனா நீர் எதிர்காலத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற உறுதிவரத்தைப் பெற்றுக் கொண்டார்.

நெடிய கற்பமாகிய மகாபத்திர எனும் பெயருடைய இக் கற்பத்தில் இருபத்திரெண்டாவதாக கிரேதாயுகத்தில் அவதரித்த "கக்குசந்த" புத்தபெருமான் காலத்தில், நமது போதிஸத்தர் "கெமன்" எனும் அரசனாகப் பிறந்து, கக்குசந்த புத்தபெருமானை யணுகி உபதேசங்களைக்கேட்டு அன்னதானமுதலிய சகல தானங் களையும் பரிசளித்து நீர் கலியுகத்தில் கௌதம புத்தராக அவ தரிப்பீர் என்ற வரத்தைப் பெற்றுக்கொண்டார்.

இருபத்தி மூன்றாவதாக [illegible] அவதரித்த "கோணுகம" எனும் புத்தபெருமான் காலத்தில் நமது போதி ஸத்தர் பருவதராஜனாகப் பிறந்து அன்னதானமுதலிய சகல தானங்களையும் செய்து புண்ணியம் பெற்று, நீர் கலியுகத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற வரத்தையும் பெற்றுக் கொண்டார்.

இருபத்தி நான்காவதாக கடைசிமுறை துவாபரயுகத்தில் அவதரித்த "காக்ஷப" புத்தபெருமான் காலத்தில், நமது போதி

ஸத்தர் "ஜோத்திபாலன்" எனும் பிராமணராகப் பிறந்து அப் புத்தபெருமானின் தர்ம உபதேசத்தைப் பெற்று அன்னதானம் முதலிய சகல தானங்களையும் பரிசளித்து, கலியுகத்தில் கௌதம புத்தராகுவீர் என்ற வரத்தையும் பெற்றுக்கொண்டார்.

மேற்கூறிய ஸ்ரீ தீபங்கர புத்தபிரான்முதல் கடைசிமுறை அவதரித்த காக்ஷப புத்தபெருமான் வரையிலும் அவதரித்துள்ள இருபத்தி நான்கு புத்தர்களையும் இடைவிடாது நமது போதி ஸத்த பெருமான் தமது கண்ணுல்கண்டு, அப்புத்தர்களின் புகழுரையுடன் திருவரங்களையும் பெற்றுக்கொண்டபின், போதி ஸத்த புண்ணியமூர்த்தி தேவலோகத்திலும், பிரமலோகத்திலும், மனிதலோகத்திலும் மாறி மாறி பிறந்து சகலவிதமான புண்ணி யங்களையும் செய்து நிறைவேற்றியதுமன்றி, புத்தபதவியில் ஐக்கியப்பட்டவராய் வந்து கடைசியாகிய ஜென்மத்தில் "வெஸ் ஸந்த ராஜனுகப் பிறந்தார்.

அதாவது ஜம்புத்தீவின் மத்தியில் சேத்திய நகரமென் றோர் பட்டணமுண்டு, அப்பட்டணத்தில் வெஸ்ஸந்திர ராஜன் எனும் திருநாமத்துடன் நமது போதிஸத்த பெருமான் அவ தரித்து, கற்புடைய மங்கையாகிய "மந்தரா தேவி" அம்மையாரை மங்களதாரணம் செய்து "சாளிய' கிருஷ்ணஜினு' எனும் இரு பிள்ளைகளோடு தேவலோகத்துக்குச் சமமான சேத்திய நகரை அரசாண்டுவருங் காலையில் வெஸ்ஸந்தர ராஜன் ஓர் நாள் யோசிக்கலானுர்.

சகல ஜீவராசிகளும் ஆசையெனும் பாசத்தால் கட்டுண்டு இறந்தும், பிறந்தும் பிறவியெனும் சாகரத்தில் வீழ்ந்து, உழன்று புரண்டு கரையேறமுடியாமல் தத்தளிப்பதேயன்றி சுகமொன்றும் கண்டதில்லை. பிறப்பும், இறப்பும் துக்கமே; இப் பிறவிக்கடலைத் தாண்டி கரையேறுபவர்கட்கு துக்கமே கிடையாது. பிறப்பும்

இறப்புமற்று சதாகால சுகமாய் இருக்குமென்று புகலக்கூடிய நிர்வாணமெனும் சச்சிதானந்த பரமநிலையை அடையவேண்டிய வழியை நாடிச்செல்வது எனது கடமை என உணர்ந்து, உலக மெங்கும் பறைசாற்றுவித்து ஏழைகளையும், வறுமைபிடித்த யாவரையும் வரவழைத்து, தன் பொக்கிஷ சாலை முழுவதையும் திறந்துவிட்டு சொல்லுகிறதாவது:—

ஓ! ஜனங்களே! நீங்கள் யாவர்களும் உள்ளேசென்று உங்களுங்கள் மனம்போல் திரவியங்களை அள்ளிச்செல்லுங்கள் என்று ஆக்ஞாபித்தார். அவ்விதம் பரிசளித்தும் திரவியம் குறை யாமல் இருப்பதைக்கண்டு நாலாபக்க வாசல்களையும் திறந்து ஏழுநாட்களுக்குள் சகல பொருட்களையும் பரிசளித்து, ஏழாம் நாள் தமது அருமை மனைவியாகிய மந்திராதேவியையும், இரு புத் திரர்களையும் அருகிலழைத்து எனதன்பார்ந்த கண்மணிகளே! நாமிப்பொழுது கானகமேகித் தவமிருந்து, பரமநிலையை அடை வோம் வாருங்கள் என்று சொல்லி யழைத்து அச்சேத்திய நக ரத்தை விட்டகன்று, காடு மலை வனங்களைக்கடந்து இமாசலமேகி வங்கக்கிரியெனும் வளைந்து சூழ்ந்து நறுமணம் வீசுகின்ற புட்பங் கள் நிறைந்த மலையோரத்தில் தேவர்களால் அமைத்துள்ள பர்னக சாலையில் தவமிருந்தனர்,

இவ்விதமிருக்க தேவியார் ஓரிடத்திலும், அரசனோரிடத் திலுமாக தவமிருந்துவருகையில், கற்புடைய மங்கையர்க்குக் கண வனே தெய்வமென்ற முதுமொழிப்படி தினந்தோறும் கானகம் சென்று கனிவர்க்கங்கள் பறித்துவந்து கணவனுக்கும் பிள்ளை கட்கும் கொடுத்துவந்தனர், இது வழக்கமாய் இருந்துவந்தது. இவ்விதம் காலங்கடத்தி வருகையில், ஒருநாள் காலையில் மந்திரா தேவி அம்மாள் நித்திரைவிட்டெழுந்து தன் கணவரைநோக்கிச் சொல்லலானூர், ஓ என் பிராண நாதா! சென்ற இரவில் யான்

ஒரு கனவுகண்டேன் அது என்மனதை வருந்தச்செய்கிறது, அது என்னவெனில், சிவந்த கண்களையுடைய ஓர் மனிதன் வந்து அவன் கரத்திலிருந்த ஆயுதத்தினால் என் இரு நேத்திரங்களையும் பிடுங்கி எடுத்துச்சென்றதைப் போல் கனவுகண்டேன்; எனதாருயிர்நாதா அதைக் கவனிக்கும்பொழுது எனது நேத்திரமல்ல எனது நேத்திரங்கட்குச் சமமான புத்திரர்கட்கு உண்டாகும் விபத்தைப்போல் தோன்றுகிறது, ஆகையால் நம் பிள்ளைகள்மீது மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று சொல்லி வழக்கம் போலவே கனிபறித்துவரக் கானகம் சென்றனர்.

இவ்விதமிருக்க தேவியார் போனபின் பூர்வீக வைரியாகிய ஜூஜகனெனும் ஓர்பிராமணக் கிழவன் தனக்கடங்காத மனைவியைச் சந்தோஷப்படுத்துவதற்காக, ஓ கண்மணியே! நீ கவலைபடைய வேண்டாம்; உனக்கு ஊழியம் செய்வதற்கு தாதர்களை கூடிய விரைவில் தேடிவருகிறேன் என்னை வெறுத்து அலங்கோலப் படுத்தாதே எனச்சொல்லிப் புறப்பட்டு காடு மலை வனங்கடந்து வங்க கிரி கானகமடைந்து வெஸ்ஸந்திர ராஜனாகிய தபசியைக் கண்டு தாள்பணிந்து பெருமூச்சுவிட்டு திகைத்து நின்று இவ்விதமிறைஞ்சினான்.

ஓ ராஜாதிராஜ தவசிரேஷ்ட முனிவ, 'உமது பொக்கிஷங்கள் யாவற்றையும் திறந்து திரவியமெல்லாம் ஏழைகட்கு அளித்துவிட்டு சந்நியாசம் பூண்டிருப்பதைக் கேள்விப்பட்டு அடியேன் ஏதாவது வாங்கிச்செல்லலாமெனக் கருதி இங்குவந்தேன், சுவாமி தங்களது திருக்கரத்தால் அடியேனுக்கு யாதாவது ஈந்தருள வேண்டும் ஐயனே, என்றனர்.

அதைக்கேட்ட தபசி அன்பனே என்னிடம் இருந்த பொருட்கள் யாவற்றையும் யாசகர்கட் களித்துவிட்டு, இக்கானகமடைந்து தவமிருக்கின்றேன்; உனக்கிவதற்குவந்த பொருள்

ஒன்றும் என்னிடமில்லாதிருப்பதால், நான் மிகவும் வருந்துகின்றேன் என்று சொல்லிக் கவலையடைந்து நின்ற தபசியைப் பார்த்து பின்னும் அடிபணிந்து அய்யனே இச்சொல் தங்களின் சத்தியத்திற்கு தடங்கல்தானே, இல்லையென்று சொல்லலாமா? இது தர்மமா? வேறொன்றுமில்லாவிட்டால் உங்களது புத்திரர்களை எமக் கீய்ந்தருள்வீர்களாக என்றனர்.

அதைக்கேட்ட தபசி திகிலடைந்து ஓ, ஓ, இதென்ன மாயம்! பிள்ளைகளையும் கேட்போருண்டா? ஐயோ நானென்ன செய்வேன் என்னகெதி நேர்ந்தது ஆதிமூலமே! இதுவும் உன் திருவருள்தானே, என் திருநேத்திரங்கட் கொப்பான புத்திரர்களை யான் எவ்விதம் கொடுப்பேன், கொடாவிட்டாலும் மோசம் தானே கேட்பவர்கட்கு இல்லையென்று சொல்வது எனது சத்திய தர்மத்துக்கும், புத்தபதவியை அடைவதற்கும் தடங்கலாய் இருக்குமல்லவா, ஆகையால் கொடுக்கத்தான் வேண்டுமெனக் கருதி தனதிருகண்ணிலும் நீர் தாரை தாரையாக வடிய இரு பிள்ளைகளையும் வாரித்தழுவி உச்சிமோந்து என்னருமைக் சண் மணிகளே! இதோ நிற்கின்ற பெரியவருடன் செல்லுங்கள் எனச் சொல்லி இருவரையும் தத்தம்செய்து தாரைவார்த்தருளினர்.

நிற்க, கனிபறித்துவரக் கானகம் சென்றிருந்த தேவியார் தன் முன்னிலையில் தோன்றியுள்ள சிங்கம், யானை, கரடி, புலி முதலிய கொடிய மிருகங்கள் சீறி எதிர்த்துவரும் அபசகுனங்களைக் கண்டு வியப்புற்று, நடுங்கி யோசிக்கிறதாவது; ஆ, ஹா! இதென்ன ஆச்சரியம், கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல் ஒருநாளும் கண்டிராத கொடிய மிருகங்கள் சீறி எதிர்த்து வருகின்றனவே, ஐயோ, என்னசெய்வேன் ஆதி எம்பெருமானே! இதுவும் உனது திருவருள்தானே, பூர்வீகத்தில் யான் செய்த வினைப்பயனே, இதுவும் நினது சோதனையோ எனக் கூக்குரலிட்டு

நடுங்கி, ஒடுங்கி, ஓடிச்சென்று கணவனாகிய தபசியின் அருகில் நின்று பார்த்தபொழுது தனதருமைப் புத்திரர்கள் அங்கில்லாதிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு கணவரின் திருப்பாதங்களில் விழுந்து, அழுது பிரலாபித்து இருகரங்களையும் சிரமேல் குவித்து நமஸ்கரித்து எனதாருயிர் நாதா, கருணை வள்ளலே, முற்றுந்துறந்த முனியே, நம்பிள்ளைகள் எங்குசென்றது? சுவாமி! என் மனம் உருகித் தளர்கின்றது, என் பிராணன் இப்பொழுது அழிந்துவிடும் ஆதியெம்பெருமானே, இதெல்லாம் உன் திருவருள்தானோ, என்னை இவ்விதம் சோதிக்கவேண்டுமா? அடியாள் யாருமற்ற அனாதையானேன் பெருமானே, புத்திர சோகம் என்னை வாட்டுகின்றதே ஐயோ நானென்னசெய்வேன் எனஉளறி வெட்டிச்சாய்த்த வாழைமரம்போல் கணவனின் திருப்பாதத்தில் பேச்சுமூச்சற்று வீழ்ந்தாள். அதைக்கண்ட தபசி தேவியாரைத் தழுவி வாரி மார்போடணைத்து சிரமேல் கைவைத்து முகத்தில் ஜலம் தெளித்து எனதாவியே. சத்யபதிவிரதையே, எனதன்பே, சஞ்சலப்படாதே எழுந்திரு, என் சத்யதர்மத்தை நிறைவேற்றினேன் என்றருளினர். அதைக்கேட்ட தேவியார் சஞ்சலம்நீங்கி எழுந்து கணவனை நோக்கி ஐயனே அறிந்துகொண்டேன் உமது கருணைவெள்ளம் பிரமாண்டம் வரையிலும் பெருகிவிட்டது. நமது புத்திரர்களை யாசித்து வந்தவர்க்கு ஈந்திருப்பீர்களென [illegible]றேன் எ[illegible] பிராணநாதா இப்புண்ணி[illegible]தினால் உமது பிரார்த்தனையாகிய புத்த பதவியை பெற்றுக்கொள்வதற்கு யாதொ[illegible] தடையுமின்றி சரிவரவேண்டுமென்று அடியாள் பிரார்த்திக்கி[illegible]றேன் என புகன்றனள். இவ்விதமிருக்க அங்கு ந[illegible] வைபவத்தைக் கண்ணுற்ற தேவேந்திரன் அளவற்ற மகி[illegible]சியடைந்து பிரசன்னமாகி ஓர் கிழவடிவம்கொண்டு தபசி முன்னிலையில் தோன்றி, விண்ணவர் புகழும் அண்ணலே! கடுந்தவம் புரியும் வீரரே! முற்றுந் துறந்த முனிவ, அருள் நிறைந்த அண்ணலே, அடியேனுக்கேதாவது தந்தருளவேண்டு மையனே

என்றிறைஞ்சினர். அதற்கு முனிவர், அன்பனே உமக்குத்தரத் தகுந்த பொருள் ஒன்றும் என்னிடமில்லாதிருப்பதால் வருந்து கிறேன், ஆனாலும் உமக்குவேண்டிய பொருள் என்ன? இருந்தால் தருகிறேன் சொல் என்றனர். அதற்கு கிழவன், சுவாமி! அடி யேனுக்கு தங்களின் உத்தம பத்தினியை ஈந்தருளவேண்டும் என்றனர்.

அவ்வேளையில் தமது அருமை மனைவியாகிய மந்திரா தேவியின் முகத்தைப் பார்த்தனர். அப்பொழுது தேவியார் கணவனைப்பார்த்து ஓ, என் பிராணநாதா கேட்பவர்கட்கு இல்லை என்பது உங்கள் சத்தியத்திற்கு தடங்கல்தானே உங்கள் இஷ்டம் போல் ஆகுக. என்னைக் கேட்டுவந்தவர்கட்கு கொடுத்து விடுங் கள், இம்மகா புண்ணியத்தினால் ஒருதடையும் இன்றி தாங்கள் புத்தபதவியை அடைந்து உலக மக்களுக்கு நிர்வாண நிலையாகிய சதாகால சுகம்பெறும் சச்சிதானந்த பரமபதமடைய வழிதிறந் தருள வேண்டுமென்று அடியாள் பிரார்த்திக்கிறேன்.

அதைக்கேட்ட கருணைபொருந்திய முனிவர் தமதாவி யாகிய அருமை மனைவியை கிழவடிவத்தோடு வந்த இந்திரனுக்கு தாரைவார்த்தருளினர். அதுநிமிஷம் இம்மகா பூமியானது மூன்றுதரம் கிடுகிடென நடுங்கிற்று, உடனே கிழவடிவங்கொண்ட இந்திரன் மகா பதிவிரத சிரோன்மணியாகிய மந்திராதேவியின் கரத்தைவிட்டகன்று அந்தரமாய் நின்று தபசியை நோக்கி, ஓ தபசிரேஷ்டமுனிவ. கருணை, பொறுமை, ஈகை, தயவு, தாக்ஷணி யம், ஆகிய வெள்ளப்பெருக்கில் மூழ்கி இருக்கின்ற அகண்ட சச்சிதானந்த பிரமசொரூபியே உமது தரும பத்தினியாகிய லெக்ஷிமியை ஒருவருக்கும் கொடாதீர்கள். நானே தேவ லோகத்து இந்திரன் உங்களது தருமசிந்தனைக்கு மகிழ்ந்து யானிங்கு வந்தேன் உமது புத்தபதவியாகிய பிரார்த்தனை நிறை வேறிவிடக்கடவதாக என ஆசிகூறி இந்திரன் அகன்றனர்.

பின் சிலகாலம் அவ்வனத்திலே தவம் செய்து முனிவரும் அவர் மனைவியும், பிள்ளைகளுமாக இவ்வுலக வாழ்வை விட்டு அகன்று நான்காவது தேவலோகமாகிய, 'தொஸித்த'' தேவலோகத்தில் அவதரித்தார்கள், அத்தேவலோக வயதின்படி ஐம்பத்தேழுகோடி அறுபதுலெக்ஷம் வருடங்கள் வரையிலும் தேவாயுசுடன் வாழ்ந்திருந்தார்கள். இவ்விதமிருக்கப் பதினுயிர மண்டங்களிலும் வசிக்கின்ற பிரமன் முதலான இந்திராதி தேவர்களும், கருடர், காந்தருவர், கிருடர், கிம்புருடர், முனிவர்கள் ஆகிய சகலர்களும் நான்காவது தேவலோகத்துக்கேகி, அவ்விடத்தில் புத்தபதவியை அடையத்தகுந்த வீரோத்தமர்கள் யாராயினும் இருப்பார்களோ என பார்க்கலாயினர்.

பிறவிக்கடலில் விழுந்து, இறந்தும், பிறந்தும் தத்தளித்ததேயன்றி பிறவிக்கடலை நீந்திக் கரையேறமுடியாமல் அலைகடல் துரும்புபோல் பரதவிக்கும் உலக மக்களைக்கண்டு மனமிரங்கி நான் எதிர்காலத்தில் புத்தபதவியைப் பெற்று உலகமக்கள் நிர்வாண நிலையை அடையும் மார்க்கத்தை உபதேசம் செய்தருள வேண்டுமென்ற ஆவலோடு அனந்த ஜென்மங்களாகப் பிறந்து ஊக்கந்தளராமல் சகல தர்மங்களையும் செய்து நிறைவேற்றி கடைசியாக வந்து நான்காவது "தொஸித்த'' தேவலோகத்தில் "சந்துதித்த" தேவராஜனாக அவதரித்து, சுகமடைந்துவரும் போதிஸத்த பெரியாரைக் கண்டு இவர்தான் புத்தராகத் தகுந்தவரென அறிந்து முறையிடத் தொடங்கினார்கள்.

(தேவாராதனை)

பாளி.

காலோ யந்தே மஹா வீர
உப்பஜ்ஜ மாத்து குஜ்ஜியங்

ஸதே வக்கங் தாரயந்தோ
புஜ்ஜஸ்சு அமதங் பதங்,

பொருள்:

ஓ, கமலநாதா கருணைநிறைந்த கடலில் பள்ளிகொண்டிருக்கும் வீரோத்தமா, புத்தபதவியடைந்து உலக மக்களுக்கு தாமாமிர் தத்தை ஊட்டி பிறப்பிறப்பற்ற சதாகால சுகமடையவழி திறந்து காட்டியருள வேண்டிய காலமிதுவாகையால் மானிட லோகத்தில் வந்து தாய்வயிற்றில் அவதரித்து அருளவேண்டும் ஐயனே! என்று அஞ்சலியாய் நிற்கும் பிரமன் முதலான இந்திராதி தேவர்களைப் பார்த்து, ஓ தேவர்களே அஞ்சவேண்டாம்; கூடியசிக்கிரத்தில் பூவுலகில் அவதரித்து உங்கள் குறையை தீர்த்தருளுவேன் எனப் புகன்றனர்.

பின் தனது ஞானதிருஷ்டியால் முழு உலகங்களையும் சுற்றிப்பார்த்து முக்கியமான ஐந்துவித தானப் பொருத்தங்களை யும் உணர்ந்து இவ்விதம் நினைத்தார்.

பாளி.

காலங் தீ பஞ்ச தேசஞ்ச
குலங் மாத்தர மேவச்ச
ஏத்தேப் பஞ்ச விலோகத்வா
உப்பச் சந்தி ததா கதா.

பொருள்:

புத்தபதவியை அடைந்து உலக மக்களுக்கு அருள்புரியத்தகுந்த காலமது வே, புத்தர்கள் அவதரிக்கும் தீவேது, தேயமேது, இக் காலத்தில் உயர்ந்த குலமேது, எனக்கவதரிப்பதற்கு தகுந்த தாய் யார், அம்மாதாவுக்கு வயதெத்தனை, இவ்விதம் ஐந்து காரணங்

மொரா 27 ஆம் ம். 1934
குரும்புசிட்டி
தெல்லிப்பழை

களையும் பார்த்தபொழுது, தீவானது ஜம்புத்தீவென்றும், தேய மானது வடதேயமென்பதும், குலமானது சாக்கியர் குலமென்ப தும், அக்குலத்திலுதித்து ஐம்பத்தாறு தேசங்கட்கும் தலைநகராகிய "கபிலவஸ்து"புரியில் செங்கோல் நடத்திவரும் சுத்தோதன ராஜ னின் மனைவியாகிய மாயா,தேவியம்மையார் தனக்குத் தாயாகப் போவதையும், அவதரிப்பதற்குத் தகுந்த காலம் சரியாய் இருப் பதையும் கண்டுணர்ந்து, பின் தேவர்களின் வேண்டுகோளை அங்கீ கரித்து அவர்களுக்கு விடையளித்து அருளினர்.

பின் தேவகன்னியர் புடைசூழ்ந்து நந்தவனமேகி சரச சல்லாப லீலையில் அமர்ந்து கலியுகவருடம் 2477-க்குப் பின் எஸல மாதம் (சிங்கள மாதம்) தமிழ் ஆனி மாதம், பௌர்ணமி யன்று சந்துதித்த தேவராஜனுகிய போதிஸத்த பெருமான் தேவ லோகத்தை விட்டு அந்தர ஸ்தானமாகி அவனியில் அவதரித்த னர்.

அதாவது இப்புண்ணிய பரதகண்டத்தின் வடபாரிசத் தில் உள்ள இமயகிரியெனும் வெள்ளியங்கிரி மலைச்சார்பில், நீர் நிலவளம் பொருந்திய வட அயோத்தியாபுரியின் சாக்கிய நக ரெனும் உத்தரகோசலத்தின் தலைநகராய் விளங்கும் கபிலவஸ்து (கைலாயம்) எனும் நேபாள தேசத்தில் புகழ்பெற்ற கலிபாகு சக்கரவர்த்தியின் பரம்பரையில் செங்கோல் நடத்திவந்த சுத்தோ தன மகாராஜனுக்கும் அவர் மனைவி மகாமாயா தேவிக்கும் தவ சிரேஷ்ட புத்திரனுக அவதரித்தார்.

மாதா வயிற்றில் அவதரித்தல்.

மகா மேன்மைபொருந்திய போதிஸத்தர் பெருமான் மாயாதேவி அம்மையின் வயிற்றில் கருத்தரித்த வேளையில் தோன்றிய கனவு.

இந்திரன் மந்திரிகளாகிய நான்கு தேவர்கள் வந்து பஞ்சணையில் சயனித்திருந்த மகாமாயா தேவியாரை அந்தரமாய் தூக்கி எடுத்துச்சென்று ஹிமாசல வனத்தில் தோன்றியுள்ள சிகப்பு கல்லின்மீது, ஓர் சிவலிங்கமரமுண்டு அம்மரத்தடியில் வைத்ததாகவும், பின் தேவகன்னியர்கள் மகாமாயா தேவியாரை அவ்விடத்திலிருந்து "அனேதத்தவில" எனும் பொய்கைக்குத் தூக்கிச்சென்று ஸ்நானம் செய்வித்து தேவ ஆடையாபரணங்களை அணிவித்து அதன் சமீபத்திலுள்ள வெள்ளியங்கிரி எனும் விமானத்திற்கு கொண்டுவந்து பொன்மயமான பஞ்சணையில் தேவியாரை கிழ்திசையாக முகம் வைத்து சயனிக்கச் செய்த தாகவும், பின் துய்ய வெண்மையோடுகூடிய யானை தன் துதிக்கையால் வெண்புஷ்பம் ஒன்றை கொண்டுவந்து தேவியாரை திருவலம் சுற்றி வலதுபக்கமாக நின்று அப்புஷ்பத்தை தேவியாரின் அடிவயிற்றில் வைத்துச் சென்றதாகவும் கனவு கண்டனர்.

அது வேளையில் திடீர் என்று கண்விழித்து தேவியார் தான் கண்ட கனவை தனது கணவருக்குரைக்க, அதையறிந்த சுத்தோதன மன்னர் மறுநாள் காலையில் அறுபத்தி நான்கு சோதிட நிபுணர்களை வரவழைத்து தன் தேவியார்கண்ட கனவின் பலனைத் தெரிவிக்குமாறு இறைஞ்சி வேண்டினர். அதற்கு சோதிடர்கள் உரைத்ததாவது, ஓ மண்டலேஸ்வரா தங்களின் தேவியார்கண்ட கனவின் பலன் யாதெனில் இத்தேவியார் வயிற்றில் கர்ப்பம்தரித்து அதில் ஓர் குழந்தை ஜெனிப்பான்; அப் புத்திரன் இல்லறத்தில் வசித்தால் சர்வலோகங்களையும் ஓர் குடைக்கீழ் அடக்கி ஆளக்கூடிய ஏகச் சக்கரவர்த்தியாகுவார்; அவ்வித மாகாவிடில் இல்லறத்தைவெறுத்து துறவறங்கொண்டால் அண்ட பிண்ட சராசரங்கள் எங்கும் நடுங்க, பிரமன் இந்திராதி தேவர்களும் வணங்க, அறிவில் சுடராகி, புத்தியில் சிறந்த புத்தரென விளங்கி சர்வலோக நாயகர் ஆகுவார் எனப் புகன்றனர்.

சோதிடர்கள் சொன்னதைக் கேட்ட அரசன் மிகவும் சந்தோஷமடைந்து அச்செய்திகளை தேசமெங்கும் பறைசாற்றி மனோரம்யமாய் இருந்தார்.

இது இவ்விதமிருக்க தேவியாருக்கு பத்துமாதம் சம்பூர்ணமாய் இருப்பதால், தேவியாரின் மாதாபிதாக்கள் தேசமாகிய கோலிதேசத்துக்கு அழைத்துச்செல்ல வேணுமாய் மந்திரி பிரதானிகளுடன் ஜனங்கள் புடைசூழ, கொடி முதலிய ஆலவட்டங்கள் பிடித்து மேளவாத்யம் முழங்க வைகாசி மாதம் பௌர்ணமி விசாகத்தன்று எழுந்தருளி வருகையில் "கபிலவஸ்து" நகரத்துக்கும் கோலிதேச தெவுதகா நகரத்திற்குமிடையில் "லும்பினி" என்றோர் பூங்காவனமுண்டு, அதாவது அரிச்சந்தணம், சந்தணம், மந்தாரை, முல்லை. இருவாச்சி, கற்பகம், அகில், வாகை, வாழை, அழிஞ்சில், குங்குமம், பலா, அசோகம், செந்தூரம், இலந்தை, நாரத்தை, வேம்பு, நாவல், ஏலம், கடுகு, கோஷ்டம், மதுரம், புளி, திப்பிலி, ஆல், அரசு முதலிய விருக்ஷங்களும் வனமல்லிகை, மல்லிகை, முல்லை, சண்பகம், இருவாச்சி, செவ்வந்தி, நொச்சி முலிய செடிகளும், படர்ந்து நறுமணம் வீசுகின்ற "லும்பினி" எனும் பூங்காவனத்தில் புகுந்தார்கள்,

அவ்வனத்தில் அடிமுதல் நுனிவரை பூ பூத்திருக்கும் சிவலிங்க மரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மகாமாயா தேவியார் ஓர் புஷ்பத்தை பறிப்பதற்கு வலதுகரத்தை உயர்த்தியதும் வாது வளைந்து வந்தது, அவ்விதம் வளைந்துவரும் வாதைப் பிடித்ததும் இந்த அண்டபிண்ட சராசரங்களும் நடுங்க அன்னையையறியாமல் அவனிதனில் அருளாளன் அவதரித்தனர்.

அதாவது சுத்தாவாச பிரமலோகத்தில் வசிக்கும் ஓர் பிரமதேவன் அங்கு பிரசன்னமாகி, தங்கப் பட்டு சால்வையினால்

கோடி சூரியப் பிரகாசத்தோடு குதித்து இறங்கிய குழந்தையை தாங்கிக்கொண்டு மகாமாயா தேவியாரைப் பார்த்துச் சொன்ன தாவது.

தேவியே சஞ்சலம்வேண்டாம் சந்தோஷமாகுக, முழு உலகங்கட்கும் ஓர் கற்பகம்போன்ற மகானுபாவ சகல சம்பன்ன புத்திரர் உமக்குக் கிடைத்துள்ளார், முப்பத்திரண்டு அடையாளங் களும் நிறைந்துள்ள இக்குழத்தை தரும சொரூபியானவர் என வருளினர்.

பின் குழந்தை தேவேந்திரன் மந்திரிகளாகிய நான்கு தேவர்களின் கரங்களில் குதித்து நிற்கையில் இம்மகாபூமி சிங்க நாதத்துடன் பிளந்து மேல்நோக்காக எழுந்து பிரகாசித்துவரும் எழு தாமரை மலர்கள்மீது குதித்து நின்று தெற்குமுகமாக ஏழடி நடந்து சர்வலோகங்களையும் பார்த்து தனக்கு மேலான சிரேஷ்டர் ஒருவரும் இல்லாதிருப்பதைக் கண்டுணர்ந்து இவ் விதம் புகன்றனர்:

பாளி ஸ்லோகம்.

அக்கோ ஹமஸ்மி லோகஸ்ஸ
ஜெட்டோ ஹமஸ்மி லோகஸ்ஸ
ஸெட்டோ ஹமஸ்மி லோகஸ்ஸ
அயமந்தி மாஜாத்தி நத்தி தானி புனப்பஹோ.

பொருள்.

இவ்வுலகில் சகல மக்களுக்கும் பேரானந்த ஞானசாகரமாக நானவதரித்தேன், சகல மக்களுக்கும் நான் நீதிநெறிகளை அமைத்து சகல கலைஞானங்களையும் ஊட்டுவேன். சர்வலோக வாசிகட்கும் நான் போதனுபீடமாக அமைந்தேன். நான் உலகத்

தில் பிரதானியாகுவேன்; சர்வலோகங்கட்கும் பிரதானியாகுவேன், எனக்கு மேலான பெரியவர்கள் ஒருவரும் இப்பூவுலகில் இல்லை. இதுவே எனது கடைசி ஜென்மம், மறுபிறப்பெனக்கில்லை, இது உண்மை என்றருளினர்.

இப்பரந்த உலகின்கண்ணே குழந்தை அவதரித்த மாத்திரத்தில், கோடாகோடி பிரமதேவர்களும், இந்திரன் முதலான மற்றெல்லா தேவர்களும் புடைசூழ்ந்து மகாமங்கள கோஷ்டி செய்து ஆனந்த புஷ்பமாரி பொழிந்தார்கள்.

பின் அக்குழந்தையை மிக்க மகிழ்ச்சியுடன் அப்பெரும் பூங்காவனத்தைவிட்டு கபிலவஸ்து பட்டணத்திற்கு எழுந்தருளச் செய்தார்கள். போதிஸத்தபெருமான் அவதரித்த தினத்தன்று அதிசயமான அற்புதங்கள் முப்பத்திரண்டு சம்பவித்தது.

அதாவது எலியும் பூனையும் சகோதரமுறை கொண்டாடின, பசுவும் புலியும் ஓர் துறையில் தண்ணீர் அருந்தின, கீரியும் பாம்பும் ஓரிடத்தில் விளையாடின, தேவர்கள் அணிந்திருந்த ஆபரணங்கள் புதிதாக ஓர்வித ஒளியுடன் பிரகாசித்தன, குருடர்கள் கண்விழித்தார்கள், ஊமைகள் சங்கீதம் பாடினர்கள், செவிடர்கள் எல்லாம் சங்கீதம்கேட்டு ஆனந்தக் கூத்தாடினர்கள், இவ்வுலகத்தில் உள்ள மேளவாத்தியங்கள் தானே முழங்கின, இவுமல்லாமல் விசேடமாக கோலிதேசத்தரசனுக்கு "யசோதரா" என்றொரு புத்திரியும், சன்னன் எனும் மந்திரி குமாரனும், "கந்தகன்" எனும் ஓர் குதிரையும், போதி விருக்ஷமாகிய வெள்ளரசு மரமும் சுவாமி பிறந்த தினத்தன்றே உலகில் தோன்றின.

காலதேவல ரிஷியின் குமார தெரிசனம்.

அதாவது சுத்தோதன மன்னரின் குலகுருவாகிய மகானுபாவ சம்பன்ன அஷ்ட ஐஸ்வரியம் நிறைந்துள்ள காலதேவலரிஷி

என்றொரு தபசியுண்டு அந்த தவசிரேஷ்டர் குழந்தை பிறந்த தினத்தன்று, சுத்தோதனனின் அரண்மனையில் போஜனமருந்தி விடை பெற்றுக்கொண்டு இரண்டாவது தேவலோகமாகிய தொஸித்த தேவலோகத்துக்கு எழுந்தருளி, அங்குள்ள நந்த வனத்தில் யோகநிஷ்டையில் இருந்தார். யோகநிஷ்டை முடிந்து தபசி கண்விழித்துப் பார்த்தபொழுது சந்தோஷ சாகரத்தில் மூழ்கிக் கரையேறி ஆனந்த நடனமாடும் தேவர்களைக் கண்டு ஆச்சரியமடைந்து, ஓ தேவர்காள் ஒருநாளுமில்லாத திருநாளாக இன்று சந்தோஷமுண்டாகக் காரணம் யாதென வினவ அதற்கு தேவர்கள் வியப்புற்று, சுவாமி தங்கட்கு தெரியாததொன் றுண்டோ, ஆனாலும் சொல்லுகிறேன் மன்னிக்கவேண்டும்.

கபிலவஸ்து பட்டணத்தை அரசாளுகின்ற சுத்தோதன மகாராஜனுக்கு ஓர் குழந்தை பிறந்துள்ளார், அக்குழந்தை இவ் வுலக வாழ்க்கையைத் துறந்து அறிவில் சுடராய் புத்தியில் சிறந்து புத்தபதவியைப் பெற்று சர்வ ஜீவராசிகளையும் அன்பாக அணைத்து தர்மாமுதத்தை ஊட்டி, சகலரையும் நிர்வாண நிலை யாகிய பிறப்பிறப்பற்ற சதாகால சுகமுடைய சச்சிதானந்த பரம நிலையை அடையும் வழிகாட்டி அருளுவார்; அதையறிந்த நாங்க ளெல்லோரும் அக்குமாரனின் ஜனனோற்சவதினத்தைக் குறித்து ஆனந்த நடனமாடுகிறோம் சுவாமி! என்றனர்.

அச்செய்தியைக் கேட்டறிந்த முனிவர் அக்குமாரனை நானும் பார்க்கவேண்டும் எனக் கருதி, உடனே ராஜ அரண் மனைக்கு எழுந்தருளி அரசனைக் கண்டு அரசநாயகமே! உமக் கோர் புத்திரன் பிறந்திருக்கிறான் என்று கேள்வியுற்று இங்கே வந்தேன், குழந்தையைக் காணவேண்டுமென்று அறிவிக்கையில் அகமகிழ்ந்து அரசன் அந்தப்புரம் சென்று தமது புத்திரனைக்

கையிலேந்திவந்து தபசியருகில் நின்று ஓ மகனே! இதோ சுவாமி வந்திருக்கிறார், அவரை வணங்கு என்று சொல்ல, சகல கலைக் கியானங்களையும் தானேயுணர்ந்த ஞானதிருமேனியாகிய குழந்தை தனக்கு மேலான யாதொரு பெரியவர்களும் இல்லாதிருப்பதை யறிந்து தாமரை மலர்போன்ற திருப்பாதத்தை, அத்தபசியின் சிரசின்மீது வைத்தனர்.

அப்புதினத்தைக் கண்ட தபசி ஆச்சரியமுற்று, ஆசனத்தை விட்டெழுந்து குழந்தையை நமஸ்கரித்து நின்றனர்.

அஷ்டாங்க ஐஸ்வரியமும், சென்றகாலம் நாற்பது கற்பமும் எதிர்காலம் நாற்பது கற்பமும், ஆக எண்பது கற்பங்களிலும் நடக்கக்கூடிய சகலவிஷயங்களையும் தெரிந்த மகானுபாவசம்பன்ன தவசிரேஷ்டர் குழந்தையின் முப்பத்தி ரெண்டு அங்க அடையாளங்களையும் பார்த்து, ஓ மண்டலேஸ்வரா! இக்குழந்தை ஒருவரையும் வணங்கமாட்டாது, எதிர்காலத்தில் புத்தபதவியைப் பெறுவார், அதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை எனக் கூறி மிகுந்த சந்தோஷமடைந்தனர்.

இக்குழந்தை புத்தபதவியை அடையுங் காலத்தில் நான் இருப்பேனே, எனக்கு காணக்கிடைக்குமோ என்று ஞானதிருஷ்டியால் பார்த்தபொழுது, அதற்கு முன்தான் மரணமடைந்து பிரமலோகத்தில் அவதரித்துவிடுவதையும், புத்தபதவியடைவதை தமக்குக் காணமுடியாமல் போவதையும் கண்டுணர்ந்து அழுதனர்.

கண்ணீர்விடுவதைக் கண்ட அரசன் வினவியதாவது, ஓ சுவாமி! தாங்கள் முதன்முறை நகைத்ததும் இரண்டாம் முறையாகக் கண்ணீர்விட்டதும் யாதுகாரணம் என்றருளவேண்டும் சுவாமி, என் குமாரனுக்கு முன் சௌக்கியமும், பின் விபத்தும் வரப்போகிறதோ? முன் நகைத்து பின் கண்ணீர்விட்டதின்

கருத்தென்ன? அடியார்களுக்கு அறிவிக்கவேண்டும் சுவாமி என்று நடுக்கமுற்று நின்ற அரசனைப்பார்த்து ஓ மகாராஜனே இக்குமாரனுக்கு யாதொரு விபத்தும் நடக்கப்போவதில்லை, இக் குழந்தை புத்தபதவியை அடையப்போவதை எனக்கு காணமுடியாமல் போகுமேயென வருந்தி வாடுகிறேன் என்றருளினர்.

தவசிரேஷ்டர் போனபின்பு அரசனும், மந்திரி பிரதானிகளும் அளவற்ற சந்தோஷ சாகரத்தில் மூழ்கிக் கரையேறி மன மகிழ்வுகொண்டனர்.

நாமகரண மங்களோற்சவம்.

குமாரர் பிறந்த ஐந்தாம் நாள் அக் குமாரருக்கு நாமகரணம் சூட்டும்பொருட்டு, அக்காலத்தில் வேதபாராயணம் உணர்ந்துள்ள நூற்றி எட்டு வேதியர்களை அரண்மனைக்கு வரவழைத்து அங்கமைத்துள்ள ஆசனங்களில் வீற்றிருக்கச் செய்து சோடசோவுபசாரம் செய்தளித்து அறுசுவையுண்டியை ஆனந்தமுடன் அருந்தவைத்து, சந்தன தாம்பூலம் வழங்கியபின்னர் அவர்களில் ஜோதிட நிபுணர்களாகிய எட்டுப்பேரை (பிராமணர்கள்) கொலுவிருத்தியபின் குழந்தையை சுகந்த ஜல ஸ்நானம் செய்விந்து புனுகு, சவ்வாது, அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களைம் பூசி, நெற்றியில் திலகமிட்டு, பட்டாடையணிந்து குழந்தையை வேதியர் கொலுவில் கொண்டுவந்து ஓவ்வொருவரிடமும் சுற்றிக்காண்பித்து அரசன் சொல்லுவான்:—

வேதோத்தமர்களே! இக்குழந்தைக்கு ஓர் திவ்ய நாமகரணம் சூட்டவேண்டும் என்று சொல்லி மந்திரி பிரதானிகளுடன் அரசன் அமர்ந்தபின்னர், குமாரரின் அருள் நிறைந்த முகமும், முப்பத்திரெண்டு அங்க லெக்ஷணமும் அமைந்துள்ள அழகிய சரீரமும், ஜோதிமயமான ஒளியும் நிறைந்த குமாரனைக்

கண்ட வேதியருள் முதியோர்களாகிய எழுவரும் அவரவர்களின் கரங்களை உயர்த்தி இரண்டிரண்டு விரல்களைக் காண்பித்து புகன்ற தாவது:

விண்ணவர்கள் புகழும் மண்டலேஸ்வரா! இக்குழந்தை முப்பத்தி ரெண்டு அங்கலக்ஷணங்களும் பொருந்தி இருக்கிறது இப்பேர்பட்ட அங்கலெக்ஷணங்கள் நிறைந்த குமாரர் இல்லறத்தில் வசிக்கநேர்ந்தால் தருமமெனும் குடையின்கிழ் வீற்றிருந்து ஐம்பத்தாறு தேசங்களையும் அடக்கி ஏகச் சக்கரவர்த்தியாய் அரசாள்வார். அவ்விதமாகாமல் உலக ஆசையை வெறுத்து துறவுபூண்டொழுக நேர்ந்தால் அண்டபிண்ட சராசரங்களெங்கும் போற்ற அருளொளியாகிய சர்வக்ஞ புத்தர் ஆகுவா ரென்றனர்.

அவர்கட்குப் பின் விருத்தாப்பியரும் உத்தம புண்ணிய புருடருமாகிய "கொண்டஞ்ஞ" பிராமணர் குழந்தைக்கு அமைந்துள்ள முப்பத்தி ரெண்டு அங்கலெக்ஷணங்களையும் வலதுபாகம் சுற்றி நெற்றியில் அமைந்திருக்கும் ஊர்ணரோம அடையாளத்தையும் கண்டு தனக்குள் அளவில்லா ஆனந்த வெள்ளம் பொங்கி ஆச்சரியமடைந்து அரசனைநோக்கி ஓ மகாராஜனே! இக்குமாரர் இம் மாயாபிரபஞ்சத்தை வேரறுத்து துறவு பூண்டு துன் மார்க்க வழியை அக்கினிக்கு ஆகுதிசெய்து சன்மார்க்க வழி யாகிய பிறப்பிறப்பற்ற நிர்வாண நிலையை உணர்ந்து அறிவாகிய புத்தர் ஆகுவதில் யாதொரு சந்தேகமுமில்லை எனப் புகன்றனர், அவ்விதம் புகழ்வதோடு தனது வலக்கரத்தின் ஓர் விரலையும் உயர்த்திய வண்ணமாய், அரசனே! இக்குமாரர் ஞானகீர்த்தி சம்பன்ன சிரேஷ்டராகி உலக மக்கட்கு உண்மையான அர்த்த சித்தியை ஓதியருளுவதால் இக்குமாரனை "ஸித்தார்த்தர்" என அழைக்கவேண்டும் என்றருளினர்.

அதைச் செவியுற்ற சுத்தோதன மன்னன் வினவியதாவது, ஓ மறையவரே இக்குமாரன் துறவியாகும் காலத்து உண்டாகும் அடையாளம் யாது என்று அருளவேண்டும் சுவாமி, அதற்கு அரசனே கேளும் இவ்வுலகத்தில் மானிடர்களுக்குண்டாகும் சத்வித குஷ்ட வியாதிகளும் விகார ரூபமும் அஷ்ட குன்மங்களாகிய அசாத்திய ரோகங்களும், வயோதிக கிழவடிவமும், பிணமும், சந்நியாசியும் ஆகிய அபசகுணங்களைக் கண்டமாத்திரத்தில் இல்லற வெறுப்பும், துறவறவின்பமும் கொண்டவராவார் என்று கொண்டஞ்ஞர் கூறினதைக் கேட்ட சுத்தோதனன் தமது புதல்வர் புத்தபதவியை அடைவதைவிட சங்கு சக்கராயுததாரியாய் சக்ரவர்த்தி பீடத்தில் வீற்றிருந்து முழு உலகங்களையும் அடக்கியாள்வது உஜிதமென கருதியவராகி கொண்டஞ்ஞர் கூறிய அபசகுணங்களை தன் புத்திரனுக்கு தோன்ருவண்ணமாய் ஒழுக்கமுறையோடு பாதுகார்ப்பது தமது கடமையென உணர்ந்து பெருத்த செல்வத்தோடு மகனைப் பாதுகாத்து வந்தனர்.

மாயாதேவியின் அந்திய காலமும் ஸ்ரீ ஸித்தார்த்தரின் ஆக்ஷியும்.

அதாவது ஸ்ரீ ஸித்தார்த்தர் மாயாதேவியின் கர்ப்பத்தில் கருதரிப்பதற்கு முன்பதாகவே தேவலோகத்தில் "சந்துதித்த" தேவராஜனக இருக்கும்பொழுது தமது ஞானதிருஷ்டியால் பார்த்து உனர்ந்ததாவது :—

நானவதரிக்கும் மாதா வயிற்றில் மற்றொரு சகோதரர் பிறக்குமாவெனப் பார்த்தபொழுது மாதாவுக்கு மாதம் பத்தும் நாள் ஏழும் இருப்பதால் மற்றொரு சகோதரரும் பிறக்க மாட்டார்கள் என்றறிந்து மாயாதேவி அம்மையாரின் கர்ப்பத்தில்

கருதரித்தனர். சரியாய் மாதம் பத்தும் சென்றபின் இவ்வுலகின் கண்ணே ஸ்ரீ ஸித்தார்த்தர் அவதரித்த ஏழாம் நாள் மாயா தேவியார் மரணமடைந்து தேவலோகத்தில் மாத்துரு தேவராஜனுகப் பிறந்தனர்.

நிற்க, மகாமாயா தேவியின் சகோதரியாகிய "பிரஜாபதி கோத்தமி" இம்மாயா தேவியைப்போல் அழகில் சிறந்தவளாய் இருந்தார். அவர்கள் இருவரும் பூர்வீகத்தில் செய்த புண்ணியத்தினுல் உலகில் சிரேஷ்ட புத்திரர்களை பெறுவார்கள் என்று சுத்தோதனர் அறிந்திருந்ததினுல் அவர்கள் இருவரையும் திருமங்கல்யதாரணம் செய்திருந்தார். மகாமாயா தேவி மரணமடைந்த பிறகு தன் வயற்றில் பிறந்த நந்தகுமாரனை தாதிகள் வசம் ஒப்பிவித்து தன் தமக்கையின் புத்திரனுகிய ஸித்தார்த்தரை மிகவும் அன்புடன் பாதுகாத்துவந்தனர் மாயாதேவி மரணமடைந்த பின்பு, பிரஜாபதிகோத்தமியை தன் மனைவியாக அமைத்து இன்னும் அநேக மாதர்களைச் சேர்த்துக்கொண்டு தனது புதல்வனை மிகவும் அன்புடன் பாதுகாத்து வரும்படி கட்டளை இட்டனர்.

விதை விதைக்கும் நாளில் கண்ட மகிமை.

கௌதமகோத்திரத்தில் உதித்தமையால், கௌதமர் என்றும் உண்மையான அர்த்தம் சித்திப்பதினுல் ஸித்தார்த்தர் என்றும் விளங்கா நின்ற ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக பூர்ணச்சந்திரனைப்போல் தினேதினே விர்த்தியடைந்து வளர்ந்துவரும் நாளையில் குமாரனுக்கு வயது ஐந்தாயிற்று. இங்ஙனமிருக்க ஓர் நாள் மந்திரி பிரதானிகள், வேதவேதியர் புடைசூழ சுத்தோதன மகாராஜன் தன் வயல் விதைக்கும் நாளாகையால் அன்று குமாரனை அங்கு எழுந்தருளச் செய்தனர்.

அவ் வயல்கரையில் தோன்றியுள்ள நவ்வாமரத்தடியில் ஓர் ஆசனமமைத்து அவ்வாசனத்தில் திருக்குமாரனை இருத்தி, தோழிமார்களைச் சுற்றும் காவல்வைத்து, அரசனும் மந்திரிமார்களும் வயலில் இறங்கி, அரசன் முன்னணியிலும் மற்றவர்கள் பின்னுமாக வயலை உழுதுவரத் தொடங்கினார்கள். சற்று நேரத்திற்குப் பின் லெக்ஷக்கணக்கான மாதர்கள் புடைசூழ ஆசனத்தில் அமர்ந்திருந்த அருளாளன், ஆகாயமார்க்கமாக ஏறிச்சென்று அந்தரத்தில் நின்றனர்.

அவ்வாச்சரியத்தைக் கண்ட தோழியர்கள் நடுக்கமுற்று அண்ணாந்துபார்த்து, ஐயோ இதென்னமாயம், அரசனே சடுதியில் வாருங்கள் என்று கூக்குரலிட்டனர். தாதியர்கள் சத்தம் கேட்ட அரசன் திகிலடைந்து, மந்திரி பிரதானிகளுடன் விரைவில் ஓடிவந்து ஆகாயத்தில் பார்க்கும்பொழுது கோடி சூரியப் பிரகாசத்தோடு அந்தரத்தில் நிற்கும் குமாரனைக் கண்டு அரசன் மதிமயங்கி அழுது, கண்ணீரோடு ஐயோ என் மகனே! நீ இன்றைக்கே புத்தராகிவிட்டாயோ! மகனே எனக்கெதற்காக இவ்விதம் காட்டுகிறாய் உனது தாய் மாயா தேவி இம்மகிமையைக் கண்டால் அவளின் ஜீவியத்தை உனக்குக் கொடாளோ மகனே, மாயா ஆயனே! மலர்மேல் நடந்த குமரனே! கீழே இறங்கிவா மகனே, உனது தாமரை மலர்போன்ற திருப்பாதத்தை நமஸ்கரிக்கின்றேன் என சாஷ்டாங்கமாக நின்ற அரசன் கரத்தில் குமாரன் குதித்து நின்றனர்.

பின்பு குமாரனை அதிக அலங்காரத்துடன் அரண்மனைக் கெழுந்தருளச்செய்து அன்றுமுதல் குமாரனை பெருத்த காவலோடும், செல்வத்தோடும் பாதுகாத்துவந்தனர்.

விஸ்வகர்மாவின் புஷ்கரணி.

ஸ்ரீ ஸித்தார்த்தரின் ஏழு, எட்டு வயதில் பிதாவாகிய சுத்தோதனர் தனது புத்திரன் ஜலக்கிரீடை செய்யும்பொருட்டு ஓர், தடாகம் வேண்டுமென்று உத்தேசித்து, மந்திரி பிரதானிகளை அழைத்து ஓ மந்திரிமார்களே! நமது தேசத்தில் ஓர் அழகிய குளத்தை வெட்டி தயார்செய்யுங்கள் என ஆக்ஞாபித்தார்.

அதுவேளை அச்செய்தியை ஞானதிருஷ்டியில் உணர்ந்த தேவேந்திரன் விஸ்வகர்மாவை யழைத்து, ஓய் விஸ்வகர்மனே மற்றவர்கள் ஸ்னானம் செய்யுமிடம் ஸ்ரீ ஸித்தார்த்தருக்கு உகந்ததல்ல, ஆகையால் நீர் இப்போதே கபிலவஸ்து நகருக்குச் சென்று திரிலோகங்களிலும் சிருஷ்டித்திரா தவண்ணம் நவரத்னதிகளினல் ஜொலிக்கப்பட்ட புஷ்கரணி ஒன்றை சிருஷ்டித்து வாருமென்று உத்தரவளித்தார். தேவேந்திரன் கட்டளையை சிரமேல்கொண்ட விஸ்வகர்மாவானவர் அரைநொடியில் கபிலவஸ்து நகரில் சென்று இளநீர்போன்ற ஜலமும், குளத்தின் விளிம்புகள் யாவும் சுவர்ண மயமாகவும். மணலுக்குப்பதிலாக முத்துகளைப் பரப்பி, வெள்ளி மயமாகிய வத்தைகளும் அமைத்து அதிக அலங்கிருதமாய் திவ்யக் குளத்தை சிருஷ்டித்து, தேவலோகம் போய் சேர்ந்தனர்.

இவ்விதமிருக்கக் கபிலவஸ்து நகரவாசிகள் அரசனின் ஆக்ஞைபடி மண்வெட்டி, கூடை முதலிய ஆயுதங்களோடு சென்று பார்த்தவேளையில் ஒருகாலத்திலும் கண்டிராத நறுமணங் கமழ் தாமரை மலர் முளைத்தெழுந்த திவ்ய குளத்தைக் கண்டு, ஆச்சரியமடைந்து ஜனங்களெல்லாம் அரண்மனைக்கோடிச்சென்று அரசனை வணங்கி, ஐயனே! அடியார்கள் அங்கு செல்வதற்கிடையில் திவ்யகுளமொன்று தானே தோன்றியிருப்பதைக் கண்டோம் என்றனர், அதைச் செவியுற்ற சுத்தோதன ராஜன் சென்று

பார்த்தபொழுது திவ்யாலங்கிர்தமான புஷ்கரணியைக் கண்டு அளவில்லா ஆனந்தமடைந்து தன்மகனேடொத்த அநேக ராஜ குமாரர்களைச் சேகரித்து, தனது குமாரனுடன் ஜலக்கிரீடை செய்யுமாறு ஏற்படுத்தினர். சுத்தோதனன் ஆக்ஞைப்படி ராஜ குமாரர்களுடன் கூடியாடி விளையாடிவரும் ஸித்தார்த்த கௌதமர் பாலச்சந்திரனைப்பொல் தினேதினே விருத்தியடைந்து வளர்ந்து வந்தனர்.

இவ்விதமிருக்க ஸ்ரீ ஸித்தார்த்தர் முன் அனந்தஜென்மங் களாகப் பிறந்து செய்துள்ள அளவற்ற புண்ணிய தருமங் களின் மகிமையினுல் உண்டான புதினங்களாவன:

சகல கலைகளும், அபாரமான ஞானமும் தானே கற்றுக் கொள்ளக்கூடிய சர்வ சாஸ்திர சம்பன்ன வல்லமையுடையவ ராயும், உத்தம பராக்கிர வீர கெம்பீர புருடத்தன்மை யுடைய வராயும் அவதரித்தனர்.

ஸ்ரீ ஸித்தார்த்தராகிய போதிஸத்தர் சர்வ ஜீவராசிகளின் மீது ஜீவகாருண்ய பரிதாபம் மேலிட்டதினுல், தான் புத்த பதவியையடைந்து இவ்வுலகத்தில் ஆதியந்தமில்லாத பிறவி யெனும் கடலில் விழுந்து இறந்தும், பிறந்தும் தத்தளிக்கும் பிராணிகட்கு உபதேசம்செய்து சர்வ ஜீவராசிகளும் நிர்வாண நிலையாகிய சச்சிதானந்த பரம நிலையை அடையும் வழியைத் திறந்து காட்டவேண்டுமென்ற எண்ணத்தோடே பெருமான் பிறந்த பிறப்புகளும், அப்பிறப்புகளில் அடைந்த துயரங்களும் வரையவெனில் அரிதிலும் அரிது.

இவ்விதமிருக்க பூர்வீகத்தில் அவதரித்த ஸ்ரீ தீபங்கர புத்தபகவான் காலத்தில் சுமேதரிஷியாய் பிறந்து திருவருள் வரம்பெற்றுக் கொண்டதாவது:

ஸ்ரீ புத்தர் புராணம்.

சன்மார்க்கசபை
ஆரம்பம் 1934
குரும்பசிட்டி
தெல்லிப்பழை

சுமேதரிஷியே நீர் இன்றுமுதல் என்னைப்போல் 24 புத்தர்களைக் கண்டு அவர்களின் வரங்களையும் பெற்று 25 வதாக கலியுகத்தில் கௌதம புத்தராக அவதரிப்பீர் என்ற திருவருள் வாக்கின் கிருபையாலும், தான் செய்துள்ள புண்ணிய மகிமை யாலும் கடைசிமுறைஸ்ரீ ஸித்தார்த்தராக அவதரித்த ஜென்மத்தில் பிரமன் முதல் இந்திராதி தேவர்களிலும் மேன்மையுடையவராக அவதரித்த ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் சர்வ சௌகரிய ராஜபூஜித ராக வளர்ந்துவந்தனர்

அவ்வித மிருந்துவருகையில் பிதாவாகிய சுத்தோதனர் தமது புத்திரன் முன் ஜோதிடர்கள் கூறிய நான்கு அடையாளங் களைக் கண்டு இல்லற வெறுப்பும், துறவற இன்பமும் உண்டாகி விடுவாறென் றறிந்திருந்தமையால் தன்புத்திரனை அவ்விதம்போக வைக்காமல் சக்கரவர்த்திப் பட்டத்தில் வைக்கவேண்டுமென்ற ஆவலோடு முன் கூறிய அடையாளங்கள் குமாரர் கண்ணில் படா மல் மிகுந்த பிரயாசையோடு குமாரனைக் காவலில் வைத்தது மல் லாமல் ஐந்து, ஏழு, ஒன்பது மாடிகைகளுள்ள மூன்று அரண்மனை களை அமைத்து அங்கு ஆயிரக்கணக்கான குமாரர்களும், குமாரி களும், தாதிதாதர்களும், சூழ்ந்து தேவேந்திரனுக் கொப்பாக வாழ்ந்து வளர்ந்துவரும்படி செய்தனர்.

ராஜ அரண்மனை.

மூப்பு, பிணி, சாக்காடு, சந்நியாசி ஆகிய நான்கு அடை யாளங்களும் ஸித்தார்த்தருக்கு தோன்றுவண்ணம் ஊர்சுற்றிவர நான்கு சதுரத்திற்கும் காததூரவழி சுற்றளவுள்ள கோட்டை யைக் கட்டி அக்கோட்டைக்குள் ஸித்தார்த்தரை பஞ்சகாம சம் பத்துடன் இருந்துவரச் செய்யவேண்டுமென்ற ஆசை மேலீட்டி யதினல் பொன், வெள்ளி, முதலிய பஞ்சலோகங்களைக் கொண்டு

பெருங் கோட்டையைக் கட்டி அக்கோட்டையினுள் ஐந்து, ஏழு ஒன்பது மாடிகைகளுள்ள வசந்தே, எமந்தை, நின்பாண எனும் பெயருடன் மூன்று அரண்மனைகளை ஸ்தாபித்தனர்-

எமந்தை என்பது குளிர் பனிகாலங்களில் வசிப்பதற்கும் வசந்தை என்பது உஷ்ணகாலத்தில் வசிப்பதற்கும் நின்பான என்பது மழைகாலங்களில் வசிப்பதற்குமாக ஒவ்வொன்றிலும் சித்திர வர்ணிப்புடன் அமைத்திருந்தனர். அக் கோட்டைக்குள் ஸ்ரீ ஸித்தார்த்தர் திவ்விய குமாரனைப்போல் வளர்ந்துவந்தார்.

அவ்விதம் பூர்ண சந்திரனைப்போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த ஸித்தார்த்தருக்கு வயது பதினாறு ஆயிற்று. குமாரர் தருணபருவ மடைந்திருப்பதால் சுத்தோதனர் தன் புத்திரனுக்கு விவாஹம் செய்துவைக்க வேண்டுமென்ற ஆவலோடு மந்திரி பிரதானிகளை அழைத்து ஓ! மந்திரிமார்களே! நமது குமாரனுக்கு விவாஹ காலம் வந்திருப்பதினால் என் மகனுக்குகந்த ஓர் கன்னியைத் தேடவேண்டுமென்று கூடிப்பேசி ஆலோசனை செய்து ஐம்பத்தாறு தேசங்களிலுமுள்ள ராஜகுமாரிகளுடைய ஜாதகப் பொருத்தங்களை ஒத்துப் பார்த்தும் பொருத்தங்கள் ஒன்றும் அமையாமல் இருப்பினும் கோலி தேசாதிபதியாகிய "சுப்ரபுத்த" ராஜனின் சிரேஷ்ட புத்திரியின் ஜாதக முறைகளும், முகூர்த்தங்களும் ஸ்ரீ ஸித்தார்த குமாரரின் ஜாதகத்தோடு அமைந்திருப்பதை யறிந்த சுத்தோதன ராஜனும் மந்திரிபிரதானிகளும் அதிக அகமகிழ்வு கொண்டனர்கள்.

ஸ்ரீ ஸித்தார்த்தர் முன் எண்ணிறந்த ஜென்மங்களிலும் பிறந்து, புண்ணியம் செய்துவரும்பொழுது அந்தந்த ஜென்மங்களிலெல்லாம் அவருக்கு மனைவியாகப் பிறந்து சகல தர்மங்

களையும் செய்து நிறைவேற்றுவதற்கு துணையாயிருந்த சத்தியாகிய சர்வேஸ்பரி, கோலிதேசத்தரசனுக்கு தவசிரேஷ்ட புத்திரியாய் பிறந்திருந்தனர். சுப்ரபுத்த ராஜனின் புதல்வி, (பத்திரகார்த்தியாயணி) அல்லது "யஸோதரா" எனும் குமாரத்தியை தன் புத்திரனுக்கு மணமுடித்து வைக்கும்படியாக கோலிதேசத்தரசனுக்கு சுத்தோதன மன்னர் திருமண ஓலை யனுப்பி வைத்தனர், அவ்வோலையைக்கண்ட சுப்ரபுத்தராஜன் மறுத்துவிட்டு பதில் ஓலை யனுப்பியதாவது :—

ஓ, சுத்தோதன மகாராஜனே! உமது புத்திரன் தவத்திலும், அழகிலும் யாதொரு குறைவும் இல்லாவிட்டாலும், சில்ப வல்லபத்திலும், கல்வியிலும் நிர் மூடராய் இருக்கிறார். யாராவது எதிரிகள் யுத்தம்செய்ய வருவார்களேயானல் இவர் ஜயம்கொள்வது எங்ஙனம் ஆகையால் என் புத்திரியை ஒருக்காலமும் தரமாட்டேன் என்று சொல்லி யனுப்பிய ஓலையைப்பார்த்த சுத்தோதன மகாராஜன் வியப்புற்று தன் மகனையழைத்து ஓவென்று கதறி எனது அருமை மகனே! நீ சக்கரவர்த்தி திருமகனாய் அவதரித்தும் என்னபயன், உனக்கு கல்வி இல்லாததினல் உன்னை நிர்மூடனென்று பரிகசித்தானே, இது என் காதில் விழலாமா? என்றுசொல்லி நடுக்கமுற்றுநின்ற தத்தையைப் பார்த்து ஸித்தார்த்தர் எழுந்துநின்று எனது பிதாவே சஞ்சலமடையவேண்டாம், நான் செய்யவேண்டிய கல்வியும், வித்தையும் என்னவென்று அறிவிக்கவேண்டும், தந்தையே! என்று வினவ குமாரரைப் பார்த்து தந்தை சொல்லுவார்; அரச சபையில் இருக்கும் பெரிய வில்லை வளைத்தவருக்கு குமாரத்தியை மணமுடிக்கலாம் என்றனர்.

அதற்கு புத்திரன் ஆ, ஆ, பிதாவே அப்படியானல் இன்றைக்கு ஏழாம்நாள் நான் அந்த வில்லை வளைப்பேன், இச் சம்புத்தீவிலுள்ள வல்லப நிபுணர்களாகிய குமாரர்களை யெல்லாம் அரச சபைக்கு வரும்படி ஓலையனுப்புங்கள் என்று சொல்வதைக் கேட்ட அரசனும் மந்திரி பிரதானிகளும் அகமகிழ்ந்து கோலி தேசாதிபதியாகிய சுப்ரபுத்த மன்னனுக்கு அறிவித்தனர்.

அவ்வோலையைக் கண்ட சுப்ரபுத்த ராஜனும் சந்தோஷமடைந்து அப்படியே ஆகுக எனச்சொல்லி இரு தேசவாசிகளும் ஒன்றுகூடிப்பேசி ஆலோசனைசெய்து, ஐம்பத்தாறு தேசங்கட்கும் பறைசாற்றினர் அப்பறை ஓசையைக்கேட்ட அறுபதினுயிரம் க்ஷத்திரியர்களும் நாற்பதினுயிரம் ராஜாக்களும் விஜயம் செய்தார்கள்.

வில் வளைத்தல்,

அரசர்கள் கூடியிருந்த அப்பெருங் கூட்டத்தின் மத்தியில் அமைத்திருந்த ஆசனத்தின்மீது குமாரர் ஏறி நின்று சபையோர்களை நோக்கி ராஜகுமாரர்களே! நானே யாதொரு படிப்புமில்லாதவன், ஆனாலும் எனது மகிமையைச் சற்றுக் காண்பிக்கிறேன் பாருங்கள், ஒரு படிப்பும் இல்லையென்று நிந்தனையாக நினைத்திருந்த அரசர்களே பாருங்கள் ஐம்பத்தாறு தேசங்கட்கும் அதிபதியாகிய சுத்தோதனர் புத்திரன் ஸித்தார்த்தர் நானே' என் வல்லமையைப் பாருங்கள் என்றுசொல்லி அறுபதினுயிரம் பராக்கிரம புருடர்களாலும் தூக்கவும், அசைக்கவும், வளைக்கவு முடியாத பெரிய தனுசை தமது இடதுகாலின் பெருவிரலால் மிதித்து வலதுகாலால் நானேற்றி விட்டமாத்திரத்தில் அந்த அம்பானது மணப்பந்தலின் நான்கு மூலைகளிலும் நாட்டியிருந்த வாழை மரங்களைத் துளைத்து மேலேறிச்சென்று ஆகாச நக்ஷத்

திரங்கள் தெரியாவண்ணமாய் அபரிதமான வித்தைகளை செய்து காண்பித்தனர்.

பின் அந்த அம்பானது பிரமாண்டம்வரை ஏறிச்சென்று சக்கரம்போல் சுற்றிக்கீழிறங்கிவந்து தனது பாதத்தடியில் வீழ்ந்தது. அபரிவிதமான வில்வித்தைப் பிரயோகத்தைக் கண்டு இடி விழுந்ததைப்போல் குமாரர்களெல்லாம் திடுக்கிட்டு, வாடி வதங்கி உருண்டு, புரண்டு, திரண்டு எழும்பி, கரங்குவித்து அடிபணிந்து ஓ, அவதார புருஷரே ஸ்ரீமங் நாராயண மூர்த்தியே ! ஆயிரத்தெட்டண்டங்களையும் அடக்கி ஆளவந்திருக்கின்ற ஆண்டவனே அடியார்கள் தங்கட்கு அபயமய்யா சுத்தோதனபுத்ரா, சுப்ரதீபா மாயாதேவியின் வயிற்றில் பிறந்த ஆயனே, எங்களை ஆண்டருளுமய்யா மெய்யனே, எனக் கூக்குரலிட்டு வணங்கி நின்றார்கள்.

முன் தமது மகளைக் கொடுக்க மாட்டேனென்ற கோலி தேசத்தரசன் ஓடிவந்து சாஷ்டாங்கம்பண்ணிச் சொல்லுகிறார். சாக்கிய குலத் ததிபதியே என்னை மன்னிக்கவேண்டும், உங்களது புத்திரனுக்கு எனது புத்திரியை இதோ தந்துவிட்டேன் என்றனர். அவ்வார்த்தையைக்கேட்ட நாற்பதினாயிரம் க்ஷத்திரியர்களும் அவரவர்கள் புத்திரிகளையும் தருகிறோமென்றனர்கள்.

பின் சுத்தோதனர் சந்தோஷ சாகரத்தில் மூழ்கிக் கரையேறியவராய் தன் தேசத்தையடைந்து அரண்மனைக்குச் சென்று மந்திரிபிரதானிகளுடன் ஆலோசனை செய்து ஐம்பத்தாறு தேசங்கட்கும் திருமண ஓலை அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தபின் தாதியரை அருகிலழைத்து ஓ, தாதியர்களே ! நமது குமாரருக்கு விவாகம் நடக்கப்போவதையும், அப் பெண்ணின் புகழையும் எடுத்துரைக்கும்படி ஆக்ஞாபித்தனர், அந்த ஆக்ஞையை சிரமேற்கொண்ட தாதியர்கள் ஸ்ரீ ஸித்தார்த்தர் இருக்கும் அரண்மனைக்கு

சென்று கூறியதாவது, எங்களது அரசநாயகமே! திருமேனியே! இன்புற்றுக் கேளுங்கள் உங்களின் தந்தை கட்டளைப்படிக்கு நாம் சொல்வதைக் கேட்டு சந்தோஷப்படுவீர்களாக அதாவது, கோலி தேசாதிபதியின்புத்திரி பதிவிரதா சிரோன்மணியாகியயஸோதரா தேவியை, உங்களுக்கு மணமுடிக்கப் போகிறார். அந்த அரசியின் லெக்ஷணங்களை சற்றே புகழுகிறோம் கெளுங்களென கூறத் தொடங்கினார்கள்.

அவ்வரச புத்திரி மாந்தளிர் போன்ற பாதங்களும், முத்துக்கள் பதித்த பவளக்கணைபோன்ற விரல்களும் இலவன் கிளைகள் போல் முழங்கால்களும்' இளவாழைத் தண்டைப்போல் துடைகளும், உடுங்கைப்போன்ற இடையும், நீர்சுளிபோல் தொப்பிளும், எறும்பு தாரை விட்டாற்போல் ரோம ரேகைகளும் பத்தரைமாற்று தங்க கலசங்கள்போல் ஸ்தனங்களும், காந்தன் பூவைப்போல் கைகளும், சங்கைப்போல் கழுத்தும், செந்தாமரை இதள்போல் கண்களும். சிங்காணி வில்லைப்போல் புருவங்களும் மூன்றாம்பிறைச் சந்திரனை போல் நெற்றியும், வண்டோடுபோல் தலைமயிரும், குமிளம் பூவைப்போல் நாசியும், கோவைப்பழம் போல் அதரங்களும், நக்ஷத்திரங்கள் போல் பற்களும் பூர்ணச்சந்திரனைபொன்ற முகமும், நாறுமாற்று அபரஞ்சித பொன்னைப் போல் மேனியும் உடையவள், சித்திரப் பதுமைபோல் ஜொலிக்கப் பட்டவள், நடையிலோ அன்னத்தைச் ஜெயித்தவள், வார்த்தையிலோ குயிலை ஜெயித்தவள், நகைப்பாளானால் மின்னலும் தோற்கும், நீதியிலோ சாஸ்திரங்களை ஜெயித்தவள், நடத்தையிலோ பதிவிரதையை ஜெயித்தவள் இனிமேல் உங்கள் தயவினால் மன்மதனையும் ஜெயிப்பாள், சாமுத்திரிகா லக்ஷணங்களை பெற்ற இப்பெண்ணரசியின் புகழை இரண்டாயிரம் நாவைப்படைத்த

ஆதிசேடனாலும் கூறுவது அரிதென்றால் ஒரு நாவையுடைய அடியாள் செப்புவது அரிதோவென இரு கரங்களையும் குவித்து அஞ்சலி செய்து நின்றார்கள்.

அங்ஙனம் நின்ற தாதிகளின் முகம் நோக்கி தந்தையின் மனப்பான்மைபோல் ஆகுக என விடைபகர்ந்தார். அதுகேட்ட தாதிகள் அகமகிழ்ந்து அரச மண்டபம் சென்று அரச குமாரர் தங்கள் வார்த்தைக்கு இனங்கியுள்ளார், என்றனது. இது கேட்ட சுத்தோதன மகாராஜன் ஆனந்தக்கடலில் மூழ்கி தனது குமாரராகிய ஸ்ரீ கௌதமருக்கு யசோதரா தேவியை மணமுடிப்பதாக மந்திரி பிரதானிகளுடன் ஆலோசனை செய்துகொண்டார்கள்.

திருமண ஓலை அனுப்புதல்.

ஐம்பத்தாறு தேசங்கட்கும் திருமண ஓலையனுப்பினார்கள் அப்பரையோசையைக் கேட்ட அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர, காம்பேஜ, நேப்பாள, பாஞ்சால, மச்ச, பாண்டிய, திரிகருத்த, மாதவ, கோசல, வத்தல, கொங்கண, வங்க, சிந்து, காசி முதலிய ஐம்பத்தாறு தேசாதிபதிகளும், மந்திரி பிரதானிகளும் கொடி முதலிய ஆலவட்டங்களுடன் மணப்பந்தலில் வந்து சுத்தோதன மன்னருக்கும், மற்றவர்கட்கும் ஆசிகூறி அமர்ந்தபின்னர் தன் குலகுருக்கள் முதலான யாவர்களும் கூடி மணப்பந்தலில் நானாவித மேளவாத்தியங்களோடு, யசோதரா தேவியை ஸ்நானபானங்கள் செய்வித்து தலைமயிரைச் சிங்காரித்து, வாசனை சூட்டி, நவரத்தினங்கள் முதலிய ஆபரணங்கள் பூட்டி, மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்கள் சூட்டி, கண்ணுக்கு மையிட்டு, நெற்றியில்

திலகமிட்டு, பட்டாடையுடுத்து, முத்துப் பல்லக்கேற்றி, நவரத்தின குடைகள் வெண்சாமரை முதலியவைகளுடன், நானுவித வாத்தியங்களுடனும் "யசோதரா" குமாரத்தியை மணப்பந்தலுக்கழைத்துவந்து நல் முகூர்த்ததத்தில் குலகுருக்களும், ஐம்பத்தாறு தேசாதிபதிகளும், கண்டானந்திக்க தேவர்களும் ஆனந்த புஷ்ப மாரி பொழிய பந்தலில் அமர்ந்தனர்.

அதுவேளையில் ஸ்ரீ ஸித்தார்த்த குமாரனைப்பார்த்து ஒவ்வொருவரும் சொல்லுகிறதாவது; இதோ பார்த்தீர்களா கௌதம குமாரர் பூர்ண சந்திரனைப்போல் முகமும், மன்மதனைப்போல் அழகும், திவ்ய தேகமும் படைத்திருக்கின்றார். இவர் ராஜ குமாரரல்ல சூரியனோ, சந்திரனோ, தேவேந்திரனோ, குபேரனோ யாமறியோம், இவருக்கு வெள்ளையானை உண்டானல், இந்திரனெனச் சொல்லலாம் என்று பிரமித்துநின்ற பெண்களின் மேலாடை தங்களைவிட்டு நழுவ பெருமூச்செறிந்து நின்றார்கள். அதுபோல் மணப்பந்தலில் இருக்கும் அரசர்களும் சொல்லலாயினர். இவ்வழகை பிரமன் எவ் வடிவைக்கொண்டு சிருஷ்டித்தானோ, பூர்ணச் சந்திரனோ, மின்னற்கொடியோ, மாணிக்கத் தீபமோ, மன்மதன் கணையோ, கரும்புவில்லோ, அன்னப்பேடையோ சிற்றின்பக் கற்கண்டோ, வரகசஞ்சீவியோ, எத்தனை கோடி தவம் செய்து பெற்றாளோ, இப்பூவுலக அரச குலத்திலுதித்த கௌதம குமாரர் பாக்கியம் பெற்றிருக்கிறார், அவர் பூர்வ ஜென்மத்தில் என்ன நோன்பு நோற்றிருப்பாரோ, யாமறியோம் அதோ பார்த்தீர்களா, ஆகாயத்தில் யக்ஷய கிம்புருட, கர்வ, காந்தர்வ சகல தேவர்களும் கும்பல் கும்பலாய் வேடிக்கை பார்க்கிறார்கள், என்று சகல அரசர்களும் ஒருவருக்கொருவர் பேசும் சமயம் நல் முகூர்த்தம் வந்ததென்று அரண்மனை ஜோதிடர்கள் புகன்றவுடனே ஸ்ரீ கௌதமர் தனது இருகரங்களில் நறுமணம் வீசும்

புஷ்பமாலையை கோலி தேசாதிபதியின் குமாரத்தியாகிய "யஸோ தரா" தேவியின் திருக்கழுத்தில் தரித்தனர்.

அந்நேரத்தில் ஆகாயத்தில் தேவதுந்துமிகள், திமி திமி என முழங்க தேவர்கள் பாரிசாத புஷ்பமலரை சலசலவென வருஷித்தார்கள். வீணை மீட்டி நாரதர் பாட, காந்தர்வர்கள் பள பளவென கரகோஷம் செய்தார்கள். ரம்பை, ஊர்வசி, திலோர் தமை, மேனகை, தாஸியமாலி, கருணாவதி முதலிய யக்ஷஸ்ரீகள் நாட்டியமாட, சகல தேவர்களும் ஸ்ரீ கௌதம குமாரருக்கும்' யஸோதரா தேவிக்கும் சகல பாக்கியங்களும் உண்டாகக்கடவதாக என ஆசிகூறினர்கள்'

இவ்விதமிருக்க ஸ்ரீ கௌதம குமாரர் 16 வயது முதல் 29 வயதுவரை தன் தேசமாகிய கபிலவஸ்து பட்டணத்தில் இள வரசு பட்டத்தில் அமர்ந்து தேவேந்திரனுக் கொப்பாக இல்லற சுக மனுபவித்து வந்தனர்.

ஒருநாள் தன் தந்தையின் ஆக்ஞைப்படி பூங்காவன விநோ தங்களை சுற்றிப்பார்த்து வரும்பொருட்டு, ஸ்ரீ ஸித்தார்த்த இள வரசனை நான்கு அசுவங்கள் பூட்டிய ரதத்தில் ஏற்றி மந்திரி பிர தானிகளுடன் சென்றுவரும்படி அனுப்பினர்.

அங்ஙனம் செல்லுகையில் சொறி, சிரங்கு, புண்களாகிய அசாத்திய ரோகங்களால் துயரமடையும் குஷ்டரோகி ஒருவன் எதிர்பட்டான், அதைச்கண்ட ஸ்ரீ ஸித்தார்த்த இளவரசர் திடுக் கிட்டு ஓ மந்திரி! இவன் யார்? என்று வினவியதற்கு மந்திரி ஓ, மண்டலேஸ்வரா! இவன் வாலிபத்தில் அழகு நிறைந்த பரிசுத்த மான சரீரத்தோடு இருந்து இப்பொழுது அஷ்டவித குஷ்டங்

களால் துக்கப்படுகின்றன, இது இவனுக்கு மட்டுமல்ல, இவ்வுலகின் கண்ணே மானிடராய் பிறந்துள்ள யாபேர்கட்கும் இதுதான் கதி என்றன.

அதைக்கேட்ட இளவரசன் ஓ மந்திரியே நமக்கும் இவ்விதம் சம்பவிக்குமோ என்று கேட்க, ஆம் ஐயனே இப்பூவுலகில் பிறந்த யாவர்கட்கும் இக்கதிதானே என விடையளிப்பதை கேட்ட இளவரசன் உலக ஆசையை வெறுத்து மனங்கலங்கித் தவித்து, அஞ்சி, ஒடுங்கி சஞ்சலத்துடன் தனது ரதத்தைத்திருப்பி மாளிகைக்குச் சென்று துக்கசாகரத்தில் மூழ்கியவராய் மஞ்சத்தில் சயனித்துக் கொண்டார். இதுகண்ட சுத்தோதன மன்னர் ஓடிவந்து ஓ மந்திரியே இதுவென்ன புதினம், சென்றவிடத்தில் நடந்ததென்ன உடனே சொல் என்றதற்கு, மந்திரி அடிபணிந்து நடந்தவைகளை சொன்னார். அதுகேட்ட அரசன் இனிமேல் எனது புத்திரனை அவ்வழியாய் கொண்டுசெல்லாமல் மற்றோர்பாதையால் கொண்டு செல்ல வேண்டுமென்று ஆக்ஞாபித்ததும், அல்லாமல் பூங்காவனத்தில் மற்றவர்கள் வராது கோட்டை வாசல்களில் பெரும் காவலும் வைத்தனர்.

இவ்விதமிருக்க இரண்டாம் முறை மற்றொரு பாதையாக மங்கள ரதமேறி நந்தவனம் செல்லுகையில், உதிர்ந்த பற்களும், நரைத்த முடியும், குழிந்த கண்களும், கூன் சரீரமும். கையில் தடிக்கம்பும் உடையவனும் விறைவிறைந்து நடுங்கி நடக்க முடியாதவனுமான ஓர் கிழவன் எதிர்பட்டான் அதைச்கண்ட இளவரசன் அஞ்சி,நடுங்கி, திடுக்கிட்டு கீழிறங்கி ஓ மந்திரியே இவன் யாரென்று வினவ ஐயனே இவன் வயது சென்ற கிழவன் என விடையளிக்க இப்படியும் மனிதர்கள் கிழவராய் விடுவார்களா இவனுக்குமட்டும் தானு? இக்கெதி என்று வினவ, அதற்கு மந்திரி ஓ மண்டலேஸ்

வரா இம்மண்ணுலகில் பிறந்த யாபேர்களும் எவ்விதமான ரூப லாவண்யத்தோடு இருந்தாலும் நாள் செல்லச் செல்ல இவ்வித வயோதிப திசையை அடைந்து கிழரூபமாகிவிடுவார்கள், இது இவனுக்கு மட்டுமல்ல நமக்கும் இதே கதிதான் என்றுசொல்ல இளவரசர் மனம் நொந்தவராய் முன்னிலும் பன்மடங்கு திடுக் கிட்டு ஆ, ஹா, இதென்ன மாய்கை, இவ்வுலக வாழ்க்கை பொய் யாய் இருக்கிறதே, இதில் சுகமேகிடையாது நாம் இப்பொழுது பூங்காவனம் சுற்றுவதில் பயன் என்ன, இனி அரண்மனைக்கேகு வதே உஜிதமெனக் கருதி இரதமேறி அரண்மனைக்குச் சென்று முன்னிலும் பன்மடங்கு கவலையுடையவராய் இருந்தார். அதை யறிந்த சுத்தோதனர் முன்போலவே தன் புத்திரனை அப்பாதை வழி போகாமல் வேறு வழியாய் செல்ல உத்தரவிட்டார்.

இஃது இங்ஙனமிருக்க பின்னுமோர் நாள் இளவரசர் தனது மங்களரதமேறி மூன்றாவது பாதைவழியாய் உலாவி வரும் வேளையில் சிலர் ஒருமித்து ஒரு பிரேதத்தைத் தூக்கிச் செல்வதைக் கண்ட இளவரசர் முன்போலவே திடுக்கிட்டு கீழி றங்கி மந்திரீ இதென்னவென்று வினவ ஐயனே மரணமடைந்த மனித சரீரம் என்றனர். அதற்கு இளவரசர் மரணமென்பது என்ன? என்று வினவ சுவாமி இவ்வுடலை விட்டு உயிர் நீங்கி மாறுதல் மரணம் என்பர், இப்படிப் போனவர்கள் திரும்பி வர மாட்டார்களா? என இளவரசர் கேட்க போனவர்கள் திரும்பி வரமாட்டார்கள் என்ற மந்திரியை நோக்கி இவன் மனைவி, பிள்ளை களோடு வாழ்ந்தானல்லவா? (ஆம் சுவாமி), அவர்களை எல் லாம் வெறுத்துப் போய்விட்டானா? ஆம் சுவாமி, அப்படியானால் நமக்கும் இதே கதிதானே என்றுணர்ந்து ஓ, மந்திரி மங்கள வனம் சென்று பூங்காவனம் பார்ப்பதில் என்ன பயன் வா அரண்

மனைக்குச் செல்லுவோம் என்று சொல்லி பூங்காவனம் போகாமல் தனது மாளிகைக்கேகி அளவற்ற துக்கசாகரத்தில் மூழ்கியவராய் இருந்தார்.

அதையறிந்த சுத்தோதனர் தன் புத்திரனை அவ்வழியாய் கொண்டுபோகாமல் மற்றொருபாதையாகச் செல்ல ஆக்ஞாபித்தார் இளவரசர் நான்காம் முறையாக தன்து மங்களரதமேறி பூங்கா வனம் செல்லும்பொழுது காவிகாம்பர கமண்டலதாரியாகிய சந்நி யாசி ஒருவர் எதிர்பட்டார். அச் சந்நியாசியைக்கண்ட இளவரசர் இவர் யாரென மந்திரியை வினவ ஓ, சுவாமி! காமக் குரோத லோப துவேஷ எனும் பாசத்தால் கட்டுண்டு, மூப்பு, பிணி, சாக் காடு எனும் துயரங்களால் தத்தளிக்கின்றோமேயன்றி மோக்ஷ நிலை யடைய முடியாமல் போய்விடுகின்றதே என்று ஆண்டி வேஷம் கொண்ட பெரியார்; இவர் இல்லறத்தை முற்றும் துறந்த முனி வராவர் என்றதும் இளவரசர் மகிழ்ந்து தானும் சந்நியாசியாக வேண்டுமென்று உணர்ந்து உறுதியாக மனதிலெண்ணி பூங்கா வனம் சென்று அங்குள்ள சோலையில் சுற்றியுலாவி தாமரைத் தடாகத்திலிறங்கி ஸ்நானம்செய்து கரையேறினர்.

இது இங்ஙனமிருக்க தேவர்களால் நிர்மாணித்து காண் பிக்கப்பட்ட மூப்பு, பிணி, சாக்காடுகளாகிய விகார ரூபங்களைக் கண்டு மனங்கலங்கி உலகத்தை வெறுத்துச் சந்நியாசம் கொள்ள இச்சையுள்ளவராய் இன்று மத்திம ஜாமத்தில் அரண்மனையை விட்டகன்று போய்விடுவாரென்று ஞானதிருஷ்டியால் அறிந்த இந்திரன் விஸ்வகர்மாவையழைத்து ஓ விஸ்வகர்மாவே, ஸ்ரீ ஸித் தார்த்தர் துறவுபூண்டொழுகப் போகிறார், நீர் இப்பவே அழகிய தேவ ஆடையாபரணங்களைக் கொண்டுசென்று ஸ்ரீ ஸித்தார்த்த இளவரசனுச்கு வெகு அலங்கிருதமாக அணிந்துவாவென்று ஆக் ஞாபித்தனர்.

தாமரைக் குளத்தில் நீராடிக் கரையேறிய ஸித்தார்த்த இளவரசனை மந்திரி பிரதானிகள் சூழ்ந்து ஆடையாபரணங்களால் அலங்கரித்து வருகையில் விஸ்வகர்மாவானவர் மனித வடிவத்தோடு தேவ ஆடையாபரணங்களைக் கொண்டுவந்து மந்திரிமார்களைப் பார்த்துச் சொல்லுவார்.

ஓ மந்திரிமார்களே! இதோ நான் அழகிய ஆடையாபரணங்களைக் கொண்டுவந்திருக்கிறேன் இதை அணிவிப்போமென்று சொல்லி நவரத்தினம் பூட்டிய திவிய ஆடையாபரணங்களால் வெகு அழகாக அலங்கரித்து அவ்விடம் விட்டகன்றனர், மந்திரிமார்கள் அறியாவிட்டாலும் விஸ்வரூபத்துடன் வந்தவர், விஸ்வகர்மா என்பதை அறிந்த ஸ்ரீ ஸித்தார்த்தர் மிகவும் சந்தோஷத்தோடு மந்திரிமார்கள் புடைசூழ தமது மங்கள ரதத்தில் ஏறினர்.

அந்நேரத்தில் ஸ்ரீ ஸித்தார்த்த இளவரசரின் மனைவி யசோதரா தேவி ஓர் புத்திரனைப் பெற்றார், அதையறிந்த சுத்தோதன மகாராஜன் அகமகிழ்ந்து நினைத்ததாவது :—

என் மகனுக்கோர் அருமை மகவு பிறந்ததினால் அம்மகவு பேரில் உண்டாகும் ஆசையால் என் புத்திரன் சந்நியாசம் கொள்ளப் போகமாட்டான் எனக்கருதி தனது புத்திரனுக்கு அறிவிக்கும்படி மந்திரிமார்களை பூங்காவனத்திற்கு அனுப்பிவைத்தார். அவ்விதம் வந்த தூதர்கள் ஸ்ரீ ஸித்தார்த்த இளவரசனைக் கண்டு சாஷ்டாங்கம்பண்ணி ஓ சுவாமி! தங்களுக்கோர் புத்திரன் பிறந்திருக்கிறார் உடனே தாங்கள் வரும்படியாக தங்களது பிதாவாகிய எங்கள் மகாராஜன் கட்டளை, ஆகையால் இப்பொழுதே எழுந்தருள வேண்டும் என்றறிவித்தனர். அச்செய்தியை அறிந்த ஸ்ரீ ஸித்தார்த்த இளவரசர் இவ்விதம் புகன்றனர்.

பாளி

ராஹுலோ ஜாத்தோ பந்தனம், ஜாத்தந்தி.

பொருள் :

இராகுலன் பிறந்ததினுல் எனது யாத்திரைக்குப் பங்கம் உண்டாகுமோ என்ற வசனத்தைச் சொல்லி தேவேந்திரனைப்போல் மங்களரதமேறி பூங்காவனத்திலிருந்து அரண்மனையை நோக்கி ராஜவீதி வழியாக எழுந்தருளிச் செல்லுகையில் அவ் வீதியில் வசிக்கும் (கிஸாகோத்தமி) ஓர் மாது மங்களரதமேறி வரும் திருமேனியை உடைய ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமரைக் கண்ட மாத்திரத்தில் இவ்விதம் புகன்றனர்.

பாளி

நிப்புத்தா னூன ஸா மாத்தா
நிப்புத்தோ னூன ஸோ பித்தொ
நிப்புத்தா னூன ஸாநாரி
யஸ்ஸா யங் ஈதிஸோபத்தி

பொருள் :

இவ்விதமான ரதமேறிவருகின்ற இந்திரனைவெல்லும் ஒளிநிறைந்த அரசபுத்திரனைப் பெற்ற மாதாவானவள் சாந்த குணமும், சத்திய சிலமும் அமைந்துள்ளவளாக இருக்கவேண்டும்.

இப் புத்திரனைப்பெற்ற தந்தையானவர் சத்தியதருமத்தை மறவாதவரும், அன்பு, கருணை, பொறுமை, தயவு, தாக்ஷணியம் எனும் வெள்ளப்பெருக்கில் மூழ்கிய உத்தமராய் இருக்க வேண்டும்.

ஒரு பெண்ணை இவர் மணந்தால் அப்பெண்மாது பதிவிரதாதருமமும், ரதிபோன்ற அழகும், லெக்ஷிமியைப்போல் குணமும் உடையவளாய் இருக்கவேண்டும்,

இவ் வீரபுருஷனானவர் மன்மதனை வெல்லும் அழகு உடையவராயும், சாந்த குணமும், கருணைநிறைந்த முகமும், அன்பு நிறைந்த பார்வையும் உடைய வீரோத்தமர் திரிலோக மக்களுக்கும் குருநாதனாக வேண்டும் என்றனர்.

அவ்வசனம் ஸ்ரீ ஸித்தார்த்தரின் காதில் விழுந்தமாத்திரத்தில் மிகுந்த சந்தோஷ மடைந்ததுமன்றி அரண்மனை புகுந்து ஒருலெக்ஷம் பொன் விலையுள்ள மாலையைக்கழற்றி மந்திரி வசம் கொடுத்து ஓ மந்திரியே! நாம் வீதிவழியாக வரும்பொழுது மேல்மாடியின் சாளரத்தின்வழியாக எட்டிப் பார்த்துக்கொண்டு என் மனம் குளிரக் கவிபாடிய கிஸாகோத்தமிக்கு இம்மாலையைக் கொடுத்துவா என்றனுப்பிவைத்தனர்.

மாலையை வாங்கியெடுத்த கிஸாகோத்தமி நினைத்ததாவது என்னைக் கண்ட ராஜகுமாரன் என்மீது காதல் கொண்டதைப் போல் தெரியவருகிறது, என ஏமாந்து மயங்கி இருந்தனர். ஸ்ரீ ஸித்தார்த்த இளவரசன் கிஸாகோத்தமிக்கு மாலையனுப்பிய காரணம் என்னவெனில், கிஸாகோத்தமி கூறிய பதங்களில் (நிப்புத்த) என்பது நிர்வாண நிலை என்று பெயர்; துறவுபூண்டொழுகி நிர்வாண நிலையை அடையவேண்டுமென்ற எண்ணத்தோடு வருகையில் நிப்புத்த பதத்தைக் கேட்க நேரிட்டதால் உண்டான சந்தோஷத்தால் மாலையனுப்பியதேயன்றி அவள்மீது காதல்கொண்டு அனுப்பவில்லை.

ஸ்ரீ ஸித்தார்த்தரின் துறவு.

இவ்விதமிருக்க ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் அன்று இராத்திரி உப்பரிகையிலேறி மனக்கவலையோடு பஞ்சணைமீது குப்புறச் சயனித்துக்கொண்டு. கவலை தங்கியவராய் அரண்மனையிலிருக்

கும் ஸித்தார்த்த போதிஸத்தரை சந்தோஷப்படுத்தும் பொருட்டு தேவலோகப் பெண்களைப் போன்ற அழகுடைய நாட்டியப்பெண்கள் ஸித்தார்த்தர் முன்னிலையில் நடனமாடினார்கள். பஞ்சதுரிய நாதங்களுடன் சில மாதர்கள் புல்லாங்குழல் ஊதவும், சிலர் வெண் சாமரை ஆலவட்டமுதலிய வீசவும், சிலர் கீதங்கள் பாடவும், சிலர் கை காலால் சமிக்கை செய்வதுமாக பலவிதமான நடனமாடினங்களாடினார்கள். அவ்விதம் நடனமாடும் பெண்களைப்பார்த்து சந்தோஷம் சற்றுவது அடையாமல் நித்திரைபோய்விட்டனர்.

பின் மாதர்கள் ஒவ்வொருவரும் சொல்லிக் கொள்வதாவது, என் நாம் வீணாக விளையாடுகிறோம், அரசர் நித்திரை போய்விட்டாரே, நாமெல்லோரும் இங்கேயே நித்திரை செய்வோம் எனச்சொல்லி கால்மாடு தலைமாடாக படுத்துக் கொண்டனர்கள்.

ஸ்ரீ ஸித்தார்த்தர் மத்திம ஜாமத்தில் நித்திரை விட்டெழும்பி பார்த்தபொழுது தமது முன்னிலையில் செத்த பிணம் போல் மாதர்கள் பற்கடிப்பதும், வாயால் எச்சில் ஒழுகிறதும், மொண மொணவென்று பேசுவதுமான விகார அலங்கோலத்தைக் கண்டு முன்னிலும் எண்மடங்கு மனங்கலங்கித் தளர்ந்து திடுக்கிட்டெழும்பி தனதருகில் நின்ற மந்திரியைப்பார்த்து ஓ மந்திரியே சிக்கிரத்தில் எனது ஆடையாபரணங்களைக் கொண்டுவா எனக் கட்டளையிட்டனர்.

அவ்வசனத்தைக்கேட்ட மந்திரி அடிபணிந்து ஓ சுவாமி, இந்நேரத்தில் எங்கு செல்வதற்கென்று அருளவேண்டும், அதற்கு ஓ மந்திரியே நானோர் பிரயாணம் போகவேண்டும் இது எனது

கடைசி யாத்திரை, ஆகையால் அழகிய ஆடையாபரணங்களைச் கொண்டுவா என்று சொல்லி வரவழைத்து, அணிந்து வாளாயுத தாரியாக தன் மனைவி யஸோதரா தேவி நித்திரைசெய்யும் அரண் மனைக்குள் புகுந்து அன்றுதினம் பிறந்த அருமை மகன் இராகுல னையும், மனைவியையும் பார்த்து ஓ எனதருமை மகனே பரோப கார தருமவழியில் நானவதரித்திருப்பதால் அவர்களின் நன்மை யின் பொருட்டு நான் செல்லுகிறேன், நான் புத்த பதவியைப் பெற்று, திரும்பிவந்து உங்களுக்கு மோக்ஷவழி காட்டுகிறேன்' எனதருமைக் கண்ணே! பிராண நாயகியே, நான் சென்று வரு கிறேன் என்று மனதிலெண்ணிக் கொண்டு, "சன்னன்" என்னும் மந்திரியோடு "கந்தகன்" எனும் குதிரைமீதேறி ஒருவருக்கும் தெரியாமல் மத்திம ஜாமத்தில் அரண்மனையை விட்டகன்று கோட் டை வாசலுக்குச் சென்றனர்; ஆயிரம் பராக்கிரம வீரர்கள் காவ லிருக்கும் கோட்டை வாசல் தேவர்களின் உதவியாலும், பூர்வ தவத்தின் மகிமையாலும் கோட்டை வாசற் கதவு தானே திறந் திருந்தமையால் அவ்வாசல் காப்போருக்கும் தெரியாமல் கோட் டை வாசலைவிட்டு வெளியே வரும்பொழுது மாரன் எதிர்பட்டு இவ்விதம் புகன்றனர்:—

பாளி ஸ்லோகம்.

மா னிக்கம மஹா வீர
இத்தோ தே சத்த மே தினே
திப்பந்து சக்க ரத்தனங்
அத்தா பாத்து பவிஸ்ஸதி

பொருள்:

எனது பிரிய மித்திரராகிய மகானுபாவ வீரசம்பன்னரே போக வேண்டாம்; ஏழு நாட்களுக்குள் உங்கட்கு சக்கரவர்த்தி பட்டம்

கிடைக்கும். சங்கு சக்கராயுததாரியாய் சக்கரவர்த்தி பீடத்தில் வீற்றிருந்து முழு உலகங்களேயும் அடக்கியாளலாம்; சந்நியாசம் பூண்டொழுகாதீர், வேண்டாமென்று மறுத்தனர். அதற்கு ஸ்ரீ ஸித்தார்த்த மன்னர் ஏ காலா, நீ என்னைத் தடுக்காதே போய்விடு ஓ மாரனே, உன் சக்கரவர்த்திப் பட்டத்தை நானறிவேன், இதற்கு முன் எண்ணிறந்த ஜென்மங்களில் நான் சக்கரவர்த்திப் பட்டத்தைப் பெற்றிருக்கிறேன்; இப்பொழுது எனக்கு வேண்டாம், நீ போய்விடு எனச்சொல்லி திருயாத்திரையை ஆரம்பித்தார்.

உடனே மாரன் கடுங்கோபத்தோடு பல்லைக்கடித்து முணுமுணுத்து இருக்கட்டும் நீர் புத்தபதவியை அடைவது பார்ப்போம் எனச் சொல்லிப் போய்விட்டான்.

பின் ஸ்ரீ ஸித்தார்த்த கௌதம வீரபுருடர் ஏழு நாட்களுக்குள் தனக்குக் கிடைக்கவேண்டிய சக்கரவர்த்திப் பட்டமும், நாற்பதினாயிரம் பட்டத்திளவரசிகள் புடைசூழ்ந்த தமது மனைவி யசோதரா தேவியையும், அருமருந்தென்ன மகவாம் இராகுலனையும் துச்சமாக எண்ணி முற்றும் துறந்தவராய் கோட்டை வாசலை விட்டகன்று, கபிலவஸ்துபுரி, லும்பினிவனம், கோலி தேசம் ஆகியவைகளைக் கடந்து அருணைதயத்தி) "அனேமான" கங்கையை நோக்கிச் செல்லும் வேளையில் தேவர்கள் எல்லாம் ஒன்றுகூடி நறுமணம் வீசுகின்ற மலர்கள் சூட்டி குதிரையின் அடிசத்தங்கள் யாருக்கும் கேட்காவண்ணம் குதிரையின் நான்கு பாதங்களையும் தேவர்களின் கரங்களால் தாங்கிக்கொண்டார்கள் காற்றைப்போல் வேகமுடைய குதிரையின் மீது பெருமானும், வாலைப் பிடித்த வண்ணமாய் மந்திரியும் அனேமான கங்கையைத்தாண்டி

அக்கரைக்குக் குதித்து பொன்னிறமான மணல் கரையில் தங்கி நின்று வலது கரத்தில் வாளெடுத்து இடது கரத்தால் முடியைப் பிடித்து வெட்டி எடுத்து இவ்விதம் நினைத்தனர்.

நான் இச்சென்மத்தில் புத்த பதவியை அடைவது உண்மையானால் எனது கேசரோமம் ஆகாயமார்க்கமாக ஏறிச் செல்ல வேண்டும் என நினைத்து ஆகாயத்தில் விட்டெறிந்தார், அதே நிமிஷம் அக்கேச ரோமம் ஆகாயத்தில் ஏறிச்செல்வதைக் கண்ட இந்திரன் அக்கேச ரோமத்தை எடுத்துச்சென்று இந்திரலோகத்தில் வைத்து இந்திரன் முதலான சகல தேவர்களும் அன்றுமுதல் இன்றுவரை வணங்கிவருகின்றனர்கள்.

எனதாடையாபரணம் தவத்திற்குப் பங்கமுண்டுபண்ணுமென்று நினைத்தமாத்திரத்தில் பிரமலோக வாசியான ஓர் பிரம தேவன் காவியாடையும்; பாத்திரமும் பிரமலோகத்திலிருந்து கொண்டுவந்து பரிசளித்தனர். அக் காவியாடையைப் பெற்றுக் கொண்டு தானணிந்திருந்த ஆடையை அகற்றி ஆகாயத்தில் விட்டெறிந்தனர். அது ஆகாயமார்க்கமாக ஏறிச்செல்வதைக் கண்ட பிரமதேவன் னெடுத்துச்சென்று பிரமலோகத்தில் வைத்து பிரமலோக வாசிகளான சகல பிரமதேவர்களும் அன்றுமுதல் இன்றுவரையும் பூஜித்து வருகின்றனர்.

பின் ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் சந்நியாசம் பூண்டு, தன் மந்திரியை நோக்கி சன்னு! நீ ஊர்போய்ச்சேர் எனது மாதாபிதாக்களுக்கும், மனைவி யஸோதரா தேவிக்கும் நான் சந்நியாசம் பூண்டு சுகமாய் இருக்கிறேன் என்று சொல் என ஆக்ஞாபித்தார்.

அதைக்கேட்ட மந்திரி சுவாமி அடியேனும் தங்கட்கு சீடனாகி சந்நியாசம் கொள்ளுகிறேன், என்றறிவித்த மந்திரியை நோக்கி

ஓ எனதருமை மந்திரியே சந்நியாசம் கொள்வதற்குகந்த காலம் இதுவல்ல நீ ஊர் போய்ச் சேர் என அனுப்பிவைத்தார், மந்திரி ஒருபக்கமும், சுவாமி ஒருபக்கமும் போவதைக் கண்ட குதிரை மனக்கவலையடைந்து ஏக்கமுற்று சுவாமியின் திருப்பாதத்தை முகந்து முத்தமிட்டு கீழேபுரண்டு விழுந்து மரணமடைந்து தேவ லோகத்தில் "கந்தகன்" எனும் பெயருடைய தேவராஜனாகப் பிறந்தான்

பின் சந்நியாசம் பூண்ட சுவாமி அவிடம் விட்டகன்று சமீபத்திலுள்ள "அனேபியா" எனும் மாவனமேகி ஏழு நாட்கள் நிஷ்டையிலிருந்து எட்டாம் நாள் அவ்வனத்தை விட்டு முப்பது யோஜனை தூரத்திலுள்ள "ரஜகா" நகரமடைந்து தெருவில் வீடு வீடாக பிண்டயாசகம் எடுக்க ஆரம்பித்தனர். பிண்டயாசகம் எடுத்துவரும் தபசியைக் கண்ட ஜனங்கள் வியப்புற்று ஒருவருக் கொருவர் பேசிக்கொள்வதாவது, அதோ வருகிற தபசியைப் பாருங்கள், அவர் பிரமனோ, இந்திரனோ தெரியாது, பிரமனென் றால் சதுர்முகமிருக்கவேண்டும், இந்திரனாயின் ஆயிரம் கண்கள் வேண்டும், அவர்களுமல்ல மகாவிஷ்ணுதானோ அப்படியானால் நீலமேனியும், சங்கு சக்ராயுதமும் இருக்கவேண்டும். ஈஸ்வர னெனின் வேலாயுதமும். திரிசூலமும் இருக்கவேண்டும்; அவர்களு மல்ல. வினாயகமூர்த்தி என்றால் யானைமுகம் வேண்டுமே, இவரைப் பார்த்தால் கருணை முகமும், அன்பு நிறைந்த பார்வையும், சாந்த குணமும், தயாளமான எண்ணமும், ரக்ஷணியமும் நிறைந் துள்ள மகானுபாவசம்பன்ன யோகி இவர். இவ்விஷயத்தை நமது தேசத்தை ஆளும் அரசருக்கறிவிப்போம் என்றுசொல்லி ஜனங் கள் எல்லோரும் மாளிகைக்குச் சென்று "பிம்பிசார" மன்னரைக் கண்டு, ஓ மண்டலேஸ்வரா! அதோபாருங்கள் நம் ராஜவீதியில்

ஒருவர் ஜாதிபேதம் பாராமல் எளியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலுமுள்ள சகல வீடுகளின் வாசல்களில் நின்று பிண்டயாசகமெடுக்கிறார் என்றார்கள் அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் உப்பரிகையில் நின்று சாளரத்தின் வழியாகப் பார்த்தபொழுது ஒளி நிறைந்த அழகிய சரீரமும், சந்திரனைப்போன்ற முகமும், காவியாடை தரித்த சந்நியாசி கோலத்தையும் கண்டு, பிரமித்து ஓ ஜனங்களே அவர் யாவரென்று ஜாக்கிரதையாகப் பின்தொடர்ந்து பார்த்துச் சொல்லுங்கள், அவர் தேவராஜனானால் யாசகம் எடுத்த பின் ஆகாயத்தில் ஏறிச் செல்லுவார், நாகலோக வாசி நாகராஜனானால் யாசித்தபின் பூமியைப் பிளந்து போய்விடுவார், கானகத்தில் வசிக்கும் ராக்ஷஸனானால் யாசித்தபின் அந்தரஸ்தானமாகி விடுவார், அவ்விதமில்லாமல் தபசியானால் கிடைத்த ஆகாரத்தை ஓரிடத்திலிருந்து புசிப்பார், அதை அறிந்துவந்து எனக்கு சொல்லுங்கள் என்று ஆக்ஞாபித்தார்.

இவ்விதமிருக்க வீதியில் பிண்டயாசகம் எடுத்த சந்நியாசி அக்காசிதேசத்திலே "பாண்வபருவம்" எனும் மலையோரத்திலே கிழக்கு முகமாக அமர்ந்து அன்னம் புசிக்க ஆரம்பித்தனர். வீடுகள் தோறும் யாசித்துவந்த மிஸ்ர போஜனமாகையால் (மிஸ்ர கலந்த) குடல்கள் பிரண்டுவருவதுபோல் தோன்றிற்று, அது வேளை தானே தனக்கு உபதேசம் செய்ததாவது:

ஓ முற்றும் துறந்து முனிவேடம்கொண்ட கௌதம யோகியே கிடைத்ததைப் புசிப்பது உத்தமர்களின் கடமைதானே என எண்ணிப் புசிக்கலானார்.

அதைக்கண்ட ஜனங்கள் ஓடிவந்து அரசனுக்கறிவித்தனர் அதைக் கேட்டு அரசன் விரைந்துவந்து சாஷ்டாங்கம்பண்ணி தெண்டனிட்டுச் சொல்வது, ஓ சுவாமி! ஏனிந்தக் கானகத்தில்

இருந்து புசிக்கிறீர்கள், அதோ தெரிகிறது எனது மாளிகை சுவாமி! அரண்மனைக்கு எழுந்தருள வேண்டும் ஆண்டவனே தங்கட்கு சகல பணிவிடைகளையும் நானே செய்கிறேன் என அஞ்சலியுடன் நின்ற அரசனைப்பார்த்து ஓ காசிராஜனே, அரண்மனையோ, பொருளோ, அன்னமோ, மற்றுமுதவியோ தேடிவரவில்லை யானே முற்றுந் துறந்தேன், ஏழு நாட்களுக்குள் கிடைக்க வேண்டிய சக்கரவர்த்திப் பட்டத்தையும், நாற்பதினாயிரம் பட்டத் திளவரசிகள் புடைசூழ்ந்துள்ள எனதருமை மனைவி யஸோதரா தேவியையும், ஒரே மகனாகிய இராகுலனையும் வெறுத்துவிட்டு சந்நியாசம் பூண்டேன். நான் புத்தபதவியைப் பெற்று உலக மக்களுக்கு நிர்வாண நிலையடைய வழிதிறந்து காட்ட விரும்புவதேயன்றி மற்றொரு விருப்பமுமில்லை; என்று சொல்லக் கேட்ட அரசன் அடிபணிந்து சுவாமி தாங்கள் யாவரென்பது அடியேன் அறிவதற் கருளவேண்டும் எனவே, அதற்கு சுவாமி, அரசனே சாக்கியாதிபதி சுத்தோதனர் புத்திரர் ஸித்தார்த்த கௌதமர் நானே என்றனர்.

அதற்கு அரசன் ஓ ஓ அப்படியா வாலிபத்தில் நானும் கேட்டிருக்கிறேன் சுத்தோதனர் புத்திரர் புத்தராகுவார் என்றுஆகையால் அடியேனை மன்னிக்கவேண்டும், ஆனால் சுவாமி! தாங்கள் புத்தபதவியை அடைந்தவுடன் அடியேனின் அரண்மனைக்கு எழுந்தருளவேண்டும் என்று பன்முறை மன்றாடி கேட்டுக்கொள்கிறேன், இதனை ஆமோதிக்க வேண்டும் அண்ணலே! என விடை பெற்று போயினர்.

அரசன் போனபின்பு அருளாளன் அவ்வனத்தைவிட்டு காடு மலை வனாந்திரங்கள் கடந்து செல்லுகையில் ஆயிரக்கணக்கான சீடர்களுடன் தவம்புரியும் "உத்தகராம' ஆலாரகாராம" எனும் பெயரு

டைய இரு தபசிகளைக் கண்டு அவர்களின் ஆசிரமத்தில் அவர்களோடு கொஞ்ச காலம் யோகநிஷ்டையிலிருந்தனர். நாளுக்குநாள் பூர்ண சந்திரன்போல் உதித்துவரும் ஞான ஒளியைக் கண்ட தபசிகளும், சீடர்களும் ஆச்சரியமடைந்து இவர்தான் எங்களின் குருநாதர் என்று வணங்கத் தொடங்கினார்கள்.

அப்பொழுது ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமயோகி கருதுகிறதாவது, இதென்ன ஆச்சரியம் இவர்களிடம் உண்மை இருக்குமென்று வந்தேன் இவர்கள் எல்லோரும் எனக்குச் சீடர்களாகி என்னை வணங்கிறார்களே, வயதில் முதியோர்களின் வணக்கத்தை பெறுவதற்குமேல் நல்லது இவிடம்விட்டுச் சென்றுவிடுவது உஜிதமெனக் கருதி அவிடம்விட்டகன்று காடு மலை வனாந்திரங் கடந்து "உருவலா" வனம் எனும் திருவாலங் காடேகி கடுந்தவம் புரிய ஆரம்பித்தனர்.

கடுந்தவம்.

இவ்விதமிருக்க ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் அவதரித்த காலத்தில் ஜோதிடம் பார்க்கவந்த எட்டு பிராமணருள் விநத் தாப்பியரும், புண்ணிய சிலரும் கடந்த ஞானியுமாகிய கௌண்டஞ்ஞரும். மற்றும் நான்கு ஜோதிடர்களின் புத்திரர்களாகிய பிராமணர்கள் நால்வர்களும் பேசிக்கொள்வதாவது:

ஸ்ரீ ஸித்தார்த்தர் புத்தராகும் காலத்தில் நாம் அவருக்கு சீடர்களாகுவோம் எனப் பேசி நெடுநாளாக கானகமடைந்து தேடித்திரிந்து வருகையில் கடுந்தவம் புரிந்துகொண்டிருக்கும் யோகியைக் கண்டு அன்றுமுதல் அவருக்குச் சீடர்களாய் இருந்து காய் கனி இலை முதலியவைகளைத் தேடிவந்து புசிக்கக் கொடுத்து ஊழியம் செய்துவந்தார்கள். இவ்விதமிருக்க கௌதம யோகியான

வர் நாளுக்கு நாள் கந்தமூலங்களைக் குறைத்து விட்டதினால், வதங்கி, வாடி, மாமிசம் குறைந்து எலும்பும் தோன்றலாயிற்று

ஸ்ரீ ஸித்தார்த்த குமாரர் இன்றைக்குப் புத்தராகுவார் நாளைக்குப் புத்தராகுவார் என்று எதிர்பார்த்திருந்த பஞ்சவர்கி யோகிகளாகிய ஐவர்களும் யோசிக்கிறதாவது, இனி இவர் புத்தராகமாட்டார் நாமிங்கிருந்து என்னபயன் போய்விடுவோம் எனக் கருதி அவரை விட்டகன்று குருதேசமடைந்து அங்கு முனிவர்கள் வாசஸ்தலமாகிய "இசிபத்தனாராம" எனும் ஆசிரமத்தில் இருந்தார்கள். சீடர்கள் தன்னைவிட்டுப் பிரிந்து போனபின் அன்னாகாரமின்றி கடுந் தவமிருந்த ஸ்ரீ ஸித்தார்த்த கௌதம யோகி ஒருநாள் எழுந்து நடந்தபொழுது காற்றினால் அடிபட்டு விழுந்துகிடப்பதைக் கண்டு அக்காட்டில் வசிக்கும் ஓர் வனதேவதை திகிலடைந்து சுத்தோதன மகாராஜனிடம் சென்று ஓ ராஜேந்திரா! உமது புத்திரன் ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் மரணமடைந்தார் என்றது. அதற்கு அரசன் வனதேவதையை நோக்கி என் புத்திரன் புத்தபதவியை அடைந்தபின் மாண்டானா அல்லது பதவி யடையாமல் மாண்டானா என்றதற்கு பதவியடையாமல் மாண்டார் என்றன. அதற்கு அரசன் எனது புத்திரன் புத்த பதவியை அடையாமல் ஒருநாளும் மாளமாட்டான் என திட சித்தமாய் சொல்லுவதைக் கேட்ட வனதேவதை திரும்பிப் போய் பார்த்தபொழுது மறுபக்கத்தால் அடிக்கும் காற்றுக்கு எழும்பி இருக்கிறதைக் கண்ட வனதேவதை திரும்பவும் ஓடிச் சென்று அரசனைப்பார்த்து ஓ மகாராஜனே பயப்படவேண்டாம் ஸ்ரீ ஸித்தார்த்தர் மரணமடையவில்லை என்று சொல்லிப் போய்விட்டார்.

1934

ஸ்ரீ புத்தர் புராணம்

ஆறு வருடம் அன்னாகாரமின்றிக் கடுந்தவம் புரிந்து ஏழாம் வருடம் வைகாசி மாதம் பௌர்ணமியன்று காலையில் எழும்பி அவ்வனம் விட்டகன்று காசிநகரடைந்து, மத்திய போஜனமருந்துவது உஜிதமெனக் கருதி ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தனர்.

அத்தேசத்தில் வசிக்கும் கோபியர் குலத்தில் பிறந்த "சுஜாத்தா" எனும் பெண் சிலகாலங்கட்கு முன்னதாக, முன் கூறிய ஆலமரத்தடியில் நின்று நேர்ந்துகொண்டதாவது இவ்வால மரத்தடியில் ஓர் தெய்வம் வசிக்கிறது உண்மையானால், ஆண்டவனே அடியாள் வேண்டுகோளை அங்கீகரித்தருளவேண்டும். சுவாமி! அதாவது நம் தேசத்தில் பிறந்து, நமது குலத்தில் பெயர்பெற்ற மணாளன் ஒருவர் என்னை மணந்து இருவரும் சுக போக மனுபவித்து வரும்பொழுது எங்களுக்கு ஓர் ஆண்மகவு பிறக்கவேண்டும், அவ்விதம் சரியானால் ஆண்டவனே நான் ஆயிரம் பசுக்களின் பாலைக் கறந்து ஐநூறுக்கு ஊட்டி, ஐநூறின் பாலைக்கறந்து இருநூற்றி ஐம்பதுக்கு ஊட்டி, இப்படியே செய்து கடைசி பதினாறு பசுக்களுக்கூட்டி அவைகளின் பாலைக் கறந்து வைகாசி மாதம் பௌர்ணமியன்று பாற்சாதம் படைப்பேன் என நேர்ந்துகொண்டு, அன்றுமுதல் காலை மாலை தவறாமல் அவ்வால மரத்தடியில் சுத்தம்பண்ணி மஞ்சல்நீர் தெளித்து விளக்கேற்றி, பூஜை செய்துவருவது வழக்கமாய் இருந்தது.

சுஜாத்தா என்பவளின் எண்ணத்தின்படி ஆண்குழந்தையைப் பெற்று சந்தோஷமடைந்தமையால் வைகாசி மாதம் பௌர்ணமியன்று தான் நேர்ந்திருந்த கடனைச் செலுத்துவதற்காக முன் கூறியபிரகாரம் அதிமதுரவனத்தில் மேயவிட்டிருந்த பதினாறு பசுக்களின் பாலைக் கறந்து பாற்சாதம் சமைத்து வருகையில்

'பூர்ணு'' எனும் தாதியை அழைத்து ஆலமரத்தடியில் சுத்தம் பண்ணி மஞ்சள்நீர் தெளித்து, விளக்கேற்றிவா என்று அனுப்பி வைத்தனர்.

சுஜாத்தாவின் கட்டளைப்படிக்கு தாதியானவள் ஆலமரத் தடியில் சென்று பார்த்தபொழுது, அம்மரத்தடியில் வீற்றிருக்கும் தபசியைக் கண்டு பயந்து நடுக்கமுற்று ஓடிவந்து சொல்லுகிறதா வது கேளுமம்மா சங்கதி, அந்த ஆலமரத்தில் வசிக்கும் தெய்வம் சுயரூபத்தோடு கீழிறங்கி மரத்தடியில் வீற்றிருக்கிறது, அவ்விடத தில் சுத்தம் செய்யவேண்டியதில்லை, சூரியப்பிரகாசம்போல் ஒளி பரவி எங்கும் ஒரே ஜோதியாய் இருக்கிறது என்றனள். அதைக் கேட்ட சுஜாத்தா மிகுந்த பயபக்தியோடு பாற்சாத பாத்திரத்தை சிரசிலேந்தி, கொடி, ஆலவட்டம், வெண்சாமரை முதலியவை களுடன் மேளவாத்தியம் முழங்க, ஆயிரக்கணக்கான மாதர்கள் புடைசூழ; ஆலமரத்தடியில் எனது தானத்தை பெற்றுக்கொள்ள ஆண்டவன் கீழிறங்கி இருக்கிறார் என்று மதித்து, ஸித்தார்த்த தபசியின் கரத்தில் பாற்சாதத்தை ஒப்புவித்து சொல்லுகிற தாவது :

ஓ சுவாமி! உங்கள் கிருபையால் அடியாள் புத்திரபாக்கி யம் பெற்று க்ஷேமமாய் இருக்கிறேன், எனது எண்ணம் நிறை வேறியதுபோல் உங்கள் எண்ணமும் நிறைவேற வேண்டுமென்று அடியாள் பிரார்த்திக்கிறேன் எனச்சொல்லி அடிபணிந்து போன பின் சுவாமி தனக்குக்கிடைத்த அன்னத்தை பெற்றுக்கொண்டு, அவிடம்விட்டகன்று "நேரஞ்சரா" நதிக்குச்சென்று ஸ்நானம் செய்து கரையேறி ஓரிடத்திலமர்ந்து பாற்சாதத்தை கங்கைநீரில் கழுவி பிழிந்தெடுத்து 49 உருண்டைகளாக உருட்டி எடுத்து, இனி எழு வாரங்கட்கு ஆகாரமருந்தேன் என்று உறுதியாக எண்

ணிப் புசித்தனர். அன்னமருந்தினபின் பாத்திரத்தைக் கொண்டு சென்று கங்கையில் வைத்து இவ்விதம் நினைத்தனர். இச்ஜென்மத்தில் நான் புத்தபதவியை அடைவது நிச்சயமானால் இப்பாத்திரம் மேற்திசையி லேறிப்போக வேண்டுமென்று நினைத்தனர்.

அந்நிமிஷத்தில் அப்பாத்திரமானது நீரில் மேல்நோக்காக ஏறிச்சென்று சுழன்று, சுற்றி, அடியில் மூழ்கி நாகலோகம்சென்று ஆயிரம் சிரசையுடைய மஹாகால நாகராஜன்முன் போய் விழுந்தது. இவ்விதமிருக்க ஸ்ரீ ஸித்தார்த்தர் அக்கங்கையை விட்டகன்று காடு மலை வனங்கடந்து கயா நகரமடைந்தனர்.

அத்தேசத்தில் வசிக்கும் சொத்தியனென்னும் பிராமணன் குஸத்தை எனும் எட்டுக்கட்டு புல்லைக்கட்டி எடுத்துக்கொண்டு அவ்வனாந்திர வழியாக வரும்பொழுது, எங்கேயாவது அமர வேண்டுமென்ற எண்ணத்தோடு நிற்கும் ஸித்தார்த்தரைக் கண்டு அடிபணிந்து சுவாமி இக்குஸயை விரித்து அமருங்கள் என்று சொல்லி பிராமணர் போய்விட்டார். அந்த புல்லைப் பெற்றுக் கொண்டசுவாமி அங்கு சுற்றிப்பார்த்தபொழுது வானளாவி நிற்கின்ற போதி எனும் வெள்ளரசைக் கண்டு இதுதான் எனக்குத் தகுந்த இடம் எனக்கருதி அப்புல்லை அரசமரத்தடியில் விரித்த மாத்திரத்தில் 13 அடி உயரமுள்ள ஓர் வஜ்ராசனம் தோன்றியது. அவ்விதம் தோன்றிய வஜ்ராசனத்தின் மீது தெற்கு முகமாக அமர்ந்தபொழுது தென்திசை பாதாளத்தில் இறங்கியதுபோலும், வடதிசை பிரமாண்டம்வரை ஏறியதுபோலும், மேற்குத் திசையாக அமர்ந்தபொழுது பூமி ஆடி நடுங்குவதுபோலும் ஆயிற்றன அத்திசையை விட்டெழும்பி வடதிசைமுகமாக அமர்ந்தனர்.

அப்பொழுது உலகமெங்கும் சக்ரம்போல் சுற்றிவருவதைக் கண்டு அத்திசையையும் விட்டெழும்பி யோசிக்கிறதாவது

எனது தேகம் நொறுங்கி தூளாகிப்போனாலும் இனிமேல் எழும்ப மாட்டேன் என்று உறுதியாக நினைத்துக்கொண்டு கிழக்குமுகமாக அமர்ந்தனர்.

பூர்விகத்தில் தான் செய்து நிறைவேற்றிய "தஸபாரமித்தா" எனும் பத்துவித தருமங்கள் அரசடியில் வீற்றிருக்கும் பெரியாரைச் சூழ்ந்துகொண்டன,

தசபாரமித்தா என்பது:-

தானங் ஸீலஞ்ச நெக்கம்மங்
பஞ்ஞா விரியேன பஞ்சமங்
க் கந்தி ஸச்ச மதிஷ் டானங்
மெத்து பெக்கா இமே தஸ.

பொருள்.

பூர்விகத்தில் அன்னதானமிட்டதினால் கிடைத்த புண்ணியமாகிய தானபாரமித்தா எனும் ஒருவகைத் தருமமாகும்.

அனந்த ஜென்மங்களாக செய்து நிறைவேற்றிவந்த பஞ்சசீலம், தஸ ஸீலங்களாகிய பக்தி விசுவாசமுறையான ஸீலங்களை நிறைவேற்றி வந்தமையால் உண்டாகிய, ஸீலபாரமித்தா எனும் ஓர்வகை தருமமும், சில ஜென்மங்களில் இல்லற சுகபோகங்களைச் சற்றும் கவனியாமல் கனவிலும் அறியாமல் முற்றுந் துறந்து, கானகமேகி ஆறுநாட்கள் அன்னாகாரமின்றி தவயோக நிஷ்டையிலிருந்து, ஏழாம்நாளில் கேசரிமார்க்கமாகச் செல்லக்கூடிய தன்மையைப் பெற்ற அவ்வொரு வார யோகநிஷ்டையால் அடைந்த "நக்கம்ம" அல்லது "நைஸ்கிரம" பாரமித்தா எனும் ஓர் வகை தருமமும், எப்பிறப்புகளில் பிறந்தாலும் கெட்ட எண்ண

முடையவர்களை அகற்றி நல்லெண்ணமுடையவர்களைச் சார்ந்து நடத்தலும், உத்தம குருக்களின் உபதேசங்களைப் பெறுவதும், தான்கேட்ட உபதேசங்களின் சாராம்சத்தைப் பெற்றுக்கொள்வதும், தன்னாலியன்றமட்டும் அன்னதானம் முதலிய சகல தானங்களைச் செய்வதும் ஆகிய நான்குவித தர்மங்களையும் செய்து நிறைவேற்றி வந்திருந்தமையால் உண்டாகிய பஞ்ஞாபாரமித்தா எனும் ஓர்வித தருமமும், தான் புத்தபதவியை அடைய வேண்டுமென்றும், பிறவிக்கடலை நீந்திக் கரையேறி நிர்வாண நிலையை அடைய வேண்டுமென்றும், பெரும் வீரியத்தோடு ஊக்கமது கைவிடாமல் நிறைவேற்றிவந்த வீரிய பாரமித்தா எனும் ஓர்வகைத் தருமமும், யாரொருவர் தன்னை அடித்தாலும், நிந்தித்துப் பேசினாலும், அச்சத்துரு மீது அன்புசெலுத்தி பொறுத்துக்கொள்வதே யன்றி கோபம் எடுக்காததால் உண்டாகிய "க்கந்தி" அல்லது "க்ஷாந்தி பாரமித்தா" எனும் ஓர்வகைத் தருகமும், தன்னுயிர் போனாலும் சத்தியத்தை மீறி பொய்சொல்லாது நிறைவேற்றிவந்த "சத்திய பாரமித்தா" எனும் ஓர்வகைத் தருமமும், கூடாத செய்கைகளைச் செய்யமாட்டேன் என்றும், மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற விஸ்வாச பக்தி ஒருக்காலும் விலகாமல் பிடிவாதம் எனும் அதிஷ்டான பாரமித்தா என்றொருவகை தருமமும், தன்னைப்போல் சகல பிராணிகள் மீதும் நிறைந்துள்ள அன்பினால் உண்டாகிய "மெத்து" அல்லது மைத்திரீ பாரமித்தா எனும் தருமமும், தன்னோடு போர் புரியவரும் எதிரிகட்கும் தன் மனைவி பிள்ளைகட்கும் வித்தியாசமின்றி ஒரே கருணையாய் இருப்பதால் உண்டாகிய உபேக்ஷா பாரமித்தா எனும் ஓர்வகைத் தருமமும் ஆகிய தஸபாரமித்தா எனும் பத்துவித தருமங்களாகிய மல்லர்கள் அரசமரத்தைச் சுற்றி சுவாமியை சூழ்ந்துகொண்டன.

சுவாமி பிறந்த தினத்தன்று தனக்காகவே பூமியிலிருந்து முளைத்தெழுந்து வளர்ந்த அவ்வரசமரத்தடியில் வஜ்ராசனத்தின் மீது வீற்றிருக்கும் கருணைவள்ளலைக் கண்ட தேவேந்திரன் நூற்றி இருபதுமுள நீளமும் அதற்கொத்தவண்ணமும் உடைய "விஜயுத்தர" எனும் வெண்சங்கை எதிர்முகமாக ஊதிக்கொண்டு நின்றனர்.

பஞ்சசிக்க எனும் கந்தர்வ தேவராஜன் "வேலுவபாண்டு" எனும் வீணைவாத்தியம் செய்துகொண்டு நின்றனர். "சுயாம" எனும் தேவராஜன் பூர்ண சந்திரனைப்போன்ற வெண்சாமரையை வீசிக்கொண்டு நின்றனர். சதுர்முகனாகிய பிரமதேவன் பொன் மேனியுடைய குடையைப் பிடித்துக்கொண்டு நின்றனர்; ஆயிரம் சிரசுடைய மகாகால நாகராஜன் எண்பதினாயிரம் நாககன்னிகளுடன் வந்து "நாதகீதம்" பாடிக்கொண்டு நின்றனர்; பிரஜாபதி தேவதுந்துமிகள் முப்பத்திரெண்டு பேர்களும் பாரிஜாத புஷ்பமாலைகளும், புட்பத்தட்டுகளும் கொண்டுவந்து பூஜித்த வண்ணமாய் நின்றார்கள்; ஆயிரத்தெட் டண்டங்களிலுமுள்ள தேவர்களெல்லாம் வந்து ஸாது! ஸாது!! என கோஷித்து நின்றனர்கள். அவ்விதமிருக்க கொடிய காலனுக்குப் பயந்ததுபோல் சூரியபெருமானும் அஸ்தமனமானார். இருள் சூழ்ந்துவருமுன் பூர்ண சந்திரனும் உதயமாயிற்று, அவ்வேளையில் நாகலோகங்களுக்கெல்லாம் அதிபதியும் மோக்ஷ விரோதியும், மரணத்திற்கு பிரதானியும் ஆகிய மாரன் அடங்காத கோபங்கொண்டு ஓ ஓ மோசம் வந்துவிட்டது ஸித்தார்த்த கௌதமர் பஞ்சகாம சுகபோகத்தில் ஈடுபடாமல் சகலத்தையும் வெறுத்து சந்நியாசம் கொள்வதற்கு கோட்டை வாசலை விட்டு வரும்பொழுது போகாதே என்று தடுத்தேன் அதைக் கேட்காமல் போய்விட்டான், உருவேலவனத்தில் அன்னாகாரமின்றி ஆறுவருஷம் கடுந்தவமிருந்தான், அப்

பொழுது அங்கு சென்று கூடவே நிழல்போலிருந்து காம, குரோத, லோப, துவேஷ, மோக மதோமாச்சரிய மெனும் பாசத்தால் மயக்கிவிடலாமெனப் பார்த்தேன். ஒன்றுக்கும் கட்டுப்படாமல் இன்று அரசடியில் வீற்றிருக்கிறன், சுத்தோதனர் புத்திரனை இன்று சன்னுபின்ன மாக்கிவிடுவேன் எனக் கருவம்கொண்டு தன் படைகளை அழைத்து ஓ, படைகளே! வாருங்கள் எனச் சொல்லி ஐநூறு சிரங்களும், ஆயிரம் கரங்களும் நிர்மித்து ஒவ்வொரு கரங்களிலும் வாள், கத்தி, ஈட்டி, சூலம், சக்கராயுதம், பாராவளையம் ஆகிய பல ஆயுதங்களைத் தரித்து தனது "கிரிமேகலா' எனும் யானைமீது குதித்தேறி யுத்தசன்னனுகி எதிர்தான்.

மூன்று லோகங்களும் நடுங்கும்படியான "தஸபிம்பர" எனும் படைபண்டாரங்களோடு பேரிநாத கோஷ்டி முழங்க, நாக்கைச் சுருட்டிப் பல்லைக்கடித்து வீசையை முறுக்கிக்கொண்டு இடிமுழக்கம்போல் வரும் மாரனைக்கண்டு பிரமன் முதலான இந்திராதி தேவர்கலெல்ள்ளாம் நடுக்கமுற்று ஓடிவிட்டார்கள் மாரன் வருவதைக்கண்ட கௌதம வீரோத்தமர் யோசிக்கிறதாவது :—

எனது தவத்தை பங்கப்படுத்த கருதிவரும் மாரனல் எனது கீர்த்திமகிமை இவ்வுலகமுழுதும் பரவிவிடும் ஆகையால் நான் ஒன்றுக்குமஞ்சேன் எனக்கருதி சஞ்சலமின்றி இருந்தனர். யானை முகம், குதிரை முகம்; காளை முகம், கழுதை முகம், சிங்க முகம், கரடி முகம், பாம்பு முகம், கிளி முகம், ராக்ஷஸ முகங்களாகிய பயங்கரமான முகங்களை நிர்மித்து தடி உலக்கை, முதலான ஆயுதங்களோடு வரும் மாரனின் சேனு சைன்னியங்கள் மட்டில்

லாவண்ணமாய் எதிர்த்துவந்து யுத்தம் செய்தார்கள். மாரன் சொல்லுவான் ஓ எனக்காதாரமாய் நிற்கின்ற படைகளே வாருங்கள், எதிர்படுங்கள், சுத்தோதனர் புத்திரனை வெட்டுங்கள், குத்துங்கள், காலைப்பிடித்து இரண்டாகக் கிழித்து வீசிவிடுங்கள் என்று சொல்லி, பயங்கரமான யுத்தம்செய்தார்கள். அளவில்லாத வெள்ளம் படைகள்வந்து யுத்தம்செய்வதைக் கண்ட இந்திரன் பயந்தோடுகையில் தனது சங்கு முதுகில் அடிபட்டது அதனை மாரன் அடிக்கிற அடியெனக்கருதி வியப்புற்று ஓடிப்போய் மகாமேருவுக்குமேல் நின்று எட்டிப்பார்த்தான்.

நாதகீதம் பாடிக்கொண்டிருந்த நாகராஜன் தமது அறுபதினாயிரம் நாககன்னியரோடு பூமிபிளந்து நாகலோகம்போய் யோசிக்கிறதாவது :— ஓ மோசம் வந்துவிட்டதே ஸ்ரீ ஸித்தார்த்தரைக் கொன்றுவிடுவார்களோ தெரியாது எனப் பெருமூச்சுவிட்டு சோகமடைந்தான். சதுர்முகன் குடையை மடக்கி ஓடி பிரமலோகமடைந்தான், பின் இடிவெட்டி முழங்குவதைப்போல் பாணயுதங்களை வருஷிக்கும் மாரனையும், அவன் படைகளையும் கண்டு காகம்நிறைந்த கூட்டமத்தியில் கொஞ்சமும் அஞ்சாமல் வீற்றிருக்கும் அன்னப்பக்ஷியைப்போல் அரசமரத்தடியில் வீற்றிருக்கும் கருணைவள்ளல் யோசிக்கிறதாவது :- இவ்வளவு பயங்கரமான யுத்தஞ்செய்யும் மாரனோடு எதிர்த்துநின்று யுத்தம் செய்ய எனது சேனைசைன்னியங்கள் வரவில்லை, இக்காட்டில் தனியே வீற்றிருக்கும் எனக்குதவியாக எனது மாதாபிதா மந்திரிகள் ஒருவருமில்லை, பூர்வீகத்தில் நான் நிறைவேற்றிய தசபாரமித்தா தருமம் அன்றி வேறொன்றில்லை, ஆனால் அனந்தம் ஜென்மங்களில் நான் நிறைவேற்றிவந்துள்ள (சத்தியபாரமித்தா) தருமம் எனது அருமை மாதாவாகவேண்டும், எனது பிரக்ஞாபாரமித்தா

தருமம் எனது பிதாவாகும், சுயபுத்தியால் உணர்ந்துள்ள எனது தருமங்களெல்லாம் எனது சகோதரர்களாகும், எனது "மைத்திரி பாரமித்தா" தருமம் நல்மித்திரர்களாகும், எனது சர்த்தாபார மித்தா தர்மம் எனக்கு அன்புடைய மனைவியாகும். எனது ஷாந்தி பாரமித்தா தருமம் எனது அருமைப் புத்திரனாகும்.

இவ்விதமாக சத்வித நேயர்களை நானொருகாலத்திலும் கை விடாது எனது ஆவியைப்போல் நிறைவேற்றி வந்தமையால், அவைகள் என்னை விட்டுப் பிரியாது, என்னோடு யுத்தம்செய்ய வந்திருக்கும் மாரனையும், இவன் படைகளையும் எனதருகில் வர விடாமல் காத்துக்கொள்வதென்பது நிச்சயம். எண்ணிறந்த கோடாகோடி ஜென்மங்களில் நான் செய்து நிறைவேற்றிவந்த "ஸமத்திரீம்சத்" பாரமித்தா தருமம் எனும் மல்லர்கள் என்னைக் கைவிடாது எனது "ஸத்திஸ் போதிபாக்ஷிக" தருமம் எனது மந்திரிகளாகும், எண்பதுநூறு கோடி ஐம்பது லக்ஷத்து முப்பத்தி ரெண்டு விதமான ஸங்வரஸீலம் எனும் எனது ஒழுக்கமுறையாகிய பக்தியும், யோகநிலையும் எனது சேனைசைன்னியங்கள் ஆவதினால் அவைகள் என்னைவிட்டுப் போகாது.

இன்னும் எனது மகா கெம்பீர குணங்களெல்லாம் என்னைச் சுற்றி ஆறாகத் தோன்றும். அவ் வாற்றில் எனது கருணை வெள்ளம் பொங்கிவருவதால் எனக்கெதிரிகளாய் வரும் எமதூதர்கள் ஆற்றைத்தாண்டி வரமுடியாது, பக்கத்திலும் அணுகவிடாது.

இன்னும் எனது பாரமித்தா தருமம் எனும் கருங்கல்லால் என்னைச் சுற்றிவர நிர்மாணித்திருக்கும் கோட்டையும் எனது யோகநிலையில் பிரகாசிக்கும் ஒளியும் பிரமாண்டம்வரை அளாவி நிற்பதினால் கோட்டையைக் கடந்து என்னிடம் அணுகமுடியாது

நான் மிகவும் ஆவலோடு நிறைவேற்றிவந்த சதுபாரிசுத்தஸீல மெனும் நால்வகைத்தருமம்கோட்டையின்நான்கு வாசல்களாகும்

அவ்வாசல்களில் எனது நித்யபிரம்மச் சாரிய தருமம் எனது காவற்காரர்களாய் இருப்பதால், என்னுடன் போர் புரிய வருபவர்கட்கு வாசல் திறந்துகொடாது மூடிக்கொள்வார்கள். நானிருக்கும் வஜ்ராசனம் என்னுடைய வாகனமாகும், இவ்வரசமரம் எதிரிகளை வெல்லும் ஜெயக்கொடியும், குடையுமாகும். பூர்வீகத்தில் நிறைவேற்றிவந்த எனது தவயோகத்தினுல் உதித்துள்ள இவைகள் ஒன்றும் என்னைவிட்டகன்று போகாது. இவ்விதம் கருதிய வீரபுருஷோத்தமர் தவத்தினுல் உண்டுபண்ணிய நகரத்தில் ஸீலம் எனும் சேனைகள் சூழ்ந்துவர வஜ்ராஸனம் எனும் வாகனத்தில் அரசமர நிழலாகிய குடையின் கீழ் வீற்றிருக்கும் கருணைவள்ளல் யானையை வெல்லும் சிங்கராஜனைப்போலும், அசுரர்கட்கஞ்சாத இந்திரனைப்போலும், காகங்கட்கஞ்சாத அன்னப்பக்ஷி போலும் வஜ்ராசனத்தில் வீற்றிருக்கும் அருளாளனின் தேகத்திலிருந்து உதித்தெழும்பிய அருள்நிறைந்த ஒளி பிரமாண்டம் வரையும் பரவிநின்றன.

மாரசம்மாரம்.

அவ்விதமிருக்க தேவர்கள் துதிக்கும் நம் பெருமானின் பேரில் கர்வம்கொண்ட மாரன் அக்கினிஜுவாலை கொதித்தெழும் புவதைப்போல் பொறுக்காத பெருங் கோபங்கொண்டு யுத்தம் செய்ய எதிர்த்துவரும் வேளையில் பலவிதமான அபசகுணங்கள் தோன்றின. அதாவது இந்த மகாபூமியானது கிரமமாகக் குலுங்க

ஆரம்பித்தன, நாற்புறமும் அந்தகார இருள் சூழ ஆரம்பித்தது, ஆயிரக்கணக்கான சூலங்கள் ஆகாயத்திலிருந்து எங்கும் சூழ்ந்து விழ ஆரம்பித்தன, மாரனையும் அவன் தூதர்களையும் வரச்சொல்லி, பின் மறைந்ததுபோல் சூரியனும் அஸ்தமனமாயிற்று. மின்னல் வெட்டி இடிமுழங்கி மழைபெய்ய ஆரம்பித்தன, வனத்தில் வசிக்கும் காகம், கூகை முதலிய பக்ஷிகளெல்லாம் அபசகுன நாதம் செய்ய ஆரம்பித்தன, இருளடைந்த வேளையில் இவ்விதமான அபசகுனங்களை உண்டுபண்ணிவரும் மாரன் அரசடியில் வீற்றிருக்கும் பெருமானின் பக்கம் வரமுடியாமல் தூரத்திலேயே நின்று வாயுபகவான் நடுங்கும்படியான ஓர் பிரளயக் காற்றை உண்டுபண்ணி இச்சித்தார்த்தரை எமலோகம் அனுப்பி வைக்கிறேன் எனக் கருதி அனுப்பிவைத்தான். அக்காற்றானது அரை, ஒன்று, இரண்டு யோஜனை தூரம் பரவி பெரிய விருக்ஷங்களைத் தவிடுபொடியாக்கி வைக்கோல் போரில் நெருப்புப் பட்டவுடன் புகை கிளம்புவதைப்போல் சுருட்டியடித்து, பிரட்டி தூளாக்கி பரவியடிக்கப்பெற்றன.

பெருமானின் அன்புநிறைந்த தவயோக மகிமையினால் தூசிகளெல்லாம் அடங்கி அக்காற்று அரசமரத்திலுள்ள ஓர் இலையாவது அசையாமல் செய்து அகன்றது. பின் மாரன் பார்க்கிறான். இதோ செய்கிறேன் பார் எனச்சொல்லி கம்பாலடிபட்ட சர்ப்பத்தைப்போல் சீறிக் குதித்து இச் ஸித்தார்த்தயோகியை ஜலத்தினால் கொல்லுகிறேன் எனக் கருதி உலகமழியும் காலத்தில் ஏற்படும் மழையைப்போல் இடியிடித்து மின்னல்வெட்ட ஓர்மழையைப் பெய்வித்தான்.

அம்மழையானது சுவாமிக்கு பூஜைபண்ணும் புஷ்பத்திற்கு பன்னீர் தெளித்ததுபோல் இருந்ததேயல்லாமல் கருணைவள்ளலை நனையும்படி செய்யவில்லை. மழையால் பெருகிவந்த வெள்

ளம் சுவாமியின் காவியாடையிலும்கூடப் படாமல் அகன்று விட்டது. ஸித்தார்த்த கௌதமர் பெருகிவந்த வெள்ளத்தினுல் அடிபட்டு கடலில் மூழ்கிவிட்டானே என்று மாரன் பார்த்த பொழுது நீலவர்ண மேகத்தினுல் மறைந்து பின் உதித்தெழும்பும் பூர்ணச் சந்திரனைப்போல் பிரகாசிக்கும் போதிஸத்தரைக் கண்டு மதயானையைப்போல் கோபித்து இவனைக் காலால்மிதித்து சன்னுபின்னமாக்கி விடுகிறேன் எனக்கருதி கருங்கற்களாக ஓர் மழையை வருஷித்தனள், பெரிய பர்வதங்களும், சிறு சிறு மலைகளும் உருண்டுவந்து உடைந்து சுவாமிக்குப் பூஜைபண்ணும் புஷ்பங்களைப்போல் விழுந்ததேயன்றி அருளாளனின் தேகத்தில் அணுவளவாவது படவில்லை. பின்னும் மாரன் கடுங்கோபங் கொண்டு கல்லால் அடிபட்டு ஸித்தார்த்தர் தூளாகிவிட்டானு என்று பார்த்தபொழுது கௌதமரின் ஒளிபரவி சிரசில் சுற்றிக் கொண்டிருக்கும் சக்கரத்தையும் மாருத ஓரே எண்ணத்தையும் கண்டு தீயிலிட்ட உப்புப்போல் படபடவென பல்லைக் கடித்துக்கொண்டு இவனின் அழகிய சீரமும், ஒவ்வொரு உறுப்புகளும் வெவ்வேருகத் துண்டித்துப்போட வேண்டுமென்று அக்கொடிய மாரன் ஆயுதங்களை வருஷித்தனள், ஒருபுறம் வெட்டும் கத்திகள், இருபுறம் கூர்மையுடைய கத்திகள், வாள், சூலம், ஈட்டி கெதை முதலான ஆயுதங்களை வாரி வருஷித்தபொழுது அவ்வாயுதங்களெல்லாம் புஷ்பங்களாகவும், சந்தனம், ஊதுபத்திகளாகவும் சுவாமிமுன்பு விழுந்தன. பின் துஷ்ட மாரன் ஸித்தார்த்த கௌதமரிஷி கத்திகளால் வெட்டுண்டு மாண்டானு என பார்த்தபொழுது யோகத்தில் ஆழ்ந்திருக்கும் பரந்தாமனைக்கண்டு நெரிப்பிலிட்ட வைக்கோல் புகைபோல் அக்கினிஜ்வாலைகளுடைய கரிமழையை வருஸித்தனள். அவ்விதமான அக்கினிஜ்வாலை நரகாக்

கினியிலிருந்து கொதித்தெழும்புவதைப் போல் கரிகளெல்லாம் ஆகாயத்திலிருந்து வந்து சுவாமியின் திருப்பாதத்தடியில் விழுந்ததல்லாமல் நமது அருளாள மூர்த்தியின் தேகத்தில் சற்றுவது படவில்லை.

பின்னும் மாரன் எட்டிப்பார்த்து கௌதமயோகி நெருப்புக்கரியில் வீழ்ந்து சாம்பலாயினனோ எனப் பார்த்தபொழுது அருணோதயத்தில் உதித்தெழும்பிவரும் சூரியனைப்போல் ஒளி பரவி மத்தியில் வீற்றிருப்பதைக் கண்டு முன்னிலும் பன்மடங்கு கோபங்கொண்டு அவ்வரசமரத்தடியில் இருக்கமுடியாமல் வெப்பத்தினால் அழிந்துபோகச் செய்கிறேன் எனக்கருதி நெருப்பு மழையைப் பெய்யச் செய்தனன். அந்நெருப்பு மழை சுவாமியை சுற்றி சூழ்ந்துவந்து கற்பூரம், சாம்பிராணி, பத்தி முதலியவைகளால் பூஜித்ததுபோலாயிற்று. திரும்பவும் பாவி மாரன் எட்டிப் பார்த்தபொழுது பூரணச் சந்திரனைப்போல் ஜொலிக்கின்ற கருணை நாதனைக்கண்டு கோபித்து ஸித்தார்த்தன் சாம்பலாகாமல் போனானே இன்னுமிவனுக்கு பலதுன்பங்களைச் செய்கின்றேன் எனச் சொல்லி சேறுநிறைந்த மழையைப் பெய்வித்தனன். அச்சேறெல்லாம் சுவாமிக்கு பூஜைசெய்யும் சந்தனம், குங்குமம், இவைகளைப்போல் சுவாமியைச்சுற்றி வீழ்ந்ததேயன்றி ஆதிமூலத்தின் அருகில் விழவே யில்லை.

பின் நரக அதிபதியான மாரன் கடுஞ் சினங்கொண்டு நெருப்புப் பொரிபறக்கும் மணல்மழையை பெய்வித்தனன். அக்கினிமயமான அம்மணல்மழையும் முத்துப்பவள மாலையைப்போல் ஆகாயத்திலிருந்து வந்து அண்ணலைச் சுற்றி வீழ்ந்ததேயன்றி அருணகிரிநாதனை சுடவில்லை. பின்னும் பாவி மாரன் ஸித்தார்த்த கௌதமர் மாண்டானா என்று பார்த்தபொழுது அரசமரத்தடியில்

பிரகாசித்து மஹாமேரு பருவத ராஜனைப்போல் ஜொலிக்கின்ற போதிஸத்த பெருமானைக்கண்டு அக்கினி பொரிபறக்க அடங்காத கோபங்கொண்டு பின்னும் மாரன் இவ்வாண்டியைக் கொல்லாமல் விடுவேனோ எனக் கருதி இருள்நிறைந்த அந்தகாரமுண்டு பண்ணி, இருளைக்கண்டு ஓடிவிடுவான் என அனுப்பிவைத்தான் அப் பயங்கரமான இருள் பெருமான் வீற்றிருந்த அரசமரத்தைச் சூழ்ந்துவந்து பின் அந்தர ஸ்தானமாயிற்றன. அந்தகார இருள கன்று அருள்நாதன் அரசமரத்தடியில் அமர்ந்திருப்பதைக் கண்டு மதிமயங்கிய மாரன் இவ்விதம் யோசிக்கலானான். ஆ ஹா, இதென்ன ஆச்சரியம் இச் ஸித்தார்த்த கௌதமரை அடியோடழித்துவிடக்கருதி நான் சண்டமாருத வாயுவை அனுப்பினேன் பாஷாணமழை, ஆயுதமழை, சாம்பல்மழை, கரிமழை, நெருப்புமழை, சேற்றுமழை, முதலியன பலவிதமாய் வருஷித்ததுமல்லாமல் பயங்கரமான அந்தகார இருளை உண்டுபண்ணி அனுப்பியும் ஒரு பயனுமில்லை, நானெவ்வளவு யுத்தம் செய்தாலும் இச் ஸித்தார்த்த கௌதமரிஷியை பூஜிப்பதைப் போல் அல்லாமல் இருந்த இடத்தைவிட்டு எழுப்ப முடியவில்லை எனக்கருதி அடங்காத கோபங்கொண்டு மாரன், தன் உயிருக்குச் சமானமானதும், ஒரு போதும் கைவிடாததுமான தன் கரத்திலிருந்த சக்ராயுதத்தை எடுத்து அரசடியில் வீற்றிருக்கும் நமது நாயகர்மீதில் எறிந்தன சக்ராயுதத்தின் மகிமை என்னவெனில் மாரன் கோவத்துடன் மகாமேருமீதில் எறிந்தால் மகாமேரு உடைந்து தவிடுபொடியாயிவிடும், ஆகாயத்தில் வீசினல் பன்னிருவருடங்கள் மழை பெய்யாது, பூமியில்போட்டால் புல்லுகள் கரிந்து விருக்ஷங்கள் காய்ந்து அடியோடு பாழாகிவிடும், சமுத்திரத்தில் போட்டால் ஜலம் வற்றிவிடும் அப்பேர்பட்ட சக்ராயுதத்தை பெருமான் மீது வீசி எறிந்ததும் அச்சக்ராயுதம் ஆகாயமண்டலத்தில் எறிச்

சென்று நெருப்பும் புகையுமாகப் பரவி ஆயிரத்தெட்டண்டங் களும் நடுங்க நாதகோஷம் செய்து பின்வந்து மாரனின் அங்கார குணத்தை அடக்கி வெட்கப்படச் செய்த பின் அச்சக்ரா யுதம் சர்வேஸ்வரனுடைய தாமரை மலர்போன்ற திருவடிதனில் சாஷ்டாங்கம் செய்வதுபோல் விழுந்திற்றது. சுவாமியின் பாதத் தில் நமஸ்காரம் செய்வதுபோலிருந்த சக்ராயுதத்தைக் கண்ட பாவி மாரன் கண்சிவக்கப் பற்களைக்கடித்து அடக்கமுடியாத கோபங்கொண்டு அக்கினிமுன் ஈயைப்போல் துடித்தும் நீர்ச்சுழியி லகப்பட்டுக் கரையேற வழியில்லாது தத்தளிப்பவன் போலும் ஜெயங்கொள்ள முடியாமல் நான் தோற்றுப்போவேனென்பதை உணர்ந்து தனது சிவந்த கண்களை உருட்டிவிழித்து தனது படை களை நோக்கி எனது தோழர்களே நீங்கள் என்ன செய்கிறீர்கள், நீங்கள் எனது சாமர்த்தியத்தைப் பார்க்கிறீர்களா ஓடிவாருங்கள் ஸித்தார்த்தரை இழுத்தெடுங்கள், இரண்டாய் கிழியுங்கள், இரண்டு கால்களையும் பிடித்திழுத்து ஆயிரத்தெட்டு அண்டம் களுக்கும் அப்பால் வீசுங்களென பலவாறு சொல்லி தன் படை களுக்கு ஆக்ஞாபித்தான். பின் ஆயிரம் கரங்கள் நிர்மித்து ஒவ் வொரு கரங்களிலும் பலபல ஆயுதம் தரித்து தான் நிர்மாணித் துண்டுபண்ணிய கிரிமேகலா எனும் யானைமீதேறிக் குதித்து அரசமர நிழலில் வீற்றிருக்கும் மகா வீர புருஷோத்தமரின் முன்னிலையில் நின்று சொல்லுவான் :—

ஓ ஸித்தார்த்தரே இவ்வஜ்ராசனமும், இப் பூமியும் என் னுடையது, இவ்விடத்தில் இருக்கவேண்டாம் சிக்கிரம் இவ்விடம் விட்டெழும்பிப் போய்விடு என்றனன். சக்கரவர்த்தி ராஜனும் அவ தரித்து சங்குசக்ராயுதத்தோடு சக்கரவர்த்தி பீடத்தில் அமர்ந் திருக்கும் ராஜனைக்கண்டு சண்டாள குலத்தில் பிறந்த சண்டா

[stamp]

ளன் வந்து சக்கரவர்த்தியே இறங்கிப் போ என்பதுபோல் பீடம் என்னுடையதென்று அதட்டிச் சொன்னான்.

அவ்வேளையில் அன்பும் கருணையும் நிறைந்த அருளாளன் வாய்திறந்து இவ்விதம் அருளினார்:- ஏ பாவி மாரனே இவ்வஜ்ராசனத்தில் வீற்றிருந்து புத்தபதவியை அடைவதற்கு அனந்தங் கோடி கற்பங்களாக தஸபாரமித்தா தருமங்கள் நிறைவேற்றி வரும் பொழுது நான் செய்த புண்ணிய தருமங்கள் உனக்குத் தெரியுமா ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களுக்கதிகமாகவே எனது நேத்திரங்களைக் கொடுத்துள்ளேன், சப்தமகா சமுத்திரங்களுக் கதிகமாகவே எனது ரத்தத்தை சிந்தியிருக்கிறேன், நான் வெட்டிக்கொடுத்த சிரங்கள் ஒன்றாகக் குவித்தால் மகாமேருவுக்கு கூடவே அதிகமாகும், எனது சரீர மாமிசங்களைக் கேட்டுவந்த அரக்கர் முதலானவர்களுக்கு வெட்டிக்கொடுத்த மாமிசம் இப்பூமியிலுள்ள மண்ணுக்கும் அதிகமாகவே இருக்கும் என் மனைவி பிள்ளைகளை ஊழியம் செய்வதற்கு கேட்டுவந்தவர்கட்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்துள்ள புத்திரர்கள் தொகையை சமுத்திர மச்சங்களை எண்ணினாலும் அத்தொகை எண்ணமுடியாது. எண்ணிறந்த ஜென்மங்களில் சக்ரவர்த்தி பீடத்தை துறந்தேன் தஸபாரமித்தா தருமத்தை நிறைவேற்றிய பெருமையால் இவ்வஜ்ராசனம் எனக்கமைந்துள்ளது இதை நீ கேட்கவேண்டாம், நீ எப்போதாவது இதை விரும்பி தஸபாரமித்தா தருமம் செய்தனையா? உனது அவயவங்களும், மனைவி பிள்ளைகளையும் கொடுத்ததுண்டா? உனக்கு சாக்ஷியார்? எனக்கறியச் சொல் என்று சுவாமி வினவ

அதைக்கேட்ட மாரன் ஓ அப்படியானால் இதோ பார் எனது படைகளெல்லாம் எனக்கு சாக்ஷி எனச்சொல்லி தன் படைகளை

... ... ககசவை
ஆரம் ம். 1934
கேப்பிட்டி
தெல்லிப்பழை

ஸ்ரீ புத்தர் புராணம்

பார்த்தமாத்திரத்தில் தசபிம்பரா எனும் பத்துவிதமான படைகளும் நாங்களெல்லோரும் சாக்ஷி எனக் கூக்குரலிட்ட சப்தம் உலகமழியு காலம்போல் முழங்கியது மன்றி பிரமாண்டம்வரை ஏறிச்செல்ல தேவர்கள் எல்லாம் கேட்டு நடுங்கினர்கள் படைகளின் சாக்ஷியோடு மாரன் சொல்லுவான் ஓ ஸித்தார்த்தரே உமக்கு சாக்ஷிசொல்ல யாராவது உண்டா? அவ்விதமிருந்தால் சீக்கிரம் உரைவாய் என்றனள்.

அதற்குக் கின்னரர் கீதம்போன்ற தொனியையுடைய சுவாமி அருளியதாவது, ஓ பாவி மாரனே உனக்கு சாக்ஷி உன் படைகள்தானே, எனக்கு சாக்ஷிசொல்ல இங்கு ஒருவருமில்லை, எனது தருமமும், பூமாதேவியும் தவிர இங்கொருவருமில்லை என்று தமது திருக்கரத்தை பூமியில் நீட்டியமாத்திரத்தில், பூமாதேவி திடீரென்று குதித்தெழும்பி சுவாமி முன்னிலையில் நின்று ஓ சுவாமி! தாங்கள் கடைசி ஜெம்மத்தில் வெஸ்ஸந்திர ராஜனுக அவதரித்து மந்திராதேவியாகிய மனைவியையும், ஜாளிய, கிருஷ்ணஜினு எனும் புத்திரர்களையும் தத்தம்செய்தருளிய நேரத்தில் இப்பூமி எழுதரம் கிருகிருவென நடுக்கிற்று; அதைப்போல் இன்றைக்கும் உங்கட்கு நானே சாக்ஷியென சொன்னமாத்திரத்தில் மாரன் ஏறிவந்த கிரிமேகலா எனும் யானை சுவாமியை நமஸ்கரித்து விழுந்தது மாரன் படைகள் நாலா பக்கங்களிலும் காற்றடிபட்ட பஞ்சுபோல் அகன்றுவிட்டன படைகள் ஓடுவதைக்கண்ட மாரன் மனக் கவலையடைந்து பாதாளத்திலிருந்து பிரமாண்டம்வரை பார்த்தபொழுது தனக்குதவியாக ஒருவரும் இல்லாதிருப்பதைக் கண்டு நடுக்கமுற்று தனது ஆயிரங் கரங்களிலுமிருந்த ஆயுதங்களை எறிந்துவிட்டு ஓடினுன்.

மாரனும் படைகளும் ஓடுவதைக்கண்ட பிரமன் முதலான இந்திராதி தேவர்களும், முனிவர்களும், கெருடர், கிம்புருடர்' காந்தர்வர்கள். நாகலோகவாசிகள் எல்லோரும் அகமகிழ்ந்து மாரன் தோற்றான். ஸ்ரீ ஸித்தார்த்த கௌதம போதிஸத்த பெருமான் ஜெயம்பெற்றார்; வாருங்கள் தேவர்களே ஜயமங்களோர்சவமும், புத்த மங்களோற்சவமும் ஒரேமுறையில் நடத்துவோம் எனச்சொல்லி திரிலோக மக்களும் அரசடியில் வீற்றிருக்கும் மகா வீரோத்தமரை சுற்றிப் புடைசூழ்ந்து மங்கள கோஷ்டி செய்யத் துவங்கினார்கள்.

மாரயுத்தம் முற்றிற்று.

புத்தபதவி அடைதல்.

இரவு முழுதும் யுத்தம் செய்து ஜெயங்கொள்ள முடியாமல் மாரன் ஓடிப்போய் இருளடைந்து விடியுமுன் வண்டுகள் கீதம் பாடுவதுபோலும், காகம் முதலான பக்ஷிகள் மனங்குளிர நாதம் செய்வதுபோலும், வெண்சாமரை வீசுவது போல் காற்று சுவாமியின்மேல் வீசவும் முகமரர்ச்சியாயிற்று.

அன்றிரவு முதற்சாமத்தில் சுவாமிக்கு அறிவு தோன்றிய போது, ஆசை யெனும் பாசத்தால் கட்டுண்டு இறந்தும், பிறந்தும், சம்சார சாகரத்தில் வீழ்ந்து தத்தளிப்பதேயன்றி கரையேறுவது கஷ்டமென்பதையும், தான் அனந்தங்கோடி ஜென்மங்களாய்ப் பிறந்திருப்பதையும், அதைப்போல் சகல மக்களுக்கும் பிறப்பு உண்டு என்பதையும் அறியக்கூடிய பூர்வ நிவாஸனுஸ்மிர்த்திஞானம் புலப்பட்டது. நடு ஜாமத்தில் சுத்துப்பாத ஞான

மும், பிற் ஜாமத்தில் ஆசிரவக்ஷயகர ஞானமும் உதித்தது. பின் அருளோடருளாய் அறிவில் சுடராகி ஆதியந்த முணர்ந்து' சோவான், சக்குருதாகாமி, அனுகாமி, அரிஹத் எனும் சாலோக சாரூப சாமீப சாயுக்ஷய எனும் படிகள் கடந்து எட்டாம் படிக் கப்பால் கடந்து நின்று ஞான அறிவொளியைப் பெற்று அறி வெனும் ஞானத்தோடு கலந்து, சர்வலோக விஷயங்களையும் மற் றொருவர் உதவியின்றி தன் சுயபுத்தியால் உணர்ந்தமையால், புத்தோ அல்லது புத்தர் என விளங்கிற்று. சூரியோதயமும் புத்த பதவியும் ஒரேவேளையில் சித்தியாயிற்றன.

முதல் வாரம்.

பெருமான் புத்தபதவியை அடைந்தவேளையில் ஆயிரத் தெட்டு அண்டங்களும் ஒரே ஜோதிமயமாகவும், மங்கள தினமாக வும் பெருகிநின்றது. முழு உலகங்களிலும் விருக்ஷங்கள் எல்லாம் மலர்ந்து ஒரே புஷ்பவளமாயிற்று, எண்ணுயிரம் லோகாந்தரி இருளடைந்த நரகங்களெல்லாம் ஒரே ஜோதிமயமாயிற்று, கடல் நீர் உப்பில்லாமல் ஒரே இனிப்பாயிற்று, ஆற்றுவெள்ளம் பெருகி ஓட ஆரம்பித்தது, குருடர்கள் கண்விழித்தார்கள், ஊமையர் சங் கீதம் பாடினார்கள், சப்பாணிகள் எழுந்து நடந்தனர், செவிடர் சங்கீதம் கேட்டு ஆனந்தமடைந்தனர், சிறைகளில் அடைபட் டிருந்த சகல ஜீவராசிகளும் விடுதலையடைந்தன. சகல நரகாக்கினி களும் தானே அமிழ்ந்தன, பிதிர்லோகவாசிகள் தாகம் நீங்கிற்று, மிருகஜெந்துக்கள் பயமற்றன, அசாத்தியமான நோய்களினால் பீடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் சுகமடைந்தார்கள், இவ்விதம் முப்பத்திரெண்டு சுப சகுணங்களோடு ஆயிரத்தெட்டு அண்டங்

களும் நடுநடுங்க கோடிசூரிய பிரகாசத்தோடு அறிவு எனும் புத்த பதவியைப் பெற்று, அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகர் எமது அருளாளன் தேன் வைத்திருக்கும் பாத்திரம் கொள்ளாது பொங்கி வழியுமாப்போல் தருமாமுதம் இடமில்லாமல் பெருமானைச் சுற்றி ஜொலிக்குமாப்போல் இருப்பதை உணர்ந்து பூர்வீக புத்தர்களைப்போல் தானும் இவ்விதம் புகன்றனர்.

பாலி.

அனேக ஜாத்தி ஸங் ஸாரங்
சந்தா விஸ்ஸங் அணிப் பிஸங்
கஹக் காரகங் கவே சந்தோ
துக்கா ஜாத்தி புணக் புணங்
கஹங் காரக்க திட்டோசி
புணகேஹங் நக்கா ஹசி
சப்பா தெப்பா சுகா பக்கா
கஹக் கூட்டங் விசங் கித்தங்
விசங்கார கத்தங் சித்தங்
தண்ஹனங் கய மச்ஜ காத்தி

இதன் பொருள்:

இவ் வஜ்ராசனத்தில் வீற்றிருந்து புத்த பதவியை அடைவதற்கு நான் அனந்தங்கோடி கற்பங்களாகவே புண்ணியம் செய்து வந்தேன். அக்காலங்களில் என் கண்களைத் தோண்டிக் கொடுத்தேன், தலையை வெட்டிக் கொடுத்தேன், இருதயத்தை வெட்டிக் கொடுத்தேன், மாமிசத்தைக் கொடுத்தேன், இரத்தத்தைக் கொடுத்தேன், எனது மனைவி, பிள்ளைகளைக் கொடுத்தேன்

அப்புண்ணிய மகிமையினால் மாரனை வென்று புத்தபதவியைப் பெற்றேன், மனங் குளிர்ந்து ஆனந்தமடைந்தேன். ஆகையால் இவ் வஜ்ராசனத்தை விட்டு எழும்பமாட்டேன் என ஒரு வாரம் வரை தானடைந்த தருமவழிகளை நினைந்து நினைந்து அவ்வாசனத்திலேயே அமர்ந்திருந்தனர். அதைக்கண்ட தேவர்கள் சந்தேகமடைந்து, ஸித்தார்த்த கௌதமர் இன்னும் புத்தராகவில்லை பத்மாசனத்தை விட்டெழும்பாமல் இருக்கிறாரே எனப் பேசிக் கொண்டனர்கள். தேவர்களின் எண்ணமறிந்த பெருமான் ஒருவாரம் அவ்வாசனத்தில் வீற்றிருந்து பின் ஆகாயத்தில் எழும்பி அந்தரத்தில் நின்றனர். அதுவேளை புத்தபெருமானின் சரீரத்திலிருந்து பச்சை, நீலம்,வெள்ளை, சிகப்பு, மஞ்சள் ஆகிய பலவர்ணங்களோடு ஜோதிமயமானது. பிரமாண்டம்வரை ஏறிச்செல்ல ஆரம்பித்தன. அவ்விதம் திருவிளையாடல்களைச் செய்து தேவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்து பின் கீழிறங்கி அவ்வரசமரத்தைப் பார்த்து யோசிக்கிறதாவது, சென்றவாரம் மாரன் கொடிய யுத்தம் செய்கையில் எனக்கு நிழலாக நின்று என்னை ஜெயம்பெற செய்த அரசமரமே எனக்கு உன்னை மறக்கமுடியாது என எண்ணிக்கொண்டு விழித்தகண் மூடாமல் அரசமரத்தை பார்த்த பார்வையாக ஒரு வாரம் நின்றனர்.

அப்பொழுது தேவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அரசமரத்திற்கும் சுவாமிக்கும் இடையில் மாணிக்கத்தினால் பாலம் கட்டியதுபோல் ஆகாயமளாவி நிற்க அந்தரத்தில் சுவாமி நடந்து உலாவிவர தேவர்களின் ஆனுபாவத்தால் பாலம் ஒன்றை உண்டு பண்ணி அளித்தனர்.

அவ்வேளையில் பிரமன்முதலான இந்திராதி தேவர்கள் போற்றும் புத்தபெருமான் நீல மேனியுடைய ஆகாயத்தில் நக்ஷத்

திரங்கள் சூழ்ந்துவரும் பூர்ணச் சந்திரனைப்போல் அவ்வாசனத்தில் ஒரு கோணத்திலிருந்து மறு கோணம்வரை நடந்து கொண்டே திருவிளையாடல்களைச் செய்து ஒருவாரம் கழித்தார்.

பின் தேவர்கள் அரசமரத்தின் வடபாரிசத்தில் ஓர் மாணிக்க மண்டபம் நிர்மாணித்து புத்தபெருமானை எழுந்தருளும்படி ஆராதனை செய்தார்கள். தேவர்களின் வேண்டுகோளின்படி எம்பெருமான் மாணிக்க மண்டபத்திற்கு எழுந்தருளி அங்கு அமைந்துள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். பஞ்சவர்ணம், சத்வர்ணம் ஆகிய நிறங்களோடு கூடிய ஜோதிமயம் திரிலோகங்கட்கும் ஜொலிக்க ஆரம்பித்தன.

“பட்டாண பிரகரண’ எனும் அளவில்லா தருமத்தின் ஆதியந்தங்களை தன் உயர்ந்த புத்த ஞானத்தால் யோசித்தவண்ணமாய் ஒரு வாரம் அங்கிருந்தனர்.

ஐந்தாவது வாரம் அவிடம் விட்டகன்று நிக்ரோத விருக்ஷமாகிய அஜபால மரத்தடியில் கிழக்குமுகமாக வீற்றிருந்தனர்,

இவ்விதமிருக்க யுத்தம் செய்யமுடியாமல் மனக்கவலையடைந்த மாரன் தேவர்களால் உண்டாகும் நிந்தனைக்கு ஆளாகுவதால் வெட்கித்து பயந்து ஒரு வனத்தில் சென்று கீழ்முகமாக இருந்துகொண்டு இவ்விதம் யோசிக்கலானான்:— ஆ ஹா மோசம் வந்துவிட்டதே, ஸித்தார்த்த கௌதமரைப் பலமுறையும் தடுத்தேன், பாசபந்தத்தினால் ஒன்றுமே செய்யமுடியாமல் போயிற்று அவர் என்னிலும் எண்மடங்கு பெரியவராய் இருக்கிறார், “தான பாரமித்தா” ஸீலபாரமித்தா, நைஸ்கிரமியபாரமித்தா, பிரக்ஞா பாரமித்தா, வீரியபார மித்தா, சாந்திபார மித்தா, சத்தியபார மித்தா, அதிஷ்டான பாரமித்தா, உபெக்ஷாபாரமித்தா எனும்

பத்துவித தருமங்கள் உடையவர், அவரை வெல்லமுடியாததற்கு என்னசெய்வேன் தனக்கெவ்விதமான தருமமு மில்லை என்று நினைத்தவண்ணமாய் ஒருகையைத் தாடையிலும் ஒருகையைப் பூமியிலும் வைத்து பெருமூச்சுவிட்டு ஏக்கமுற்றிருந்தான்.

அதை உணர்ந்த மாரனின் புத்திரிகளான தண்ஹய அரத்திய, றகாய எனும் மூன்று புத்திரிகளும் ஓடிவந்து எமது அருமைத் தந்தையே நீங்கள் இவ்வித சஞ்சலமடையக் காரண மென்னவென்று வினவினர். அதற்கு மாரன் எனதருமை புதல்வி களே என் கட்டுக்கிடுபடாமல் ஸ்ரீ ஸித்தார்த்த கௌதமர் புத்த பதவியை அடைந்திருக்கிறார். இனி எனது நரகமெல்லாம் பாழாய் போய்விடும் என்றனன்.

அதற்கு அத்தேவபெண்கள் மாரனைநோக்கி ஓ பிதாவே சஞ்சலப்படவேண்டாம் நாங்கள் அங்குசென்று கண்சாடையில் எங்கள் அழகைக் காட்டி அவரை மயக்கி இழுத்துக்கொண்டு வருகிறோம் என்று விடைபெற்றுக்கொண்டு முன்கூறிய அஜ பால மரத்தடியில் வீற்றிருக்கும் திரிலோக நாயகமாகிய ஸ்ரீ புத்த பெருமானின் தவத்தைக் கெடுக்கவேண்டுமென்று எண்ணத்தோடு மூன்றுபேரும் போக ஆரம்பித்து இவ்விதம் பேசிக்கொண்டனர்' தங்காய் நாம் ஜாக்கிரதையாய் போகவேண்டும் அதாவது ஆண் களில் சிலர் யௌவன ஸ்திரீகட்கு ஆசைப்படுவார்கள், சிலர் வயது முதிர்ந்த ஸ்திரீகட்கு ஆசைப்படுவார்கள், சிலர் மத்திம வயது உடைய ஸ்திரீகட்கு ஆசைப்படுவார்கள் ஆகையால் நாமிப் பொழுது பல ரூபங்கள் கொள்ளவேண்டியது எனக் கூடிப் பேசி பன்னிரெண்டு வயதுடையவளாய் ஒருத்தியும், பதினாறு வயதுடையவளாய் ஒருத்தியும், இரண்டு பிள்ளைகள் பெற்றவள்

போல் ஒருத்தியுமாக வேஷமிட்டு நறுமணம்வீசும் புஷ்பங்கள் சூட்டி, தேகங் குலுங்க அன்னநடைநடந்து அஜபால மரத்தடியில் வீற்றிருக்கும் புத்தபெருமானின் முன்னிலையில் நடனமாட ஆரம்பித்தனர்.

நடனமாடும் பெண்களைச் சற்றுவது பார்க்காமல் யோக நிலையில் இருக்கும் புத்தபெருமானைப்பார்த்த பெண்கள் வாயில் வந்தபடி பேசத் தலைப்பட்டார்கள். தருண வயதுடைய ஸித்தார்த்த கௌதமரே எங்களைப்போன்ற பெண்களைக் கண்டால் சற்றுவது மனமிரங்காத உமது மனம் கருங்கல்தானு? உமது தங்கநிறம்போன்ற யௌவன பருவத்தை வீணுய் கெடுத்துவிடுகிறீர்கள், வாருங்கள் வீட்டிற்கு போவோம், இவ்வுலகத்தில் நாம் இன்ப சுகங்களையடைவதை விட வேறுசுகம் எது? ஓ ஸித்தார்த்தரே! உமது பெயரைக் கவனிக்கையில் உம்மைக்கண்டு காதலினுல் காமக் கடலில் வீழ்ந்து தத்தளிக்கும் பெண்களை ஆதரித்து காமவிடாய் தீர்த்து, இவ்வுலக இன்பசுக மடைவதற்கு உம்மை விட வேறொருவருமில்லை எங்கள் எண்ணம் உங்களால் சித்திப்பதால்தான் உம்மை ஸித்தார்த்தரென அழைக்கப்படுகிறது; என பலவாறு சொல்லி ஒரு பயனுமின்றி போய்விட்டனர்.

பின் அஜபாலமரத்தடியில் ஒருவாரமிருந்து தியான சுகமடைந்த புத்தபெருமான் அவிடம் விட்டகன்று "முச்சளிந்த" எனும் வனத்தில் "மிதில்" மரத்தடியில் ஒருவாரம் வீற்றிருந்தார். அவ்வொரு வாரமும் இடிவெட்டிப் பெய்த மழையில் நனையாமல் அதன் பக்கத்துத் தடாகத்தில் வசிககும் முச்சளிந்த நாகராஜன் கரையேறிவந்து சுற்றி வட்டமிட்டு தன் படமெடுத்து சுவாமியை பாதுகாத்துக் கொண்டனர். முச்சளிந்த ராஜன் காவலில் ஒரு வாரமிருந்து அவிடம் விட்டகன்று கிரிபாலவனத்திற்கேகி

அங்கோர் 'கிரிபால' மரத்தடியில் ஒருவாரமுழுதும் தானுணர்ந்த தருமவழிகளை நினைந்தவண்ணமாய் இருந்தார். இவ்விதம் நாற்பத்தி ஒன்பது நாட்கள் ஆகாரமின்றி இருந்தனர்.

அதாவது வைகாசி மாதம் பௌர்ணமியன்று சுஜாத்தா பரிந்தளித்த பாற்சாதம் அருந்திய நாள்முதல் இவ்வேழு வாரங்களும் ஆகாரம் இல்லாமல் இருந்து ஐம்பதாம் நாள் காலையில் அப்பாலைவனத்தை விட்டகன்று "அனோதத்த"எனும் பொய்கைக்குச் சென்று அதில் ஸ்நானம்செய்து, பின்னும் முன்கூறிய பாலமரத்தடியில் வந்து வீற்றிருந்தனர்.

பூர்விகத்தில் புத்தரைக் கண்டு அன்னதானமிட வேண்டுமெனப் பிரார்த்தனைசெய்துள்ள இரண்டு பக்தர்களும் அவர்களின் தோழர்களுமாக இருநூறு வண்டிகளில் சரக்குகள் ஏற்றிக்கொண்டு சுவாமி வீற்றிருக்கும் பாலைவனத்தில் புகுந்தார்கள், அதுவேளையில் அவ்வனத்தில் வசிக்கும் வனதேவதை அந்தரத்தில் நின்று புகன்றதாவது :—

ஓ மானிடர்களே! இவ்வனத்தில் ஸ்ரீ கௌதம புத்த பெருமான் எழுந்தருளி இருக்கிறார். அன்னவருக்கு அன்னமிடுபவர்கள் இருந்தால் இதுதான் சமயமென்றனர்.

வள்ளுவ வர்த்தகர்கள் அகமகிழ்ந்து தினைப்பொரியும், தேனும் கொண்டுவந்து ஸ்ரீ புத்த பெருமானின் முன்னிலையில் வைத்து ஐயனே! அடியார்கள்மீது அன்புகொண்டு இவ்வன்னத்தை புசித்தருளவேண்டும் என்றிறைஞ்சினர்.

பிரமன் பரிந்தளித்த பாத்திரம் நாக்லோகமடைந்தமையால் இந்திரன் மந்திரிகளான நான்கு தேவர்கள் நான்கு பாத்தி

ரங்களைக் கொண்டுவந்து சுவாமியினிடத்தில் ஒப்புவித்து அகன்ற னர். சுவாமி அப்பாத்திரங்களை ஒன்றின்மீது ஒன்முக வைத்தமாத் திரத்தில் நான்கு பாத்திரமும் ஒன்ருயிற்று, வர்த்தகர்கள் கொடுத்த தேனும், தினையும் அப்பாத்திரத்தில் பெற்றுக் கொண் டனர்.

அன்னமிட்ட வர்த்தகர்களாகிய வள்ளுவர்கள் பகவானைச் சரணுகதியடைந்து விடை பெற்றுக் கொண்டு போனபின், ஸ்ரீ கௌதம புத்தபெருமான் அப்பாலை மரத்தடியிலேயே வீற் றிருந்து தமது ஞானதிருஷ்டியால், சாகரம்போல் அளவின்றிப் பரந்த மகா தருமங்களை நினைந்து நினைந்து, இவ்விதம் யோசிக்க லானுர்.

எனது ஞானத்தால் உணர்துகொண்ட இன் நிர்வாண நிலை யானது, என்னைப்போல் புத்தஞானம் அடைந்தோர்க்கேயன்றி சா மான்யமானவர்களுக்கு அறிந்துகொள்ள முடியாத ரகஸ்யமாய் இருக்கின்றதே, குகையினுள் இருக்கும் பரம ரகஸ்யம், வெளிக்குத் தெரியாவண்ண மிருக்கிறதுபோல் எல்லோருக்கும் எட்டாத பொருளாய் இருக்கின்றதே. எனது ஞானதிருஷ்டியால், இவ் வித கெம்பீரமான தரும ரகஸ்யத்தை அறிவதற்கு, நான் அனந் தங்கோடி ஜென்மங்களாகப் பிறந்து. அன்னதானமளித்தேன், சிரசை வெட்டிக் கொடுத்தேன், மாமிசத்தைக் கொடுத்தேன், இரத்தம் வெட்டி கொட்டிக் கொடுத்தேன், கண்களைப் பிடிங்கிக் கொடுத்தேன். இவ்விதமாக, நான் செய்த அளவில்லா தருமத் தின் மகிமையினுல் அடைந்த புத்தபதவி யென்னும் எனது ஞான ஒளியாலறிந்த, ரூபமற்ற ரகசியப்பொருளாய் இருப்பதால் இதை யாருக்கு உபதேசிப்பேன், இருளடைந்த மானிடர்கட்கு உபதேசித்து யாது பயன்.

மானிடர்கள் தங்களின் பாபகிருத்தியங்களின் பலாபலன்களை, நான் காண்பதுபோல், கண்டார்களானால், அச்ச மேலிட்டால், துற்செயலைவிட்டு, வெறுப்புற்று நல்வழியில் திரும்புவார்களே! கர்வமும், கடுங்கோபமும், மாயாசம்பந்த ஆசாபாசங்களும் அவர்களின் முன் திரைபோல் மறைக்கின்றன. சுகபோகத்தை அடைவான் வேண்டி, துக்கம் பல விளைவிக்கின்றார்கள்; சரீரம் அழிந்தாலும் துக்கம்விட்டு போவதில்லை. அகங்காரமும், ஆசையும் ஒவ்வொரு ஜென்மங்களிலும் தொடர்கின்றனவென்று பிறப்பிறப்பின் மூலரூபமான சம்சார சாகரத்தையும், அதன் காரியங்களையும் பரிக்ஷித்துப் பார்த்து சகல சந்தேகமும் நீங்கிச் சம்பூர்ண ஞானமும், சக்தியும், அனந்த கல்யாண குணங்களுமடைந்து, கர்ம பாசங்களை ஒழித்து, பவக்கடலைத் தாண்டி, நித்தியமாயும், நிரதிசயமாயும், நிரவதிகமாயும், இருக்கும் சதாகால சுகமாகிய நிர்வாண நிலை அடைவதற்கு, யாருளர்? எனக்கருதி அவ்வனத்திலேயே இருந்தருளினர்.

பிரமன் ஆராதனை.

கிரிபால வனத்தில் வீற்றிருக்கும் புத்தபெருமானின் எண்ணத்தையறிந்த "ஸஹம்பத்தி" எனும் பிரமதேவன் ஆச்சரியமடைந்து, ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள இந்திரர் முதலான சகல தேவர்களையும் அழைத்துக்கொண்டு அவ்வனத்தில் புகுந்து பகவானை சாஷ்டாங்கம் செய்து நின்றனர். அளவில்லா ஆனந்த வெள்ளம் பொங்கி மிகுந்த பயபக்தியோடு கரங்குவித்து வணங்கி நிற்கும் இந்திராதி தேவர்களைக் கண்ட புத்தபெருமான் அவர்

களை அதரித்து ஆசிர்வதித்தபின், பிரமதேவன் எழுந்து இவ்வித மிறைஞ்சினர்.

அருள் நிறைந்த அண்ணலே! புத்தி புகட்டவந்த புத்த மாலே! உமது கருணைவெள்ளம் சொரிந்தருளலாகாதா? அனந்தங் கோடி ஜீவராசிகள் தருமாமிர்தத்தை யுண்டு, மூப்பு, பிணி சாக்காடு, எனும் துக்கத்தை யகற்றி நித்தியானந்த நிலை யடையும் வழி திறந்தருளல் வேண்டும். ஐயனே! என்று இறைஞ்சினர்.

உபதேசஞ் செய்வதற் குகந்தவர்களைத் தேடுதல்.

பிரமன் முதலான தேவர்களின் வேண்டுகோளை அங்கீகரித்த புத்தபெருமான் அப்பாலவனத்தை விட்டகன்று செல்லுகையில் யோசிக்கிறதாவது: எனது அருமையான தருமோபதேசத்தைக் கேட்டு ஆதியந்தமில்லா பிறப்பிறப்புகட்கு ஆதாரமாய் இருக்கின்ற, ஆசையெனும் பாசத்தை அறுத்தகற்றி. ஆனந்தமடைவதற்கு உகந்தவர்கள் உண்டோவென ஞானதிருஷ்டியால் பார்த்தபொழுது, முன் ஒருகால் தான் தவம்செய்யப் போகும் பொழுது ஒரு ஆசிரமத்தில் "ஆலாரகாராம" 'உதகராம" என்னும் இரண்டு தபசிகள் தவஞ்செய்தனர் அவர்களிடத்தில், நானும் சில காலம் தவமிருந்தேன் அவ்விருவர்களும் மோக்ஷமடைந்தார்களா என்று பார்த்தபொழுது, அவர்கள் இருவர்களும் மரணமடைந்து "அரூத்தலே" எனும் பிரமலோகத்தில் பிறந்ததேயன்றி நிர்வாண நிலையை அடையவில்லை. ஆனால் இனி யாருக்கு உபதேசம் செய்யலாம் எனக் கருதி கவனித்தபொழுது, தான் ஆறு வருடம் அன்னகாரமின்றி "உறுவலா" வனத்தில் யோகநிஷ்டை

யில் இருக்கும்பொழுது இலை, கனி, ஜலம் முதலியவற்றை தேடி வந்து எனக்கு புசிக்கத்தந்து, நிழலைப்போல் என்னுடன் பிரியா திருந்து, நான் புத்தபதவியடைய மாட்டேன் என்று சந்தேகப் பட்டு பிரிந்து போனவர்களாகிய ஐவர்களைத் தேடிச்சென்று, அவர்களுக்கே முதன்முறை உபதேசம் செய்ய வேண்டுமென்று உறுதிகொண்டு, அவிடம் விட்டுக் காசி நகரமடைந்து, அந்நகர் வழியாகச் செல்லும்பொழுது "உபகஆஜீவக்க" என்பவன் எதிர்ப்பட்டான். அவன் பஞ்சவர்ண ஒளி பிரகாசிக்கின்ற அருளாளனைக்கண்டு, ஆச்சரியமடைந்து ஐயனே! உம்மைக் கண்டால், சந்திரனை வெல்லும், சௌமிய குணமும், சூரியனுக்கும் அதிக மான தேஜஸும், மகாமேருவைப் போன்ற சஞ்சலமில்லா நெஞ் சமும், உமது பிரமபிம்பம்போன்ற திவ்ய தேகமும் பார்த்த நான் அளவில்லா ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன் சுவாமி! நீங்கள் எங்கு போகின்றீர்கள்?

அதற்கு புத்த பெருமான் அன்பனே மகாமேருவுக்கு மேலான பர்வதமுமில்லை அலைகடலுக்குமேல் பெரிய கிணறுமில்லை பூமிக்குமேல் பெரிய மண் குவியலுமில்லை, வானத்திற்கு மேல் பெரிய வாணமுமில்லை நானோ சர்வக்ஞ ஞானமும் பெற்று "ததா கதராகினேன்", எனக்கு மேலான ஒரு பெரியவர்களுமில்லை, திரி லோகவாசி மக்களுக்கும் தர்மாமிர்தத்தை ஊட்டப்போகிறேன். "பாராணசி" நகரில் "இசிபத்தனு" ஆசிரமத்திற்குப் போகிறேன் என்றனர். அதற்கு ஆஜீவக்க என்பவன் சுவாமி! அப்படியா னால் ஒரு காலத்தில் உங்களைத் தேடிவருவேன், அக்காலத்தில் எனக்கு உதவிபுரிய வேண்டும், என்றதும் நீ வரும்பொழுது "அனந்தஜினன்" எங்கே என்று கேட்டால் என்னைக் கண்டு கொள்ளலாம் எனச் சொல்லி, அவனுக்கு விடைகொடுத்து

அவிடம் விட்டகன்று, புத்த பெருமான் ஐவர்கள் இருக்கும் ஆசிரமத்தை நோக்கி எழுந்தருளினர்.

திரிலோக நாயகமாகிய புத்த பெருமான் எழுந்தருளு வதைக் கண்டு யாவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வ தாவது, அதோபாருங்கள் யோகிகளே! "ஸித்தார்த்த கௌதமர்" உறுவலா வனத்தில் ஆறுவருடம் கடுந்தவமிருந்தும் புத்த பதவி யை அடைய முடியாமல் அவ்வெண்ணத்தை விட்டு அகன்று பெரியவர்களிடம் சென்று நன்ருய் புசித்து, அவரின் தேகம் நன்ருய் கொழுத்திருக்கின்றது, அவர் அரசகுலத்தில் பிறந்த படியால் அரசர்களின் அரண்மனைகளில் அறுசுவையொடு உண் டிருப்பார், அதுவே இவ்வளவு தேககாந்தியும், மகிமையும் தோன்றுகிறது; இப்போது நம்மைத் தேடிவருகிருர் வந்தால் வரட்டும் அரச குமாரனுக்கு ஆசனமிடுவதன்றி, வணங்கவோ, முன்போல் அவரைத் தொடர்ந்து செல்லவோ கூடாது எனப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் பகவான் அங்கு எழுந்தருளி ஞர்.

அப்பொழுது சிலர் ஓய் வாரும், உட்காரும். நீர் இது வரை எங்குபோனீர் என்றனர். அதைக்கேட்டு அவர்களின் உள்ளமறிந்த சர்வக்ஞர் அண்டபிண்ட சராசரங்கள் எங்கும் ஜொலிக்கின்ற மகா கருணைவெள்ளத்தின் மகிமையினுல் ஐவர் களின் மனங்களை வெண்ணெய்போல் உருகும்படி செய்தார்.

உடனே பெருமானின் தேஜஸ் ஒளியில் வயப்பட்டவர் களாய் ஒருவருக்கொருவர் எழுந்து வியர்த்து, பதைபதைத்து நடுங்கி, ஒடுங்கி, ஓடிச்சென்று பெருமானுக்கு ஆசனமிட்டு அடி

பணிந்து அமருங்கள் சுவாமி என்றனர். அவ்வாசனத்தில் புத்த பெருமான் வீற்றிருந்து, ஐவர்களுக்கும் இவ்விதமருளினர்.

பாளி ஸ்லோகம்.

மாபிக்கவே ததாகத்தங் நமே
நச்ச ஹாவுசோ வாதேன நச்ச
சமுதா சரத்த அரஹங் பிக்கவே
ததா கத்தோ சம்மா சம்புத்தோ.

பொருள்.

ஐவர்களே! என்னை பெயரிட்டும், ஓய் வாரும் இரும், என்றும் சொல்லத்தகாது. இப்பொழுது நான் தத்தா கத்த ராகினேன், சர்வக்ஞராகினேன் என்றருளின உடன் ஐவர்களும் திடீரெனப் பயந்து நடுநடுங்கி சிங்கத்தைக் கண்டஞ்சும் யானையைப்போல் வாய் பொத்தி, மூச்சு பேச்சற்று ஒடுங்கிநின்றனர்.

அவ் வேளையில் அனந்தங்கோடி புத்தர்களும், முதன் முறை உபதேசம் செய்தருளப்பட்ட பூமி அவ்விடமாய் இருந்தமையால் அங்கு பகவானுக்கு ஓர் புத்தாஸனம் தோன்றியது. அவ்வாசனத்தில் உதயகிரி சூரியப்பிரகாசம்போல் பெருமான் வீற்றிருந்தனர். பகவான் தேகத்திலிருந்து ஜொலிக்கும் பலவர்ணமான ஜோதிப் பிரகாசமானது அண்டங்கள் எங்கும் பிரகாசிக்க தொடங்கிற்று, அப்பொழுது அந்திநேரமாய் இருந்ததால் இருளாகிய பெண் நக்ஷத்திரங்களாகிய முத்துமாலையை யணிந்து, நீலவர்ண கேசத்தை அவிழ்த்துவிட்ட வண்ணமாய், திசைகளெனும் கரங்களுடன், சந்திரோதய ஒளியெனும் ஆடை அணிந்து, பிரமலோகமெனும் முடிதரித்து, திரிலோகமெனும் தேகம் குலுங்க, கிழக்கிலும், மேற்கிலும், சூரிய சந்திரர்களாகிய தோடுகளைக் காதில் தரித்து, மின்னல்போன்ற கண்களை விழித்து வண்டுகளின் ரீங்கார கீதம் எனும் வீணை தரித்து நமது பெருமானின் முதன்மையான தருமோபதேசத்தைக் கேட்டானந்திக்க ஆயித்த

மானதுபோல் தோன்றிற்று. (இது எசல மாதம் பௌர்ணமி யன்று) அல்லது (ஆடி மாதம் உத்தர நக்ஷத்திர முகூர்த்தத்தில்) பகவான் முன் அவதாரம் செய்துள்ள எல்லா புத்தர்களும் முதன்முறை செய்தருளுகின்ற மங்கள தருமோபதேசங்களைச் செய்தருள ஆரம்பித்தனர். (தொடரும்)

புத்தசமயத்தின் சங்கமர்கள்.

ஸ்ரீ புத்தபிரானின் அறுபத்துநான்கு சமயகுறவர்களாகிய சிஷர்களில் முக்கியமானவர்கள் நால்வருண்டு அவர்களாவன: சாரிபுத்திரர் அல்லது ஸெரியுத்சாமி, மௌத்கல்யான அல்லது முகளன்சாமி, காக்ஷ்பர் அல்லது காக்ஷ்பசாமி, ஆநந்தன் அல்லது அனந்தசாமி இந்நால்வரும் புத்தராஜ சபையின் நான்கு கோணங்களிலும் பக்தி விசுவாசத்துடனமர்ந்தவர்களாய் ஸ்வாமியின் ஆஞ்ஞா கட்டளையை எதிர்பார்த்த வண்ணமாய் அமர்ந்திருப்பவர்கள். ஸ்வாமி காலாலிட்ட கட்டளையை சிரமேல் கை குவித்து செய்பவர்கள். இந்நால்வரில் ஆனந்தனென்பவர் புத்த நாயகம் திருவாய் மலர்ந்தருளும் சகல தர்மங்களையும் மனப்பாராயணம் செய்து மற்றொருமுறை ஸ்வாமியை வினவாமலே பிறருக்குபதேஸம் செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவர். இவர் பகவானின் பல்வேறு ஜன்மங்களிலும் பகவானின் சிஷராகவே தொட்டு வந்தவர், இவர்களின் வரலாறுகளைப்பற்றி பின் பிரசுரிக்கப்படும் இரண்டாம் காண்டத்தில் விபரங்களை எழிதில் வாசித்தறியலாம். ஸ்ரீ புத்தர் புராணமெனும் இந்நூலை அதிகப்பிரயாசையுடன் பாளி, சிங்களமெனும் பாஷைகளிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு பொதுஜனங்கள்பால் கொடுத்துளோம். இதேபோல் இரண்டாம் மூன்றும் பாகங்களையும் எழுத உத்தேசித்துளோம். இந்நூலை சொற்சுவை திருத்திய யாழ்பாணம் திரு மூ. க. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும், பிள்ளைவாளை அறிமுகமளித்த கனவான் S. தேவசிகாமணி அவர்களுக்கும், இந்நூலை இயற்றுவதற்காக எழுத்தாதார உதவியாயிருந்த கோட்டாறு கனம் S. S. நாதன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பூர்ண நன்றி என்றென்றுமுண்டாகுக. இப்பெரும் புண்ய கிருத்தியத்திலீடுபட்ட சகல கனவான்களும் இகபரமோட்ச சாம்பிராட்சய சம்பண்ணர்களாகவும், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் நிரந்தர சம்பத்து முடையவர்களாக வாழ்குகவென பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம், கே. கோவிந்தசாமி பிள்ளை, போதகர்.